உ

சிவசம்புப் புலவர்

பிரபந்தத் திரட்டு

முதற்பாகம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

இஃது

ஆரிய திராவிட பண்டிதர்

திரு. செவ்வந்திநாத தேசிகர்

அவர்களால் திரட்டப்பெற்று,

"ஈழகேசரி" அதிபர்

[illegible]. பொன்னையா அவர்களால்

வெளியிடப்பட்டது

1939 [ரூபா ஒன்று

811.6
சிவ
S-1pr

34661

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்

பொருளடக்கம்

பதிப்புரை	
முகவுரை	
நூலாசிரியர் வரலாறு	
பாற்கரசேதுபதி கல்லாடக் கலித்துறை ...	௧
பாற்கரசேதுபதி நான்மணிமாலை	௩௯
பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை	௬௩
மயில்வாகன வம்ச வைபவம்	௮௧
பிரபாவப் பாமாலை	௧௦௧
பருத்தித்துறைக் கலித்துறை ...	௧௧௩
வல்வைக் கலித்துறை	௧௧௯
தனிச் செய்யுள்கள்	௧௨௫

பதிப்புரை

ஆரிய திராவிட பண்டிதரும், எமது அத்தியந்த நண்பரும், சைவாசாரியருமாகிய கருணைவாய், திரு. செவ்வந்திநாத தேசிகரவர்களின் வேண்டுகோட்படி "சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு" என்னும் இந்நூல் அச்சிடப்படுவதாயிற்று.

இதனை அச்சேற்றி வெளியிடுமுன்னரே தேசிகரவர்கள் அந்தோ! தேகவியோகமாயினர். ஸ்ரீமத் தேசிகரவர்களின் ஆவல் பூர்த்தியாதல் வேண்டுமென்னும் அவாவினாலும் அவர் சகோதரர் ஸ்ரீமத் கைலாயநாத தேசிகரவர்களின் ஊக்கத்தாலும் எஞ்சிய பகுதிகளையும் கிடைத்த அளவிற் சேர்த்து அச்சிடலானேம். புலவரவர்களாற் பாடப்பெற்ற அநேக பாக்களும் உரைகளும் இன்னுமிருக்கின்றன. அவைகளும் திரட்டப்பட்டு இரண்டாம் பாகமாக வெளியிடப் பெறின் மிகவும் பயன்படும்.

'திருமகள் நிலையம்'
மயிலிட்டி தெற்கு
பிரமாதி – ஆனி

நா. பொ.

முகவுரை

எமது தந்தையாரும், சிறிய தந்தையாரும் நெடு நாளாகப் புலவரவர்களிடத்துக் கற்றவராகலின், பிற்றை ஞான்று அவரா னியற்றப்பட்ட நூல்கள் சில அவர்களா லெழுதப்பட்டுச் சிதைவு சிறிதுமின்றி ஏனைய நூல்களோடும் எம்மில்லத்துச் சேகரிக்கப்பட்டிருந்தன. யாம் கற்றற் பொருட்டு வேறு சில நூல்களை யாங்குத் தேடியபோது அந்நூல்கள் சில அகப்பட்டன. அவற்றை நோக்கிய விடத்து அவை புலவரானியற்றப்பட்டன வென்றும், அச்சேருதனவென்றும் அறியப்பட்டன. அப்பொழுது அவற்றை அச்சாக்கவேண்டுமென்னுங் கருத்து எமக்கு எழுவதாயிற்று. இது சிலவாண்டுகட்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சி.

இஞ்ஞான்று பண்டைநாணிகழ்ந்த அவ்வண்ணம் மறுபடியும் தோன்றியமையின் அது நிறைவேறுமாற்றைப்பற்றிச் சிறிது ஆலோசித்தோம். அப்போழ்து புலவரா னியற்றப்பட்டு அச்சேறிய நூல்களும் இஞ்ஞான்று பெறற்கரியவாயிருத்தலின் அவரா னியற்றப்பட்ட வெல்லா நூல்களையும் தொகுத்து ஓர் பிரபந்தத் திரட்டாக வெளியிட வேண்டுமென்னுந் தீர்மானம் உண்டாயிற்று. அதனல் புலவரவர்களின் மருகரும் மாணக்கருமாகிய உடுப்பிட்டி சு. ஆறுமுக உபாத்தியாயரவர்களை இவ்விஷயத்தில் எமக்குத் துணைபுரியுமாறு கேட்டனம். அவர்களு மதற்கிசைந்து தம்பாலிருந்த நூல்களை யெமக்களித்தும் அவற்றை அச்சிடுதற்கு வேண்டிய பணத்தி லொருபகுதியையும் புலவரவர்களின் மாணக்க

ரும் பிறருமாகிய சான்றோர்பாற் பெற்றளித்தும் மிக்க உதவி புரிந்தார்கள்.

அவர்பால் உதவிபெற்ற யாம், அதனால் ஊக்கமுற்றோமாய் புலவரவர்களின் நூல்களுள் எமக்குக் கிடைத்த வெல்லாவற்றையும் ஒருங்குவைத்து நோக்கி மக்கள்மீது இயற்றப்பட்ட நூல்களையும் தனிச் செய்யுட்களையும் முதற்பாகமாகவும், கடவுள்மீது இயற்றப்பட்ட நூல்களையும் தனிச்செய்யுட்களையும் இரண்டாம்பாகமாகவும் தொகைப்படுத்தியதோடு புலவரவர்களின் வரலாற்றையும் எழுதிச் சேர்த்துள்ளேம். கிடைத்தவற்றுள் சிதைந்து போன பகுதிகட்குப் புள்ளியிடப்பட்டுள்ளன. திரட்டில் அகப்படாத நூல்களையும், இதனுட் காணப்படும் பிழையின் திருத்தங்களையும் பெரியோர்கள் உதவுவாராயின் அவற்றை நன்றியதலோடுமேற்று மறுபதிப்பில் வெளியிடச் சித்தமாயிருக்கிறேம்.

இப் பிரபந்தத்திரட்டை, இதற்கு வேண்டிய காகிதத்திற்குரிய பணத்தொகையை மாத்திரம் பெற்றுக் கொண்டு விரைவாகவும் திருத்தமாகவும் அச்சிட்டுதவ முன்வந்த சுன்னாகம் "ஈழகேசரி"ப் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்கட்கு எமது உண்மையான நன்றியை நன்கு தெரிவித்துக்கொள்ளுகின்றேம். எம் வினைப் பயனை இந் நன்முயற்சிமூலம் நுகர்வித்தமைக்காக எம் பெருமான் றிருவடியை எஞ்ஞான்றும் நன்கு சிந்திக்கின்றேம்.

திரு. சேவ்வந்திநாத தேசிகர்

நூலாசிரியர் வரலாறு

இவர் சாலிவாகன சகாப்தம் ௧௭௫௨-ல் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சார்ந்த உடுப்பிட்டியிலே பெரும் பிரபுவாயிருந்த அருளம்பல முதலியாருக்குப் புதல்வராய் அவதரித்தவர். இருபாலைச் சேனாதிராய முதலியாருடைய மாணாக்கராய் விளங்கிய நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடத்தும் அவர் மாணாக்கராய் விளங்கிய நல்லூர்ச் சம்பந்தப் புலவரிடத்தும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும், இராமாயணம் பாரதம் முதலிய இலக்கியங்களும் பிறவும் கற்றுணர்ந்தவர். இளமை தொடங்கிக் கவி பாடும் சாமர்த்தியமுமுடையவர். ஈழ மண்டலத்திலே பிரபந்தம் பாடியவர்களுள் இவரே அதிகமான பிரபந்தம் பாடியவர். தன்மேற் கவி பாடிவரும் பாவலர்களுக்கெல்லாம் புட்கலாவர்த்தமென்னப் பொன்மழை பொழியுங் காவலரும், செந்தமிழ்ப் புலவர்கள் கூடிய சங்கங்களில் சிங்கம்போல் நின்று பிரசங்கஞ் செய்யும் நாவலரும், செந்தமிழ் மொழி அபிமான சீலருமாகிய இராமநாதபுரம் ரவிகுலமுத்து விஜயரகுநாத பாஸ்கர சேதுபதி மகாராசாவின்மீது கல்லாடக் கலித்துறையும், நான்மணிமாலையும், இரட்டைமணிமாலையும் வேறு தனிக் கவிகளும் பாடிச்சென்று அவர் முன்னிலையிலே ஸ்ரீமாந் ரா. இராகவ ஐயங்கார் முதலிய வித்துவான்கள் கூடிய சபையில் அரங்கேற்றி அவர் மதிப்பும் பரிசிலும் பெற்றவர். பொன்னுச்சாமித் தேவரவர்கள் அருந்தவப்புதல்வரும் மதுரையின்கண் இப்பொழுது நிகழும் தமிழ்சங்கத்தைத் தாபித்தவரும் செந்தமிழ்க் கலைஞருமாகிய ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் மேலும் ஒரு நான்மணிமாலை பாடிப் பரிசிலும் பெற்றவர். இவையன்றி இந்தியாவிலும் ஈழ மண்டலத்திலுமுள்ள சில ஆலயங்கள்மீதும் பல பிரபந்தங்கள் பாடியுள்ளார். வேறும் பிரபுக்கள்மீதும் சில நூல்கள் இயற்றியுள்ளார். இவரியற்றிய பிரபந்தங்கள் எறக்குறைய அறுபது வரையிலுள்ளன. அவற்றின் பெயர்கள் ஈண்

டுக் காட்டப்புகின் விரியுமென்றஞ்சி விடுக்கின்றோம். பாடும் வன்மை நோக்கி இவருக்குப் புலவரென்னும் பெயர் நாவலராற் கொடுக்கப்பட்டதென்பர்.

இவர் மேற்கூறிய பிரபந்தங்கள் முதலியவற்றை இயற்றியதேயன்றி, சில நூல்களுக்கு உரையும் இயற்றியுள்ளார். அவற்றுள் அச்சிட்டு வெளிவந்தன மறைசையந்தாதியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல வுரை முதலியன.

அக்காலத்திலே இவரிடத்துக் கற்று வித்துவான்களானவர்கள் பலருளர். அவருட் சிறந்து விளங்கியவர்கள் வல்லுவெட்டித்துறை, இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்திலிங்கம்பிள்ளையும், அவ்வூர் த. அருணசலம்பிள்ளையும், புலோலி, ம. தில்லைநாத நாவலரும், வ. குமாரசுவாமிப் புலவரும், அ. வேல்மயில்வாகனச் செட்டியாரும், தும்பளை, ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்களும், கரணவாய் தெற்கு, தி. ஞானப்பிரகாச தேசிகரும், கை. திருஞானசம்பந்த தேசிகரும், கை. நமசிவாய தேசிகரும், அல்வாய், நொத்தாரிசு இ. ஆறுமுகம்பிள்ளையும், பொலிகண்டி, வே. சிதம்பரப்பிள்ளையும், மந்துவில், ஆசிரியர் வயித்தியலிங்கச் செட்டியாரும் முதலாயினோர்.

இவர் தமது தந்தையின் குலப்புதல்வராகிய கோப்பாய் அம்பலவாண முதலியார்மீதும், அவர் புத்திரரும் சமாதான நீதிபதியுமாகிய மயில்வாகனம் அவர்கள்மீதும் மிகுந்த அன்பும் மதிப்புமுடையவர். மயில்வாகனம் அவர்கள் தேகவியோகமான காலத்து அவர்மீது மயில்வாகன வம்ச வைபவமென்னும் ஒரு நூலும் இயற்றியுள்ளார்.

இத்தகைய இப்புலவர்பெருந்தகை சாலிவாகன சகாப்தம் ௧அ௩௧-க்குச் சமமான சாதாரண வருஷம் புரட்டாதி மாதம் ௧௩-ம் திகதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

குகமயம்

இராமநாதபுரம்
பாற்கரசேதுபதி
கல்லாடக் கலித்துறை.

காப்பு

வில்லாடன் மேருவில் வைத்தோன்
பொன்மன்றில் விழைந்துசெபு
நல்லாட னுடிடும் பாற்கர
சாமி நரேந்திரன்மேற்
கல்லாட நூலின் கருத்தை
யமைத்துக் கலித்துறையாச்
சொல்லாட வோர்மருப் பைங்கரத்
தும்பி துணைவருமே.

தேங்குமெய்த் தண்ணளி யோவாத
வாறு திருமுகமும்
வீங்கு மிராறு புயவெற்பு
நாட்டமு மேனிலைச்சீ
ரோங்கு மடிகளுஞ் சேயோன்
மயிலு முடம்பிடியும்
யாங்குமென் றுந்தமி யேன்கண்ணி
னெஞ்சி னிலங்குவவே.

நூல்

தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்

சீர்முந்து பாற்கரன் வெற்பிற்
கறுத்துச் சிவந்தவிழி
வார்முந்து கொங்கை பணைத்தவொல்
கிற்றிடை மாமகடன்
றார்முந்து மோதி யிருண்ட
துரைப்பத் தமரிற்செறிப்
பேர்முந்து மன்னசிற் றார்ச்சொற்
சிலபல வேறியவே. (௧)

தாயறிவு கூறல்

நொச்சியம் பூவுதிர் நள்ளிரு
ளாட்கழி நுன்னன்பர்த
மச்சியல் கூவிரந் தோற்றஞ்செய்
தென்றெனை யன்னைதெரீஇ
நச்சிய லைச்சினந் தோதாள்
புறத்தி னனிதுடித்தாள்
கச்சியல் பூண்முலை பாற்கர
சாமி கனவரைக்கே. (௨)

வழியொழுகி வற்புறுத்தல்.

பொன்னனை யாய்புகழ்ப் பாற்கர
பூபன் பொருப்பினின்பா
லின்ன னிரப்பினர்க் கீயவெங்
கான மிறந்தவர்க்கு
மின்னணி வாட விழிவெள்ளத்
தாழ்ந்த மெலிவுகண்டாற்
கன்னலந் தேமொழிக் குற்றதென்
னென்று கடுப்பர்களே. (௩)

பிரிவருமைகூறி வரைவுகடாதல்

மான்கா டினைகொய்யக் காலங்
குறித்து மலர்ந்தகணி
கான்கா ணிருவியி னன்றிகொல்
லாரிற் கலந்தபுள்ளுந்
தேன்கா னிமிர்தொடைப் பாற்கர
னன்பினிற் றீர்ந்தவர்போல்
வான்கா முறுமனைக் கேகவும்
யாமுள் வலித்தனமே. (௪)

இளமைகூறி மறுத்தல்

முருந்து நிரைத்தபற் றேன்றுதெய்
தாது முடியளக
மருந்துற ழின்சொற் றிகழாது
நோக்கியல் வாய்த்திலகண்
டிருந்து முலைபொடி யாதிரப்
பென்னிச் சிறுமிதன்பால்
விருந்து புரந்தருள் பாற்கர
சாமிதன் வெற்பண்ணலே. (௫)

சுவடுகண்டறிதல்

புலிவாய மாக்கடிப் பீதிது
கற்பிற் புளினர்படை
நலிவாகத் தீய்த்த திவண்டுய்
நறுமலர் நற்றவத்தோர்
பொலிவாக வாசி புகன்றது
பாற்கரன் போற்றலர்போ
மெலிவார் சுரத்தழன் மாற்றிய
காற்குறி மெய்யிதுவே. (௬)

நற்றாய்வருந்தல்

இன்பெடுத் தோம்பிற நிற்கமெய்
யாவி யியல்சகியா
முன்பெடுத் தாளையுந் தீர்ந்தரும்
பாத முலையொருவ
னன்பெடுத் தாண்டகைப் பாற்கரன்
றெவ்வி லயாவிவ்வூர்
துன்பெடுத் துள்ளியைந் தாளோ
செலவெஞ் சுரத்தினிலே. (௭)

செலவுநினைந்துரைத்தல்

எல்லாரு மேத்திடும் பாற்கர
சாமி யெழில்வரையி
னல்லார் தருநடு நாளரி
தாக வடைந்திரென்றோர்
சொல்லார்வ மாய்நம் மெதிர்ப்பின்றி
யன்பரிற் றோன்றிடுமே
னில்லாம லங்கட் செலவு
முரிய நிரைவளையே (௮)

அறத்தொடுநிற்றல்

சாய்ப்பாவை தந்துமொண் பூழியஞ்
சோறுண்டுந் தந்துஞ்செங்கை
தாய்ப்பா யலையுந்திக் கைதை
முறித்திட்டுந் தார்கொளச்செவ்
வாய்ப்பாவைக் கிந்துநின் றூர்நிற்க
வீது மதிக்கவற்றோ
வாய்ப்பாடி வாழ்கண்ண னேர்தரும்
பாற்கர னத்திரிக்கே. (௯)

தேர்வரவு கண்டு மகிழ்ந்து கூறல்

நீதி யடைந்திடும் பாற்கர
வேள்வெற்பி னேரிழையீர்
சோதி யடைந்த வயிற்பெரு
மானைத் தொழுமன்பர்தேர்
வீதி யடைந்த துருட்பூழி
யாடுமின் மெய்யிசைப்பா
வோதி யடைந்தலர் தூமினும்
மேத மொழிமின்களே. (௧௦)

கல்விநலங் கூறல்

உந்தியு மேருவு மைந்தரு
வுங்கண்ணு மோங்கருளு
முந்திய மூவரு மாங்கல்விச்
செல்வத்தர் முத்தமிழ்க்குத்
தந்தியும் வாசியும் தந்திடும்
பாற்கரன் சையமின்னே
செந்தியில் வேளருள் பெற்றூரி
னீடுவர் சீர்மதியே. (௧௧)

முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல்

தருவே மெரியதர் தீர்ந்தங்
கெயிற்றியர் தங்குரம்பை
மருவேனன் மாத்துய்த் திபவெயிற்
றிற்றலை வைத்ததண்மே
லிருவேமும் பாற்கரன் றேவையன்
னுய்நுக ரின்பினுக்குப்
பொருவேலன் றூளுறு மின்பே
யலது பொருந்திலதே. (௧௨)

நிலவு வெளிப்பட வருந்தல்

வெள்ளிய மாமதி தாழ்ந்தேநம்
பாற்கர வேந்தர்பிரான்
றெள்ளிய சீரிலெங் குந்திகழ்
வாயொன்று செய்நன்றியுண்
டுள்ளிய லன்பர்கண் ணன்னார்நங்
கண்மு னுறுநடுநா
ளொள்ளிய வாலறி வுற்றமைந்
தாரி ஞெடுங்குதியே. (கங)

வரவெடுத்துரைத்தல்

அயல்வா யலரெஞ்ச நீயே
மடமக ளன்பர்பகை
முயல்வார் வெருவிட வேனெ
ரிடுதிறை முற்றுங்கொளீஇ
வியல்வாய தேர்க்குமுன் ரேன்றலிற்
பாற்கரன் வெற்பன்னமே
புயல்வாழ் மனைமுற்றுங் கோடிக்க
பூணுக பூண்பனவே. (கச)

அழுங்கு தாய்க்குரைத்தல்

போக்கிய தாயுளந் தீதிரு
வோரும் புணரமணந்
தேக்கிய விம்மனை சேர்ந்து
வரும்வழி தேர்ந்துசொன்ன
வாக்கியல் வேத மகனும்
பிறரும் வழாநிலையோர்
பாக்கிய மெய்தின ரூறிலை
பாற்கரன் பாதவத்தே. (கரு)

வெறிவிலக்கல்

செந்தமிழ் வாணர்ப் புரந்திடும்
பாற்கரத் தென்னன்வெற்பிற்
கந்த மலர்ப்பொன்னை யாரீர்த்
திடாதுமுன் கைதந்தவர்
தந்த மயலு மிருக்க
மறியின் றசைமிசைய
வந்ததெய் வங்கற்ற போதம்
பொருதொர் மனமிடமே. (கசா)

உலகியல் புரைத்தல்

இக்காரம் பண்ணை மலைபிறர்க்
கீவ வெழிலுமைமா
மைக்காலன் றெவ்வரி பின்போகக்
கல்லத்தி மாழ்கிற்றில
மிக்கார் பரவிடும் பாற்கரன்
கற்கட மெய்யன்பன்பின்
புக்காளுக் கூருண்டி விட்டழல்
பேதைமை பொற்கொடியே. (கஎ)

மகிழ்ந்துரைத்தல்

வில்லுயர் மாமணிப் பூணணி
பாற்கர வேந்தன்வெற்பிற்
கல்லுயர் திண்புயத் தார்தந்த
வீர்ந்தழை கற்பினியல்
வல்லுயர் பொன்முலை யாளிடைத்
தேற்றிட வாட்டமுறு
தில்லுயர் மங்கலம் பூணுந்
துணையு மிலங்கியதே. (கஅ)

பிறைதொழுகென்றல்

மணிவான் மருமன் றுயில்பாற்
கடலிடை வந்தழுதோ
டணிவா னுலாய்நின் னுதலொத்
தரன்சடை யண்மிக்கொன்றைக்
கணிவாசந் தோய்ந்துதண் கங்கை
படியுங் கதிர்ப்பிறையைப்
பணிவாழி பாற்கர சேது
பதிவரைப் பைங்கிளியே. (கக)

ஆற்ருமை கூறல்

வனைதரு பொன்முடிப் பாற்கர
னுட்டன்ப வான்பொருட்கு
நினைதரு மெண்ணிற் படர்திவெவ்
வாடை நெருப்பெழுநா
ளினைதரு நெஞ்சிற் புலம்புறு
நம்மெல் லியற்கடைத்த
வினைதரு மாறன்றிக் காணேன்
புனைந்து விடச்சொற்களே. (உ0)

தன்னுட்கையாறெய்திடுகிளவி

புன்னைப் பொதும்பரிற் றம்முட்
பனைமடிப் பூவெகின
மின்னைப் பொருமயிற் பாற்கர
னுட்டுற மெய்க்கரியா
வென்னைப் புணர்ந்தவர் போக்குமற்
றீங்குழி யெய்துவது
முன்னைப் பதம்பணிந் தேன்றெரிந்
தாற்சொல் லொளிர்மதியே. (உக)

வேறுபடுத்துக்கூறல்

என்னுவி யுங்கண்ணு மன்ன
ளொருத்தி யெறிசுனைபின்
முன்னுட வுற்றன ளுக்குறு
வேர்வன்றி முற்றியனு
மன்னுளொ டொத்தி கணமிரு
மேவுமிங் காடுமலர்ப்
பொன்னு ரிருவ ரெனப்பாற்
கரன்வரைப் பூங்கொடியே. (உஉ)

காமமிக்ககழிபடர்கிளவி

கைதாய் பெருங்கழி யேகுரு
கேதிண் கருங்கடலே
மெய்தான் றழுவிய தண்ணந்
துறைவற்கிம் மெல்லியலுள்
வெய்தா வுடைந்தனள் பாற்கரன்
வெற்பில் விழியருவி
பொய்தாளென் னென்றெனக் கேளீர்மெய்க்
கேண்மை பிழைத்தனிரே. (உங)

இடமணித்துக்கூறிவற்புறுத்தல்

மாணிலை வேலற்கு மன்பர்க்குங்
கும்ப வாமுனிக்கு
நீணிலை யாய தமிழுக்கு
மாக நிகழெல்லைதான்
வாணிலை யுற்றநம் மூர்க்குநம்
மூர்ப்பொன் மலைக்குநங்காய்
சேணிலை யுள்ள நடுங்கலை
பாற்கரன் றெவ்வரினே. (உச)

நின்குறைநீயேசென்றுரையென்றல்

ஈயா வுலோபர் பொருளெனத்
தேய்ந்த விடையிறச்செய்
சாயா முலையை மருவிக்
கரவுந் தகையுமன்பு
நீயா வுரைத்துட னேர்விப்ப
தேதகு நீர்மைவள்ளால்
வீயாத வான்புகழ்ப் பாற்கர
சாமிதன் வெற்பினிலே. (௨௫)

இரவுக்குறிவேண்டல்

புண்ணிய மேதகைப் பாற்கரன்
வெற்பிற் புயல்பெய்கின்ற
தெண்ணியல் கல்வியி லாருளம்
போல விருண்டதெங்குந்
திண்ணிய யானை புலியரி
தாரி திரிவநும்மூர்க்
கண்ணிய நல்விருந் தாயினன்
காண்முருந் தாநகையே. (௨௬)

நகரணிமைகூறல்

உவந்தானெய் யுண்டவ னன்னீரும்
பொன்னொத்த வொள்ளிழையு
மவந்தா னில்லாவிம் மலைகடந்
தான்முன் னடைந்திடுவீர்
தவந்தா னுஞற்றுந் தவமா
யுதித்த தனுதுளத்தைச்
சிவந்தான் கொளத்தந்த பாற்கரன்
றேவைத் திருநகரே. (௨௭)

அறியாள்போன்று நினைவுகேட்டல்

இரப்பார்கள் யாயெனும் பாற்கரன்
வெற்பி லெறிவர்கவண்
டுரப்பார்கள் கந்துக மேற்பா
ரருவி சுனைகுடைவார்
புரப்பார் தினைசெம் மணிகொழிப்
பார்கடிப் போதுகொய்வார்
சரப்பார்வை யார்பலர் யார்கணின்
னூர்வந் தாராதிபனே. (௨௮)

சுடரோடிரத்தல்

எங்கோதை யாமுங் கிளிமுதல்
யாவு மினையக்கடத்
தங்கோர் விடலைபின் சென்று
ளவட னகமுங்கண் ணுங்
கொங்கோ வருமலர்த் தாமரை
போலக் குளிரச்செயாய்
செங்கோன்மைப் பாற்கரன் சீரினெங்
குந்திகழ் செஞ்சுடரே. (௨௯)

இன்னலெய்தல்

குகன்று ளிறைஞ்சிடும் பாற்கரன்
வெற்பிற் குறிகள்பல
புகன்றுரும் யாயரு மாறில
வேலென் புரிவர்வைவேன்
மகன்று னயர வெறிநோயும்
பீரமு மல்கலுறு
தகன்று லுயிர்நிகர் வாரித்
துறைவற்கென் னுதுநெஞ்சே. (௩0)

நெஞ்சொடுநோதல்

பொன்னுசை யாற்றள்ளிக் கான்றடைங்
தெண்வழிப் பூவையங்க
மன்னுசை யாற்பொரு ளீட்டுதன்
மாறி மருளுநெஞ்சே
துன்னுசை யெட்டும் புகழ்ந்திடும்
பாற்கரத் துங்கன்வெற்பி
லென்னுசை சொல்லுமுன் னேற்செல்லு
மீடிபின் னென்றிடினே. (௩௧)

வேழம் வினுதல்

நம்பிவந் தார்க்கருள் பாற்கரன்
வெற்பி னளிினையன்னீர்
தும்பியும் புள்ளும் புயலும்
பிடியுந் தொடராமுனை
யம்பி னரற்றிக் குழிகட்
டழைசெவி யாம்பலொன்று
கொம்பி னிலங்கிளைத் துற்றது
வோநுங் குளிர்புனத்தே. (௩௨)

உலகின்மேல் வைத்துரைத்தல்

திரங்கொண்ட வாசகப் பாற்கரன்
வெற்பினிற் செம்மகளி
ரரங்கொண்ட கட்டெய்வக் காட்சிப்
பட்டோர்க ளணிங்கெருக்கு
வரங்கொண்ட வெண்பொடி பூசுபு
பூண்டு வறியவெண்பு
கரங்கொண் டருங்கிழி யூர்வர்
பனைமடற் கந்துகமே. (௩௩)

அல்லகுறியறிவித்தல்

பார்ப்பணைக் கும்பெடை யோடுசெங்
காலனம் பாயும்வையை
நீர்ப்பணைத் தேவைப் பதியோம்பும்
பாற்கர னேரலரிற்
கார்ப்பணைப் புன்னைக் குடம்பையின்
வைகறை காறுந்துஞ்சா
தேர்ப்பணைத் தோளி யழுங்க
வலமர லென்னுற்றதே. (௩௪)

நலம்புனைந்துரைத்தல்

சாலக் களியுற நீர்விழும்
பூவுட்சஞ் சாளிகங்காள்
கோலக் குகன்றனைப் பாடிடு
மன்பர் குறைதவிர்க்க
ஞாலக்கண் வைத்தருள் பாற்கரன்
றேவைநன் னுடனையார்
நீலக் குழன்மணம் போலவுண்
டாயி னிகழ்த்துமினே. (௩௫)

நாணிழந்துவருந்தல்

ஒன்னுர் வெருவிடும் பாற்கர
னுட்டுயி ரோடுற்றவெ
னன்னுண் டறிவெற்பன் காதன்மென்
காலி னடுங்கிக்கற்பா
முன்னுர்வன் காலிற் றரிப்பின்றி
வீழ்ந்தது முற்றுமங்தோ
வென்னுஞ்செய் வேனினிப் பெண்பிறப்
பென்று மிழிபுடைத்தே. (௩௬)

தோழியியற்பழித்துரைத்தல்

சிரத்தை யரனடிக் கீந்திடும்
பாற்கரன் றேவையினம்
வரத்தைய னீரற வாடும்பைங்
கூழென மாழ்கிவைக
மரத்தை யணைந்திடு மூரியிற்
காட்டு மறுமனப்போய்ப்
பரத்தைய ரில்வயி னல்குநம்
மூரன்மெய்ப் பண்பிலனே. (௩௭)

பொழுதுகண்டுமயங்கல்

கற்றுங் கமைந்திடும் பாற்கரன்
வெற்பிற் கதிர்ப்பிறையாம்
பற்றுங்கி யன்பார்த் தணந்தவ
ரேங்கிப் பதைக்கச்செக்கர்ச்
சொற்றுங் கழலொ டெழுமாலை
யேயெனைச் சூழ்ந்துகொல்வா
னுற்றுங்குப் பாசறை யோர்க்கு
முளைகொ லுரைமதியே. (௩௮)

ஆடிடத்துய்த்தல்

கண்ணு திரண்டின னைத்தொழும்
பாற்கரக் காவலனை
யெண்ணுரி னேங்கி யினையலொன்
றேயென தின்னுரைகாண்
பெண்ணுர் சிகாமணி யேமுன்னி
யாடு பெருமுழக்கத்
தண்ணு ரருவியஞ் சாரற்
கரந்திவட் சாருவனே. (௩௯)

விரதியரோடுரைத்தல்

தேயமெல் லாம்புகழ் பாற்கர
னுட்டிற் றிருவெண்பொடி
காயமெல் லாங்கொண்ட மூக்கோற்
கரத்திர் நுங் காட்சிநன்கியா
னேயமெல் லாங்கொண்ட காளைபின்
கான்செலு நீர்மைதனை
யாயமெல் லாமகிழ் வாய்க்கேட்பக்
கூறுமி னன்னையர்க்கே. (௪0)

அவயவங் கூறல்

அண்ணுந்த வம்ம மருப்பிடை
சீயஞ்செவ் வாம்பலிதழ்
கண்ணுந் தகமுக மப்போ
தலர்ந்த கடிக்கமலம்
விண்ணுந் தனித முகிலோதி
சம்பக மேனிசுவைப்
பண்ணுந் தகைமொழி பாற்கரன்
மால்வரைப் பைந்தொடிக்கே. (௪௧)

வன்புறையெதிரழிந்திரங்கல்

கறைவாய்ந்த கண்டத் திராமேசர்
தாளிற் கனிந்தபத்தி
முறைவாய்ந்த பாற்கர சேது
பதிபுகழ் முன்னலர்போ
லுறைவாய்ந்த கண்ணெ டிரங்கிடு
மாங்குயிற் கோங்கல்வெற்ப
னிறைவாய்ந்த கல்வி முதலின்ன
யாவு நெடிதுநன்றே. (௪௨)

அன்னமோடழிதல்

அன்பு கலந்துல கெல்லாந்
துயில வளியனந்தோ
நின்புக லென்றவர்த் தாங்கிடும்
பாற்கர னேரலர்போற்
றுன்பு கலந்தெய்ப் பதையன்பர்
பாலிற் சொலாதுளத்தென்
வன்பு கலந்தது சேவற
ழீஇய மடக்குருகே. (௩௪)

சொல்லாதேகல்

விண்ணெதிர் வண்கரப் பாற்கர
னாட்டு விதித்திடிற்கூ
ளெண்ணெதி ருங்கலுழ்ம் போக்கென்
றயர்வி னெவர்சொலினுங்
கண்ணெதிர் நின்று முகங்கொளி
னேங்குங் கவன்றுயிர்க்கும்
பண்ணெதிர் சொல்லிக்கெச் சொல்லா
துரைத்துப் படருவனே. (௪௪)

தெளிதல்

வணங்கல ரந்தகன் பாற்கரன்
வெற்பின் மயிலியற்குச்
சுணங்கவி ரம்மத் தொடுங்கின
கோதை சுழன்றதுள
நிணங்கமழ் வேற்கணி மைத்த
வடிக ணிலம்பற்றின
வணங்கமர் தண்முகம் வேர்த்ததற்
றுலணங் கல்லணெஞ்சே. (௪௫)

கூதிர்கண்டு கவறல்

தருவினை நேர்தருங் கைத்தலப்
பாற்கர சாமிவெற்பிற்
கருவினை யுற்ற முகிலெம்
முயிர்க்கன்றிக் கண்டவர்க்கும்
வெருவினை மாறுடற் றிக்கவை
யாது விரைநெஞ்சொடு
பொருவினைச் சென்றவர் கண்ணுங்
கவரப் புகுங்கொனெஞ்சே. (௪௬)

முகிலொடுகூறல்

நிரம்போகை மாறித் துயர்க்கடல்
வீழ்ந்தழு நேரிழைதன்
புரம்போ கலைதுணை வாகவென்
னாட்டப் பொறிகடந்து
பரம்போத மேய்ந்துநம் பாற்கர
சேது பதிவள்ளறன்
கரம்போ லுறைபெய்ய விண்ணத்
தெழுந்த கருமுகிலே. (௪௭)

தழைவிருப்புரைத்தல்

தேயாத வான்புகழ்ப் பாற்கரன்
வெற்பிற் சிறுமிநின்கை
வீயா மணித்தழை யைச்சென்னி
சூடி விழியிலொற்றிச்
சாயா முலைபி லணைத்து
மறந்தன டன்னையுந்தா
னீயான தன்றித் தழையான
தன்று நெடுந்தகையே. (௪௮)

விரவிக்கூறல்

இருமலர் கூற்றன பாற்கர
ஞட்டமு தேகழியிற்
றிருமலர்க் கள்ளைப் பெடையோடு
துஞ்சுஞ் சிறையனமம்
மருமலர் வள்ளத் துதவுதல்
பார்த்தொரு மன்னர்துஞ்சும்
பொருமல ராங்குறி காணினின்
ஞவி புரக்கலையே. (சகூ)

ஊடறணிவித்தல்

தொல்லிய றேய்வரும் பாற்கரன்
வெற்பினிற் சூளையரைப்
புல்லிய பாணனைப் போக்கி
யமைந்து பொறைமழலைச்
சொல்லியல் சேயை மணிமார்பி
லேந்தித் தொடர்ந்ததனுன்
மல்லிய ஞேண்மன்னன் பாற்காண்
பொருத்தம் வரிவளையே. (ருo)

குலமுறைகூறிமறுத்தல்

நெல்லெங்கு மோங்கும் வயனுட்டை
யாளு நெடுந்தகைநீர்
கல்லெங்கு மோங்கும் புனக்காவன்
மானைக் கலந்தனிரே
லெல்லெங்கு மோங்குஞ் சிவபுண்
ணியமுற்று மென்றுந்தன்ஞட்
டில்லெங்கு மோங்க வரும்பர்ற்
கரன்ற னிரவியிலே. (ருக)

காவற்பிரிவறிவித்தல்

விருத்திப் பொருட்கல்வி வாணரை
யுள்ள விழைவுமுற்ற
வருத்திப் பரித்திடும் பாற்கர
னேர்தரு மாண்டகைதான்
வருத்திப் பகையைப் புயவரை
மேற்கொண்ட மண்ணையின்னுந்
திருத்திப் புரக்கக் கருத்துறும்
போலுஞ் சிலைநுதலே. (ருஉ)

உண்மகிழ்ந்துரைத்தல்

பொருந்தனல் வெஞ்சுரம் பொன்னுக்குற்
றேன்கட் புணர்த்ததுன்புன்
வருந்தன மூழ்கத் தொடமுனம்
பாற்கர வள்ளறந்த
பெருந்தனந் தீண்டமுன் பாவல
ரொற்கம் பிரிந்ததெனு
மருந்தன வின்மொழி யாய்தீர்ந்த
தற்புதம் வாய்ப்பித்ததே. (ருந)

புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்

மன்னிலை யாவுந் திருத்திய
பாற்கரன் மால்வரைப்பொய்ப்
புன்னிலை யாளைப் புனலாட்டி
யொன்றும் புரியலர்போற்
பொன்னிலை யாயவென் னில்லிற்
செறிந்த புணர்ப்பதுதான்
மின்னிலை வேலரை யென்னெனக்
கேட்குதி மென்கொடியே. (ருச)

தன்னைவியந்துரைத்தல்

வீட்டிய னூலுணர் பாற்கர
ஞட்டொரு மின்னைப்புன
லாட்டிய வூர னலத்தினை
மாற்றி யணைந்திலனேன்
மாட்டிய லென்னி லவற்றந்து
பார்த்து வழிவிழிநீர்
காட்டி யணைய வினுமெண்ணு
வாளெனக் காண்குவலே. (௫௫)

புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்

சேயாய் குதட்டினை காணுந்தை
போலப்பொய்ச் சிற்றனையர்
வாயார் பொதுத்தம் பலமது
பூசிக்கு மாண்பதன்றே
போயா யிடையய ரன்றேனின்
பேறென் பொலமுலைப்பா
ருயா யவனி புரந்திடும்
பாற்கரன் ருணுவிலே. (௫௬)

கலவிகருதிப்புலத்தல்

சும்மையெல் லாம்புகழ் பாற்கர
ஞட்டன்ப ரூளையரை
வெம்மை யருக்கிழப் பார்ப்பானைப்
பாணனை விட்டறிவார்
செம்மை யகத்தரிற் செம்மாலை
மாது திகழ்ந்தெதிர
வெம்மையும் நோக்கிச் சிறிதுகண்
ணிவ்வில்லி லென்னுற்றதே. (௫௭)

வழிபாடுகூறல்

பாவும் பொருளு முடனு
முயிரும் பழமுமதின்
மேவுஞ் சுவையு மெனநின்ற
தான்முனி மெய்ப்பசுவுங்
காவும் பொருவுங்கைப் பாற்கர
ஞட்டன்பர் கட்கமுங்கூ
ரேவும் புரைவிழி யாள்கற்பி
னிற்பரென் னின்றவளே. (௫௮)

ஆதரங்கூறல்

கற்ருர்கள் கண்ணிகர் பாற்கர
ஞட்டிற் கழனிசுர
முற்ருர் பரன்முரம் பார
மரம்பை முதுகள்ளிகள்
சுற்ருருங் காஞ்சி மருதந்தென்
கால்கடுஞ் சூறைவள்ளால்
பற்ரு வுயிரொத்து நின்னுட
னேகுநம் பான்மொழிக்கே. (௫௯)

முகங்கண்டுமகிழ்தல்

கண்டக ரந்தகன் பாற்கரன்
வெற்பிற் களங்கமெய்திக்
குண்டகல் வாரிப் பிறந்து
பணிக்கஞ்சிக் கோடிமெய்தேய்ப்
புண்டக நொந்த முழுமதி
யொப்புறு மோவிளர்த்தி
முண்டக மின்னமு தோவா
விவடன் முகமதிக்கே. (௬௰)

கற்புப்பயப்புரைத்தல்

ஒருகாலுந் தெய்வமென் றன்னு
வறக்கற் புடையணம்மான்
முருகார் தொடையண்ண லெண்ணின்
முனைப்புகு மும்மதயா
றருகாத தந்திதன் பந்திக்க
ணேவந் தருந்தியிடுந்
திருகாத மெய்மனப் பாற்கர
சாமி சிலம்பினிலே. (கூக)

வாழ்க்கைநலங்கூறல்

அன்னய் கடந்த தவள்கற்
புனையுமவ் வன்பர்குடை
நுன்னு யகனையின் னின்னிலை
வான்பொறை நோன்புவியைப்
பொன்னர் மணியுரப் பாற்கர
னட்டவர் போர்ப்பரித்தேர்
துன்னர் திறைச்செலி னுங்கட
வாதுதன் ருென்னிலையே. (கூஉ)

பள்ளியிடத்தூடல்

நல்லஞ் செழுத்துண்மை முற்றுணர்
பாற்கர னட்டன்பர்க்கு
வல்லஞ் செழின்முலை கண்முகந்
தேஞ்சொலின் மைந்தர்ப்பிணித்
தில்லஞ் செழும்பொன்னிற் காட்டையிற்
காட்டு மிளநகையார்
புல்லஞ் செயவெறி யோமுட்
டவறியென் போந்ததிங்கே. (கூ௩)

வழிப்படுத்துரைத்தல்

தாயார் துயரொழித் தாயங்
கடந்து தமிற்றமிலூர்
வாயா ரலரொழித் தோம்புவ
வோம்பி வருவனும்பாற்
றயார் புகழ்முத்து ராமலிங்
கேந்திரன் றெல்லைத்தவச்
சேயாகி வந்தருள் பாற்கர
னட்டினிற் சேர்மின்களே. (கூச)

கடலிடைவைத்துத் துயரறிவித்தல்

பொறியா ரமுத மதியைத்தந்
தாய்கற் புணர்ந்தனையாய்ச்
சிறியா யலைமகப் பேற்றின்ன
றோர்வைநஞ் சேயிழைமா
லறியாய் கொலுட்குளி ரத்தீக்
குணத்துட ஞர்ப்படங்காய்
நெறியார் பெரும்புகழ்ப் பாற்கர
னட்டு நெடுங்கடலே. (கூரு)

பிரிவுணர்த்தல்

சொற்பிரி யாநிலைப் பாற்கர
னட்டிற் றெருகினிதிய
மிற்பிரி யாத கதவடைப்
பாரு மிருங்கையுறாஉ
மற்பிரி யாவமு தூற்றிடு
வாருமுண் டாயினன்றே
நிற்பிரி வுள்ளு மனனுள
னகுவ னேரிழையே. (கூசு)

ஊடனீடவாடியுரைத்தல்

நடுநிலை நின்றிடும் பாற்கர
னாட்டு நளிர்கழியி
னெடுநிலை யாய வுலகத்
துயிரை நிதங்கவருங்
கொடுநிலைக் கூற்ற மகளாய
வாறு குறிப்பனென்னின்
விடுநிலைப் பாலனல் லான்முன்
மருவ விழையலனே. (௬௭)

பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்

நின்னா யகன்மறை யத்திரு
வோடு ஞிமிறொடுநள்
என்னாண் மரீஇத்துஞ் சுழிக்காணின்
சொப்பனத் தன்பர்க்கழி
முன்னான தேமரொடுங் கண்டேனென்
பாயெனின் முண்டகமே
யென்னா ருளமெய்தும் பாற்கரற்
பாடுந ரின்பிணையே. (௬௮)

பதிபரிசுரைத்தல்

வரத்திய லோங்கிய பாற்கர
னாட்டு வளவயல்பார்
தரத்தியல் வையைப் பெருக்கது
பார்மலர்த் தண்டலைபார்
புரத்தியல் பாரன்ன சத்திரம்
பார்செல்வர் பொன்மனைபார்
சரத்திய னோக்கன மேபார்
தகுங்கல்விச் சாலைகளே. (௬௯)

தேறாதுபுலம்பல்

தொன்றாணெஞ் சைக்கரி வைத்துயிர்
நீயென்ற சூள்பிழைப்ப
தன்னார் தவறன்று காலக்
குறிகொன்மற் றக்குறியை
முன்னார் வினையின் மனந்தடு
மாறிப்பின் முன்குறித்த
வென்னார் மதிகொலென் பாற்கர
னாட்டன்ன மேசெய்வதே (௭௦)

பொழுதுகண்டு மயங்கல்

எவ்வாய்நின் றோற்றம் பகைமேற்சென்
றாருட னென்னளவோ
னைவா விருதிணை யாவிக்கு
கின்னி னணுகிற்றின்னும்
வெவ்வால மாகி யிருண்டது
பார்மொக்குண் மேயதுவிண்
செவ்வான மாலைமெய்ப் பாற்கரன்
வெற்பிற் றெரிந்துசொன்மே. (௭௧)

வாய்மைகூறி வருத்தந்தணித்தல்

தினந்தான மோம்பிடும் பாற்கர
னாட்டுத் திகழ்வளைமுத்
தனந்தான் றருமண்ட மென்றணைக்
குங்கழி யம்புலம்பர்
முனந்தா னணைந்தவச் சூளோ
டணைந்த முதமறந்து
மனந்தான் ரிறிந்து தணக்க
வறிகிலம் வாணுதலே. (௭௨)

அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல்

வெற்பொன்று மெய்க்குணப் பாற்கர
னாட்டிவண் மேவிச்சொல
வற்பொன் றிவட்கவ ளாரனைத்
தந்த தருங்கலைகள்
பொற்பொன்று வாணிக் கரக்கியர்
தந்தது போல்வதன்று
கற்பொன் றிவடுணை யாய்ப்பெற்ற
தென்பது காண்டகுமே. (எங.)

பிரிந்தமை கூறல்

குருவார் தருங்கதி ராயிரப்
பானு குலத்துதித்த
திருவார் மணிமுடிப் பாற்கர
சாமிதன் றேவையன்னாய்
செருவா ரயிலன்பர் தானை
யுடற்றுஞ் செழுங்கனலான்
மருவா ரிடுமதில் மும்மதில்
பட்ட வகைபடுமே. (எச)

கலக்கங்கண்டுரைத்தல்

குலந்தரும் பாற்கரன் றேவையன்
னாட்குக் குரிசில்சொற்ற
புலந்தருங் கல்வியோன் றுண்டென்ற
சொற்கல்விப் பொற்பிலர்க்கு
நலந்தருங் கல்வியர் சொல்லா
யுயிர்க்கித நாடுநர்க்குச்
சலந்தரும் வெங்கோலைச் சொல்லாய்ச்
செவியினைச் சார்ந்ததுவே. (எரு)

முன்பனிக்கு நொந்துரைத்தல்

பனியாருக் காடி யனலுதல்
கையிற் பரித்ததைக்கன்
முனியார்பெண் ணைப்பிரி யார்கடல்
காயு முழுநெருப்பிற்
றனியா ருயிரில பாற்கரன்
கல்லிலெற் றந்தவடா
னனியார்வ மின்றி மகப்பெற
லாம்வர நண்ணினளே. (எசு)

மறவாமைகூறல்

நாடிய நல்லவர்க் கின்பருள்
பாற்கர னாகமின்னே
தோடியல் வள்ளை வனசங்
குவளை துணைச்செப்பொடே
யேடியல் சஞ்சன் படையா
வொரோவதின் றென்னச்சய
நீடிய பாசறைக் கண்ணுமென்
கண்ணெஞ்சி னேர்ந்தனளே. (எஎ)

அணைந்தவழியூடல்

வள்ளற் றகைதிகழ் பாற்கரன்
வெற்பினின் மார்புற்றவிவ்
வெள்ளப் படாமுலை நன்ன
ரிழந்த தெனமெலிந்துன்
னுள்ளக் களியினர் நிற்பகர்
வார்செற்ற மூரவற்றாற்
கள்ளப் புணர்ச்சி யுகவேமன்
றீண்டலென் கான்மலரே. (எஅ)

பொறையுவந் துரைத்தல்

வேளிற் றிகழெழிற் பாற்கரன்
    வெற்பன்பர் வேசியர்தங்
கோளிற் றிகழ்மனை செல்லவெ
    னெஞ்சங் குலையிலவர்
தோளிற் றிகழ்ந்தும் பிரிவிற்
    கலுழ்ந்துந் தொடைமறைந்துஞ்
சூளிற் றிகழ்ந்துநின் றூட்கென்
    கொலாமினித் தொல்லுயிரே. (௭௯)

வாயிலவர் வாழ்த்தல்

காழியர் கோன்முத லோர்ப்புகழ்
    பாற்கரன் கல்லிலிவ்விற்
கேழிய லோவிய வின்முன்றில்
    வாசங் கெழுமுமுன்றி
றேழிய ராண்டைக் கலதிய
    ராவைய சூழ்கவப்பொய்
யாழியல் பாணனெ டெய்தப்
    பெரிதுடை யேந்தவமே. (௮௦)

வறும்புனங்கண்டு வருந்தல்

என்போ லலந்திர் புனமு
    மெலிந்த தெனின்னிழலா
யின்போகை தந்ததெய் வத்தேனிங்
    கில்லை யிடைபிறிதோ
வன்போ தகப்படைப் பாற்கர
    னூட்டுண்மை வாய்திறமின்
பின்போக வீர்கிளி யேயுழை
    யேமெய்ப் பிரமமே. (௮௧)

நெஞ்சொடு வருந்தல்

போன விடந்தொறும் போமோ
    விடையிற் புகாதுறுமோ
வானவ ருந்தவத் தாமோபன்
    னுளங் கமைந்தெய்துமோ
மான விருங்கலப் பாற்கர
    னூட்டு மலர்ப்புன்னையங்
கானலிற் சூடுறந் தார்தேர்பின்
    சென்றவென் கன்னெஞ்சமே (௮௨)

காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

இருளுறை நீந்திப் பலவிடர்
    நீந்தியெம் மிற்புறஞ்சேர்
பொருளுறை யூரனைத் துஞ்சா
    வணைபுறம் போக்கியவா
றருளுறை பாற்கர சாமிபொன்
    மன்றுற்ற வான்றவரை
மருளுறை வஞ்சர் புறத்தோட்ட
    நிற்பதின் மாகொடிதே. (௮௩)

மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்

தாதா வெனப்படும் பாற்கரன்
    வெற்பர் தகைவரவு
மூதா வுரைப்பது தூமின்கள்
    பூவு முழுப்பொரியும்
போதார் நிறைகுடம் பூரிமி
    னேற்றுமின் பூஞ்சுடர்கள்
காதார் விழிமண மென்றூர்ப்ப
    தில்லிற் கடிமுரசே. (௮௪)

வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தல்

காட்டி யிடத்தெய்வம் பாற்கரன்
வெற்பர் கரிவைத்துச்சூ
ணாட்டி யுவந்துண்டு பூழியஞ்
சோறு நயஞ்செய்துபா
ராட்டி யணைந்துயி ரொன்றென்
றிருந்தன ரன்றின்றெலாம்
வீட்டி யறப்பொய்த் தனர்சான்ற
தக்கவர் மெய்ம்மனமே. (௮௫)

தோழியயற்பழித்தல்

சென்றா நதிவிழ வென்றாள்பொய்
யாளன்றிச் சீர்மெய்யைநீ
புன்றாரை யத்து முகக்கவிழ்
வொன்ற வுறாமொழியென்
குன்றா வுளஞ்சுட்ட பாற்கரன்
வெற்பினக் கோலவஞ்சி
முன்றா னடையிற் பெறுமோ
குளிரு முடிமன்னனே. (௮௬)

புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்

மதியிற் றிகழ்குடைப் பாற்கரன்
வெற்ப மனங்கவர்த்துச்
சதியிற் றலையளை யாட்டிச்
சிறப்பித்துத் தாழ்ந்துற்றனை
விதியிற் றிரிந்தவற் றுக்கிட
மாமவண் மீட்டும்புகு
நதியிற் புதுப்புன லன்றே
யிவ்வில்ல நராதிபனே. (௮௭)

வருத்தந்தணித்தல்

தேற்றம் பெறுமதிப் பாற்கர
னாட்டிளஞ் சேயைப்பெருந்
தோற்றம் புலன்கல்வி நீதி
யிவற்றைத் துவரவிட்ட
மாற்றங் கனிந்த கவரக
வூரன் மணிவடந்தா
மேற்றம் பெறுமிம் முலைபுல்லு
மோவென் றினையநெஞ்சே. (௮௮)

பாணற்புலந்துரைத்தல்

வளையார்கை யாய்புகழ்ப் பாற்கர
னாட்டென் மணிமுன்றினின்
றிளையார் துனியி லியம்பின
வண்ணற் கிலாப்பலதோ
மளையா வவற்கியல் பாண்மக
னேதில னாகக்களி
திளையா வுரைத்த புனைந்துரை
சேடற்குஞ் செப்பரிதே. (௮௯)

பாணனைப்புடைத்தமை பாங்கிக்குரைத்தல்

பங்கய வாண்முக வூரனைப்
பாற்கரன் பாய்புனனாட்
டெங்கயர் பாண்டொழிற் புல்ல
னிவன்மற் றெமக்குமன்னோ
தங்கையைச் சேர்ந்தன னென்னப்
புடைப்பத் தணந்தெய்தினா
னங்கை படப்பையிற் காய்க்குற்
றெய்த்தோடு நரியிடரே. (௯௦)

பாணன் வரவுரைத்தல்

இயலணி பாற்கரன் வெற்பிற்
கடிதரு மிற்புகுத்து
வயலணி யூரனை யூண்பெற
வேண்டி வளப்பத்தர்யாழ்
மயலணி யின்னிசை பாடவொர்
பால்வந்த மாண்பினற்குக்
கயலணி கண்ணி யுதவிட
வேண்டுமிக் கல்லையின்னே. (௯௧)

அன்னமோ டயர்தல்

என்று மிதஞ்செயும் பாற்கரன்
வெற்பில வின்னறனி
லொன்று முசாவி யிரங்கலென்
ஞெதொ ருழிவளர்ந்து
நன்று பயின்று மிவணடை
வாய்ந்து நயந்தவன்பு
குன்றுமச் சூளினர் தம்மினு
மன்னங் கொடியதுவே. (௯௨)

வழியருமைகூறிமறுத்தல்

அரியோ வெனப்புவி யோம்பிடும்
பாற்கர வண்ணல்வெற்பிற்
புரியோ வியமனை யாள்பொன்
னகரப் புறத்திலன்பிற்
கரியோடுண் ணுர்பழி யுண்ணே
ரிருளுடைக் காளமுகிற்
சரியோ துணிந்தறிந் தேகன்மின்
மேலைத் தகையவரே. (௯௩)

பருவங்காட்டி வற்புறுத்தல்

பாடற் றுறைபுனை பாற்கர
மாலைப் பணியலர்போல்
வாடற் றிறமென்னை வந்தது
கார்தெவ் வயங்கெறுந்தே
ராடற் றகையவர்க் கெண்ணித்
தினமண் ணகங்கிளைத்த
கோடற் றவிரற் செங்கரங்
கூப்புதி கோல்வளையே. (௯௪)

பள்ளியிடத்தூடல்

பொன்மேக ஞாலத் தமர்ந்தன
பாற்கர பூபன்வெற்பி
லென்மேனின் னிற்பெரி தன்பின
ராய விளைஞர்கண்டா
னின்மே தகுமன்பு மின்புங்
குறையு நிருபவற்றுற்
சென்மேயங் கென்னை தொடர்பிங்
கெனுதடி தீண்டலையே. (௯௫)

நெறிவிலக்கிக்கூறல்

கானு ரதரின வேடர்
விலங்கு கலந்ததிரு
டேனுர் தினைநுண் பதமுய
லூனுண்டு சிற்றிலிலிம்
மானுளு நீரு மரைத்தோற்
றுயின்றினன் வந்திடமுன்
வானுடு நேர்நும் பதிச்சென்மின்
பாற்கரன் மால்வெற்பரே. (௯௬)

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி

நல்லார் மகிழ்மத நின்னுயிர்க்
கேத நணுகினம
தல்லார் குழறகு மஃதே
திணிந்த வரையிருள்வா
யொல்லா விலங்குங் கிராதரும்
பேயு முலவும்வெங்கான்
செல்லா தொழிமதி பாற்கர
மன்னன் சிலம்பினிலே. (௯௭)

மெலிவுகண்டு செவிலிகூறல்

கலைக்காட்சி யாமதிப் பாற்கரன்
வெற்பிற் கதியுறுமே
னிலைக்காட்சி யாரினம் முட்பார்வை
யும்பிற நீர்மையன
கொலைக்காட்சி யாகிய தெவ்வடு
வேற்கைக் குகன்றகர
மலைக்காட்சி மேவுற் றனளாதல்
வேண்டு மடமயிலே. (௯௮)

தேர்வரவுகூறல்

சூன்மேகங் கூடிப் பரித்தேர்நின்
கற்பிற் றுலங்குதெருக்
கான்மேய தன்பர் வரவினுக்
கேர்புக ணிந்தசுவைத்
தேன்மேவு மென்மொழி யாயத்து
மேவுக தேவர்நரர்
மேன்மேலும் வாழ்த்திடும் பாற்கர
சாமிதன் வெற்பினிலே. (௯௯)

தூதுகண்டழுங்கல்

ஊறிய வின்பமன் பாதிதந்
தென்னினைப் புள்ளமுதற்
கூறிய கொண்டவ ரின்னுங்
கொடுப்பது கொள்வதுண்டோ
வீறிய தூத ரினிதெனிற்
செய்குறி விட்டுமறை
தேறிய செப்புமின் பாற்கரன்
சீரினிற் சீர்முந்துமே. (௧௦௦)

முற்றிற்று.

பாற்கர சேதுபதி

நான்மணிமாலை

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

உ

குகமயம்

பாற்கர சேதுபதி
நான்மணிமாலை.

காப்பு

வெண்பா

மன்னியசீர்ப் பாற்கரனு மாராசற் கோர்மாலை
துன்னியிடு நான்மணியாய்ச் சூட்டுவிக்க—வென்னுளமேற்
கோவத் திரத்தான் குருமுன் னுதித்தமத
மாவத் திரத்தான் வரும்.

பாலப் பருவமுதற் பட்டவற்றி லெல்லாமுற்
சாலப் பரிவினெனைத் தாங்கிநின்ற—வேலப்ப
னார்த்தியினார் நெஞ்சகலா வாறுமுகத் தேவேயிவ்
வார்த்திகனா லுந்தாங்கு வான்.

நூல்

வெண்பா

திருமேவு மார்பினனே சீரளகைக் கோனே
தருமேவு நாட்டரசன் றானே—குருமேவு
வேற்கரனைத் தாளிறைஞ்சி மெய்ப்பத்தி மேயபுகழ்ப்
பாற்கரனுஞ் சேது பதி. (௧)

கலித்துறை

பதியிற் சிறந்திடுந் தேவையை யின்புறப் பாலித்திடுந்
துதியிற் சிறந்தநம் பாற்கர சாமித் துரைவள்ளலால்
விதியிற் சிறந்த தருமமு மேதகு மெய்ச்சைவமு
மதியிற் சிறந்த தமிழும் பெரிது வளர்வனவே. (௨)

விருத்தம்

வளந்திக ழிராம லிங்கமா விலாச
மாளிகை கண்டவான் புலவ
ருளந்திகழ் களியி னாட்புகா வாங்க
னுறைதரும் பாற்கர வரவோன்
றளந்திகழ் கமலத் துணைக்கண்கண் டிவன்வா
சவனல னாகவண் சுதன்மை
யளந்திகழ் நரலை யளக்கரி னடைந்த
தார்தவ மென்னவாய் வாரே. (௩)

அகவல்

ஆய்வது புனித வாகமக் கலையே
யீவது போனக மிரணியங் கலையே
யின்புறப் புரப்ப தெழில்வளத் தேவையே
யன்புறப் பணிவ தற்களத் தேவையே
யணிவ துருத்திர னக்கப் பணியே
தணிவறப் புரிவது தளித்திருப் பணியே
மனமுறச் செபிப்பது மந்திர மைந்தே
தினமுற வவிப்பது தெறும்புல மைந்தே
பூசுவ தமல புண்ணிய சாந்தமே
யேசற வணிவ தினியமெய்ச் சாந்தமே
சூற்கரு முகிலெனத் துலங்கும்
பாற்கர சேது பதிமா தவனே. (௪)

வெண்பா

மாதவமுன் செய்தமட்டே வாய்க்கு நுகர்ச்சியென
வேதமிலார் சொற்றதுமெய் யென்றுணர்ந்தேம்—பூதரவின்
னாதனடி பூசிக்கு நம்பியருட் பாற்கரனைக்
காதலுறக் கண்ணினாற் கண்டு. (௫)

கலித்துறை

கண்ணா யிரத்தின னாட்டுப் புலவர் கனிந்தசுவைத்
தண்ணா ரமுதமுண் டுங்கவி பாடுந் தகையுற்றிலர்
மண்ணாளும் பாற்கர சாமிதன் னாட்டினின் வான்புலவ
ரெண்ணா ரமுத கவிபாடக் கண்டன ரேவருமே (௬)

விருத்தம்

ஏவரும் பரவு மாய்தக்கண் ணிறையு
மிலங்கிலை வேலினை யவனு
நாவரு மதுர கவிஞர்க்கே வலராய்
நயந்தவ ருளத்திடை நண்ணிய
வோவரு குறைக ளுளவெலா மொழித்த
வுண்மையை யுணர்ந்துனை யெனப்பூ
மாவரு கனக நகரப்பாற் கரமா
மன்னநின் மன்றில்வந் தனமே. (௭)

அகவல்

வந்தினி தாடுநர் மாசுக ளுளவெலாஞ்
சிந்துமெண் மூன்று தீர்த்தங் குலவிக்
காசியா னந்த கானங் கடுத்து
வீசியார் கலிக்கிளர் மேத்தியச் சேதுவு
மாணியங் கொருவனை மாறற நட்ட
வேணிமிர் தநுவரி யிராவணற் காதிய
வன்புறு பவப்பழி மாற்றிட நாட்டிய

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

வின்புறு குறிதிக ழிராமேச் சுரமுஞ்
சிலநீ டியமெய்த் தெய்வத் தொண்டர்வாழ்
கோலநீ டுத்தர கோச மங்கையுந்
தவநிலை மணிவா சகவடி கட்குச்
சிவநிலை காட்டிய திருப்பெருந் துறையு
மாகம மருட்பா வாய்ந்துள நெகிழ்வுறாஉம்
பாகமெய்த் தொண்டர்கள் பயிறிரு மடமும்
வறங்கூர் கருப்பினு மகிழ்ந்தெளி துதவு
மறங்கூர் தரும்பல வன்னசத் திரமும்
வேதியர் முதலா மேவிய பலதிறச்
சாதிக டவாவகை தங்கிய மனைகளும்
போதவை தவாதுளம் பொருந்துபு சிறார்பலர்
மேதகக் கற்றிடும் வித்தியா சாலையும்
வருந்திட வுறும்பிணி மாறிட வென்று
மருந்துக ளுதவும் வயித்திய சாலையும்
வாழையுங் கன்னலு மாவும் பனசமுந்
தாழையுங் கந்தியுந் தழைத்ததண் டலையு
வரியளி பாண்செய மல்குதண் டேனும்
பரிசி லுதவும் பனிமலர்ப் பொழிலு
மேலெழு மாதபம் வீட்டிட வழிதொறுஞ்
சாலவின் னிழறருந் தகைநிரைத் தருவு
மேதிக ளுளக்கலின் மிடனிமிர் வாளைகண்
மீதெழுந் துலாவரும் வியனிலைக் குளமுந்
திரைகிளர் வையையந் திருநதிப் பெருக்கி
னிரைகிளர் வளைவரு நெடுநீர்க் கழனியு
மின்னன பிறவு மியைந்ததென் னாட்டினின்
மன்னுபு குணபால் வாரியுங் குடபாற்
பழமைசான் மதுரையம் பதியிலோர் பாகமுங
கிழமைசால் வடபாற் கிளர்ந்தசோ ணாடுந்

தெனுதினில் வளந்திகழ் திருநெல் வேலியுந்
தனுதபே ரெல்லையாய்த் தயங்கிட நின்று
சயந்திகழ் தண்டமிழ்த் தலைநா டாகி
நயந்திக ழிராம நாத புரத்தி
னிரணிய கர்ப்ப யாசி ரவிகுல
முத்து விசய ரகுநாத பாற்கர
சாமி சேது பதிமகா ராசா
வினிதர செய்திவீற் றிருப்ப
நனிமகிழ் வெய்தினர் நரருமும் பருமே. (அ)

வெண்பா

உம்பரிடைப் பாற்கரன்றா னோவாத வெஞ்சுடரோ
னிம்பரிடைப் பாற்கரன்றண் ணென்சுடரோன்—பம்பும்
புறவிருளைப் போக்குமவன் பொங்கவகத் தூர்கார்
நிறவிருளைப் போக்குமிவ னின்று. (கூ)

கலித்துறை

நின்றஞ்ச மென்ன வடைபவர்க் கன்னை நெடிதுறமேற்
சென்றஞ் சவித்த வடியவர்க் காவி செழுந்தமிழ்க்கு
மன்றஞ் சகத்துக்குக் கற்பக மன்னர் மகுடமணி
குன்றஞ்சமானமெனுங்குணப்பாற்கரக்கொற்றவனே. (க0)

விருத்தம்

கொற்றவ னாய முத்துரா மலிங்கக்
குபேரனன் றுஞற்றிய குறைவி
னற்றவ முழுதுந் திரண்டுபாற் கரனா
நண்ணிய தென்னநா னாதால்
கற்றவர் பலருங் கழறிடு முண்மைக்
கருத்தினைக் கனவினி லேனுஞ்
சொற்றவ றாத பெருவித ரணவத்
துரையிடைத் துணிந்துகண் டனமே. (கக)

அகவல்

கண்ணிமிர் பரிமளக் கமலக் கண்ணிறு
லுண்ணிமிர் கருணையி னுலக மோம்பலாற்
பேணுறு பீர்சிறப் பிதாம் பரத்தான்
மாணுற மன்னிய மலர்மா வுரனாற்
பொங்குமின் னமுதம் புலவருக் குதவலாற்
சங்குசக் கரம்வா டடக்கையி லேந்தலா
லோங்கிய மழைமுகி லுறழ்தரு நிறத்தாற்
பாங்கியல் சேது பதியெனும் பான்மையான்
மலைவளர் காதலி மாதிடத் தானை
நிலைவள ரருச்சனை நிரப்புசெங் நெறியால்
வனத்தள வத்திரு மாலை புனைதலான்
மனத்தளி யிற்றிகழ் வான்கவிக் கருளலாற்
பாற்கர சாமிப் பார்த்திபன்
பாற்கட லமளிப் பகவனைப் பானே. (கஉ)

வெண்பா

ஒப்பிலாச் சைவமெங்கே யுண்மை யறங்களெங்கே
கைப்பிலாத் துய்யதமிழ்க் கல்வியெங்கே—தப்பிலாப்
பாவலரெங் கேசீமான் பாற்கரவே டேவைநகர்க்
காவலனு மேவியிடாக் கால். (கங)

கலித்துறை

கால்வாய்ந்த வையைப் புதுநீர்
பெருகக் களமர்மகிழ்
சேல்வாய்ந்த பண்ணையங் தேவையிற்
பாற்கரச் செல்வற்குச்செங்

கோல்வாய்ந்த நாண்முதற் கொண்டுநின்
ருடிய கூத்தொன்றுதான்
மேல்வாய்ந்த நல்லறத் தேவுக்கு
வாய்ந்த விநோதவின்பே. (கச)

விருத்தம்

இன்புடை யரச ரெவரையும் வியங்கொ
ளிராகவன் முதலினோ ரிருந்த
மன்புனை நகர்க்கு வகுத்தசீ ரெல்லாம்
வருணனை வகையின்முன் வைத்தாம்
பொன்புனை மருமப் பாற்கர சாமி
பொலநகர் கண்டபோ தன்று
தென்புனை கவிஞ ருரைத்தன வெலாமெய்த்
திறத்தின வெனத்தெளிந் தாமே. (கரு)

அகவல்

தெளிதரு மன்பினர் சிந்தையிற் சேக்கு
மளிதரு கமல வடிச்சிவ பெருமா
னருயிர் மலமகன் றருங்கதி யடைவான்
சீரணி பவளத் திருவாய் மலர்ந்த
வரிறபு சத்திய வாகமக் கடலிற்
பரிவுற மூழ்கிடும் படுதர சிகாமணி
மெய்யடி யார்புகழ் விழைவுட னய்ந்து
செய்யமே னிலைகிளர் சிரத்தைப் பத்தியா
னரியஞ் செந்தமி ழாங்கிள நூல்பல
கூரிய மதியினிற் குறைவறக் கற்றோன்
றளவாய் மகிபதி தவத்துதித் தவனிமுற்
றளவா விண்ணமு மளந்த புகழ்சிறீஇ
யொருதுறைக் கோவைக் கும்பர்கோன் காவைப்

பொருதுணைக் கரத்தாற் பொன்மழை பெய்த
கோது பதியாக் குலரகு நாத
சேது பதியாஞ் சிமான் மருமான்
றிவ்விய வாலையந் திகழு மடாலயஞ்
செவ்விதி னேம்பிடுந் திருத்தகு கருத்தான்
றிகழ்துரை ராசாச் சிறப்புப் பெயர்பலர்
புகழ்தரச் செங்கோல் பொற்ப வேந்தி
மூதறி வெய்திய முத்துரா மலிங்க
சேது பதியுஞ் செழுமனைக் கிழத்தியா
யாவவெய்த் தனமெனு மநாதருக் கென்று
மாவலி னுணவுடை யாதிய வருளிச்
செந்தமிழ்க் கலைபல திரிபறக் கற்றுச்
சந்தத மாகமத் தடங்கடன் மூழ்கி
யவமுழ தொருவிய வருந்தவர் பரவத்
தவமுழு துஞற்றிய தவமா யோங்கி
வாரொலி கருங்குரன் மடமின் னார்க்கு
வேரியம் புயத்தினன் விதித்தகட் டளையாய்க்
கூர்ந்திடு வேல்விழிக் கோதையர் கழுத்திற்
சேர்ந்துமங் கலமாந் திருமுகத் திருவாய்
வம்பலர் மலர்ப்பொழில் வளர்புலி யூர்ப்பொன்
னம்பல வொளியோ டயிக்கிய முற்ற
மணிவா சகப்பெரு மான்றிரு வடியி
லணிவான் மலர்கடு யருச்சனை நிரப்பித்
திருந்துகர்ப் பூர தீபங் காட்டி
யருந்திரு வாசக வருளமு தோடளா
யொருதிருக் கோவையா ரோங்குதே வாரமாய்
வருசுவைத் தெய்வ மதுவினை மாந்திச்
சைவமே சமயந் தகும்பர சிவனே
தெய்வமென் றெவர்க்குந் திடமதி கொளுத்திப்

புற்புத மிளமைநீர்ப் பொறியது வாழ்க்கை
பொற்புறு செல்வநீர்ப் பொருதிரை யெனத்தெரீஇ
வளந்திக ழுலக மாதா வாகி
யுளந்திகழ் தெளியோ டுறைந்தமுத் தம்மையு
மயன்றலை கொய்தவ னடிதொழீஇ யுஞற்றிய
வியன்றவ மெலாமொரு மெய்யெடுத் தனையான்
றன்னிகர் பாற்கர சாமி
மன்னுயிர்க் குயிராய் வாழ்வுற் றனனே. (கசு)

வெண்பா

உற்றார் பிதிர ருறுவர்பசு வொண்டொடியார்
கற்றார் சிசுக்கள் கடவுணிதி—யற்றாரைப்
பற்றாக் காக்குநெறிப் பாலொழியாப் பாற்கரனை
மற்று ருலகினிகர் வார். (கஎ)

கலித்துறை

வார்வந்த பைங்கழற் றென்னன்முன்
னூனவர் மாண்டனரந்
நேர்வந்த செல்வரு மன்னர்பன்
னூளிந் நெடுந்தமிழை
யார்வந் தகக்கற் றலுத்தேமென்
பார்குறை யற்றவன்றே
கார்வந்த கைத்தலப் பாற்கரன்
வந்தனன் காண்மின்களே (கஅ)

விருத்தம்

காண்டகு தனது திருப்புகழ் பாடுங்
கவிஞருக் குதவவிக் கலிதான்
மாண்டகு செவ்வித் தன்றெனு நீல
மயிலிவர் சிவனருண் மதலை

தூண்டகு துணைத்தோட் பாற்கர சாமித்
துரைமகன் வாயிலாய் மறைவுற்
றெண்டகு நிதியந் தரத்திரு வுள்ள
மியைந்தன னென்னவெண் ணினமே. (கக)

அகவல்

எண்ணிய வெலாமரு ளிறையவ னடியுறாஉம்
புண்ணிய சிந்தனை புயக்க லாற்று
தன்புரு வாகி யாசைவேர் பறித்த
துன்பிலா வாத்தருந் துலங்கிடுஞ் சங்கஞ்
சேதுவிற் றிவ்விய தீர்த்தந் திளைத்துள
வாதுகள் கழீஇய வயவர்வாழ் சங்கஞ்
சுத்தசித் தாந்தநூற் றுணிபொருங் குணர்ந்து
சித்த மமைந்தவர் திகழ்ந்திடுஞ் சங்கந்
தீர்த்தயாத் திரைக்குச் செம்பொருள் பெறுவா
னார்த்தியி னணைந்திடு மன்பர்வாழ் சங்க
மூதகு சொற்றொடை முதமுறத் தொடுக்கு
மேதகு பெரும்புகழ் விபுதர்வாழ் சங்க
மக்கத மலர்சொரிந் தாசிசொற் றென்றுந்
தக்கவந் தணர்பலர் சார்ந்திடுஞ் சங்கம்
வாய்ந்திடு மமைவுடை மந்தண நெறிக்கே
காந்த ராமமாய்க் காண்டகு சங்க
நாகரோ டமரர்கோ னரவடி வெய்தி
யோகையி னணிபார்த் துலாவுஞ் சங்கஞ்
சென்றுகாண் பவரிது தினம்புதி தாகலி
னின்றுதா னமைந்ததா மெனுமெழிற் சங்க
மணியினோ பொன்னினோ வாய்ந்ததென் றெணவருந்
துணிவதற் கரிய சுடர்கிளர் சங்க

மலர்மண மளாய்ச்சிறு வந்துசா ளரத்தா
லுலவுபு சுகந்தர வோங்கிய சங்கம்
பரமத மறுப்புமெய்ப் பாங்குறுஞ் சைவத்
திரமத நிறுப்புந் தேங்கிய சங்க
மாரெதிர் தகையினு மருஞ்சுவைக் கவிக்கு
மாரியி னிதிமழை வழங்குஞ் சங்கம்
வித்தையி னசைகெழீஇ மிடிகோட் பட்டுள
மெய்த்தவர்க் கிருநிதி யீந்தருள் சங்க
குற்றமுள் ளனவொரீஇக் குடிநிதம் புரக்குங்
கொற்றவ ரமாத்தியர் குலாவிடுஞ் சங்கம்
வெற்றவெங் கதத்த வேத்திரக் காத்தருங்
கற்றகா விதியருங் கலந்திடுஞ் சங்கஞ்
சனம்பல விறையாய்த் தருவன பிறவொடு
தனம்பல வணிபல தழைத்திடுஞ் சங்க
நூற்க ணெலாம்படர் நுண்மதிப்
பாற்கர சேது பதிவாழ் சங்கமே. (உ௦)

வெண்பா

சங்கந் தொலைந்தபினுந் தாதாக்கள் பல்லோரா
லங்கங்கு நின்றதமி ழவ்வாறு—பொங்க
மனமுவந்த பாற்கரனோர் மன்னவரை யின்னு
மனமுவந்த தேவருளா னு. (உக)

கலித்துறை

ஆமாரி யென்னக் கிருபணர்ப் பாடி யகம்புழுங்கி
நாமா ரிருணக் கடன்மூழ்கி யெய்த்திடு ஞான்றெதிர்ந்து
காமாரி யன்புடைப் பாற்கர சாமியைக் காணவின்னே
போமாரினுஞ்சிறப்பீரென்றகாளைமெய்ப்புண்ணியனே. ()

விருத்தம்

புண்ணிய முழுதும் புரிந்தபுண் ணியமாய்ப்
பொங்கிருந் தவஞ்செய்த தவமா
யெண்ணியல் சைவம் புரிந்தமெய்த் தவமா
யிலங்குமிவ் வெழில்வடி வத்தை
விண்ணியல் கரத்து முத்துரா மலிங்க
வித்தகன் மேற்செய்த தவத்தி
னண்ணிய துங்கப் பாற்கர சாமி
நமேசனுய்ப் புடவினா டியதே. (௨௩)

அகவல்

நாடெழி லிராம நாத புரத்தா
னேடுறு மலர்த்திரு விசைந்தபொற் புரத்தான்
காண்டகு சிகரக் கந்தமா தனத்தான்
மாண்டவ முதிர்வினில் வாய்ந்தமா தனத்தான்
கனகங் கவிக்கருள் கைக்கந் தரத்தா
னனகனக் கத்தொடை யருக்கந் தரத்தான்
வதனமாந் தண்ணளி வழியம் புயத்தான்
முதமளிக் கருணாரு முல்லையம் புயத்தான்
காரிகை யார்விழிக் காவிக் குடையான்
காரிகை யார்தருங் காவிக் குடையா
னகுலனு மதித்திட நடாய்வரும் பரியான்
பகர்வரு வெம்பழி பாவம் பரியா
னவமணிப் பொன்முடி நகுமத் தகத்தான்
சிவமணி நீறருத் திருமத் தகத்தான்
றடநிகர் பெருமிடற் றந்தா வளத்தான்
றடநிரை வயல்கெழூஉந் தந்தா வளத்தா
னென்னலர் சிரமுடி யுழும்பதத் துணையான்
றுன்னுமன் பர்க்குச் சுகவிதத் துணையான்

மானிணை விழிகவர் மாசுந் தரத்தான்
பெரியவ ரனைவரும் பேசுந் தரத்தான்
றருமமெய்ப் பாற்கர சாமி
பொருவகன் மன்றமே புண்ணிய மன்றமே. (௨௪)

வெண்பா

மன்னியசீர்ப் பாற்கரமான் மாராச னவன்றே
முன்னிலவச் சைவ முறையைவைத்தான்—றன்னிகரா
நாட்டினு னல்லவரை நாட்டிலே செங்கோலாற்
காட்டினு னென்னலர்க்குக் காடு. (௨௫)

கலித்துறை

காடேறி டோமினி யேறு மலைபிற் கடற்கலத்திற்
றூடேறு மன்பருட் சேக்கு மறுமுகன் றன்னருளாற்
றேடேறு தார்முடிப் பாற்கர சாமித் துரையைக்கண்டு
நாடேறி யாயிடை வீடேறி வாழுவ நற்சுகத்தே. (௨௬)

விருத்தம்

சுகந்தரு மொழியு மணிவட நீறு
துலங்கிய தோற்றமும் பொறையு
முகந்தரு மிருந்தண் ணளியுமெய்ப் பொடிப்பு
முகிழ்நிலா நகையுமென் னேக்கு
மகந்தரு கனிவு மரும்பெருங் கொடையு
மாருயிர் மாட்டெழு மருளுஞ்
சகந்தரு புகழ்மைப் பாற்கர மன்னற்
சார்ந்ததுந் தவத்தினிற் றவமே. (௨௭)

அகவல்

தவாதுருள் பரிசனஞ் சார்தலி னிரவுந்
திவாவு மொளியருத் திருவநீள் வீதியும்

வீதிக டொறுந்தொறு மேவின ரெளிதுணை
வாதரத் துதவிடு மன்னசத் திரமுங்
கண்ணீர் கால்பொரக் கதிநா லாய்ந்துணர்
வெண்ணீற் றடியவர் விழைந்தமர் மடமுந்
தாவறு மேத்திய சைவநிலை நின்றவர்
மேவிடுஞ் சங்கர விலாசமா ளிகையும்
பூவடி கன்றிடப் புயங்கொளும் புனிதநீர்க்
காவடி மாக்கள்வாழ் கவினியல் சாலையு
மெங்குள பொருள்களு மீங்குள வீங்குள
வங்கில வெனுந்தரத் தலகிலா வணமு
மொருதினத் தமுதென வுறும்விருந் தினர்க்கு
வருதின மெலாமுண வழங்கிடு மனைகளு
மரபுளிச் சிறார்பலர் மதிக்கணக் காயர்பால்
விரவுபு கற்றிடு வித்தியா சாலையும்
விழைவுறக் கவிபுகல் விபுதருக் கென்று
மழையென நிதியருள் வள்ளியோர் மனைகளுங்
கீழ்ந்தறை போகாக் கெழுதரு நிலையில்
வாழ்ந்திடு பலபடை மன்னவர் மனைகளும்
மிருசெவி சுடவா சியலிடித் திசைக்கும்
பொருவக லமாத்தியப் புலமையோர் மனைகளுங்
கண்ணஞ் சாது கடாவுரு வத்தொடுள்
ளெண்ண முகாதவொற் றியன்மனைத் தொகையு
மாய்ந்தெளிர் கல்வி யறிவுரு வெனுந்திறம்
வாய்ந்துபண் புரைக்க வல்லவர் மனைகளு
மெண்ணுற லருங்கழு தெகின முறங்கினுங்
கண்ணுறங் காநகர்க் காவலர் மனைகளு
மழைவிழு திறத்துவா வழங்கிய மதத்திற்
குழைவிழ வதில்விழுங் கொடித்தேர்ச் சாலையு

மைந்தலால் வேறுமிக் கருங்கதி காட்டிடும்
வெந்திறன் முந்திய கந்துகப் பந்தியுங்
கடாமொரேழ் திறத்தவாய்க் கழையைச் சுழித்திடுந்
தடாமணி விலங்கனோர் தந்தியின் பந்தியுங்
கணக்கில குலவிடக் கமஞ்சூன் முகினிரை
மணக்குறுங் கொடிகிளர் வானிலைச் சிகரியுந்
தள்ளியோன் னலரைச் சால்பெருங் கிடங்கிற்
புள்ளையு மெறிந்திடும் பொறித்தொடி யிஞ்சியுஞ்
சித்திர மாடப் பத்தியுங் குலவி
யித்தரை மான்முக மெனுந்திரு நகரி
லரிறபச் சிற்பநூ லனைத்துமுற் றுய்ந்து
விரிவுறும் பயில்வுடை வினைநுண் மாக்களாற்
காவியப் புலவர் கருத்தவை வெஃக
மீவிய வும்பர்கள் விழிவிருந் தயில
வழகுருக் கொண்டென வமைந்தமா ளிகையில்
விழுமிய வோவிய விதம்பல நாட்டிப்
புக்கவர் கண்ணிணை புயக்கலாற் றுத
மிக்கநா னுவித விசித்திர விளக்குந்
திகந்த மளவுபு சேணினு மளாவுஞ்
சுகந்த நிலாவிய துணர்த்தொடை நிரையும்
பகற்சுட ராகப் பரிதிகள் பேரொளி
தகத்தரு முகுர சாலமு நிரப்பி
முயலுதி ரம்புரை முழுவிலைப் பட்டிற்
செயலுறு விதானந் திகழமே னிறுவி
யெழுமணி கதித்த முழுமணி பதித்த
துங்கந் தோய்ந்த தங்கம் வேய்ந்த
மங்கல ராம லிங்க விலாச
மென்ற தூய மன்ற மேய
மாற்றுயர் செம்பொ னேற்றணை யும்ப

ருன்னத முதலா வோரெழு திறமா
நன்னரி னெடுத்து நாலெட் டாக
விலக்கண வாது மேதையோர் வகுத்த
விலக்கண மவையொருங் கியலுரு வொன்றுறீஇத்
தருமமாந் தேவருள் சாந்தமெய் முதலா
வருமிதத் துணையெலா மருங்கினி னிலவச்
சயமிகு பாற்கர சாமிப்
பெயரினி லமைந்து பிறங்கிவீற் றிருந்ததே. (உஅ)

வெண்பா

இருந்தமிழும் வெண்ணீறு மேறியுல கெங்கும்
பொருந்தவரம் வேண்டிப் புவிமான் —திருந்தப்
புரிந்ததவத் துக்கோ புகழ்ப்பாற் கரனைத்
தெரிந்துதவி னனஞ் சிவன். (உகூ)

கலித்துறை

சிவப்பாகக் கண்ணுட் புழுங்கி வதனந் திருகிநிதி
நிவப்பான் மதர்த்திடும் வச்சையர் பாலின்னு நேருவமோ
தவப்பாலில் வந்து குணம்வாய்ந்த பாற்கர சாமிதனை
யுவப்பாக வெய்திக் கவிபாடி யின்பி னுறைகுதுமே. (௩௦)

விருத்தம்

உறைத்தமெய்ப் பத்தி யுளத்தினா றமுதா
யுயிர்க்குயி ராய்ச்சுகோ ததியாய்க்
கறைத்தனிக் களற்குந் தெருட்குரு வாய
கண்ணிரா றுடைக்கரும் புக்கும்
பொறைத்தவர் குழுவும் புகழும்பாற் கரப்பேர்
புணர்ந்தொளிர் புருடமா மணிக்குந்
துறைத்தமிழ்க் கவிதை தொடுப்பது போலத்
தொடுப்பமோ பிறசுரர் நரர்க்கே. (௩க)

34661

அகவல்

நாலையி லழன்றெழூஉ நஞ்சமு தருந்திச்
சுரருயிர் புரந்தருள் சுந்தரப் பெருமான்
றென்னரி லொருமகன் றிருமுடிக் கமைவவாய்
மன்னரு ளாடலின் வழங்கின வவைதா
மவ்வழி யழிந்தபி னண்டையி னின்று
மிவ்வழி யடைந்தவா மெனப்பட் டெவரெவர்
புந்தியுங் கண்ணும் புயக்கலாற் றுதொளிர்
சுந்தர மணிநிரை தொகுமுடிச் சிரத்தான்
றிரிபுண் டரமாந் திருவெண் ணீற்றொடு
பொருவக றிலகமும் பொலிந்த நுதலா
னிந்திரை கொஞ்சிட வெழிலெலாங் குலவிச்
சந்ததந் தண்ணளி ததும்பு முகத்தான்
புரவுறு முயிர்ப்பயிர் பொலியக் கருணையம்
பரவைமடை திறந்த பதும விழியான்
சீரார் மேத்தியத் தெய்வவான் றமிழ்மறைப்
பாரா யணமரூப் பவளமணி வாயான்
காசினி மயக்கிய கலியிருள் விடிய
வாசறு மிளநிலா வரும்புவெண் ணகையா
னானொடா ருயிரை யொருங்குற வுருக்குந்
தேனை மாரிக்குறழ் தேமென் மொழியா
னினப்பிற மணியா மெத்திறத் துக்குந்
தனக்குந் தானே தமரிடு கருவியாய்த்
திணிதரு மிருள்கால் சீத்திரா சதமாங்
குணனிடைப் பட்டுக் குலமறைச் சாதியாய்
வணிகனு கியசிவன் வழங்கிய தாய்த்திக
ழுணிவயி ரக்குழை யவிர்செவித் துணையா
னவிர்விலைப் பொற்றொடை யாபச் சரத்தொடு
கவினுயர் கண்டிகைக் கலன்றிகழ் களத்தான்

முல்லைமா மாலையு முழுமணி வலயமுஞ்
சொல்லிய லுஞ்சுவைத் தொடையலு மமற்றிரை
வாரிதி யுடுத்த வையகப் பொறையும்
போரியல் விந்தையும் பொலிந்ததிண் புயத்தான்
தினமணோந் திடவலி செறித்தபூண் யாத்தெனக்
கனமணிக் கடகங் கலந்தமுன் கையான்
சங்கொடு சக்கரந் தயங்கக் கமஞ்சூல்
மங்குலுக் குக்கொடை மடம்பயிற் றித்துண
ரினவம் போருக மிசைந்துதத் தப்பெரும்
புனலினி வீரம் புலராச் செங்கையான்
மாலரி மகனிடை மனைக்குய்த் ததினுங்
கோலமிக் குறுமங் குலியமார் விரலான்
மின்னொத் திடுமுப வீதமும் விலையுயர்
பொன்னுத் தரியமும் பூமலர்த் திருவு
மருமணி யிமைத்திடு மார வடுக்கலு
மருவிய கடிப்படி மக்கல வுரத்தான்
கொன்னிமி ரிடிக்குரல் குறையாக் கழல்களுந்
துன்னலர் முடிகளுந் துதைந்தபொற் பதத்தான்
றகைபெறும் பாற்கர சாமிசொன் மனமெய்
பகிர்வுறு யோக பதியாப் படியெலாம்
பரவுறுஞ் சேது பதியாய்த்
தரும பதியாய்த் தங்கினன் றானே. (௧௨)

வெண்பா

தானந் தருமந் தவச்சிறப்புப் பூசைபுரிப்
பானந்த வந்ததுங்கப் பாற்கரமா—லானந்தக்
கூத்தனரு ளாலிகத்துக் கொண்டசுகம் போற்பாத்தும்
வாய்த்தசுகம் முற்றடைகு வான். (௧௩)

கலித்துறை

வானோக்கு நீல மயிலாம்ப னோக்கும் வளர்மதியந்
தேனோக்கும்வண்டினஞ்செஞ்சுடர்நோக்குஞ்செழுங்கமல
மீனோக்கும் வெள்ள மகநோக்குந் தாய்முக மேபகவிப்
பானோக்கும் பாற்கர சேது பதிசெங்கைப் பங்கயமே. (௧௪)

விருத்தம்

பங்கமில் குணத்துப் பாற்கர சாமிப்
பார்த்திபன் படைத்திடு நிதிதா
னிங்ககன் பரவை யுலகெலாங் கரவ
விம்மியின் றுணையுமொல் காது
மங்குல்கண் முகப்ப வறிதுமொல் காத
வாரியின் மன்னிய மாண்பு
சங்கர னிராம நாதனுள் ளத்துத்
தருமரு ளென்னச்சாற் றுதுமே. (௧௫)

அகவல்

சாற்றரு நான்மறை தடவிய தவள
வேற்றுயர் கொடியுடை யிராம நாதனே
தெய்வமால் வினைகழூஉஞ் சேதுவில் வாய்ந்த
திவ்விய தீர்த்தமே தீர்த்த மேனிலை
யுண்மையி னுணர்ந்துசீ ருயர்ந்தபாற் கரனும்
வண்மைசா னம்பியே மன்ன னவனு
டேவையே புவியினிற் சிறந்த
தாவயின் வாழ்நரே யருந்தவ மாந்தரே. (௧௬)

வெண்பா

மாந்த ரெனுங்குழுவான் மற்றெவரும் பாற்கரனும்
வேந்தனையொப் பாவரோ மெய்க்கிரக—மாந்தொகையிற்
சேர்ந்தவெலாம் பாயிருள்கால் சீக்குமினற் கொப்பவெண
வோர்ந்தவர்க ளோதிடுவ ரோ. (௧௭)

கலித்துறை

ஓவா வருட்டகைச் சீராம நாதனென் ரோங்கியமெய்த்
தேவாதி தேவ னடிப்பத்திச் சைவ சிகாமணியிப்
பூவாழ வந்தருள் பாற்கர சாமிப் புயலியலார்
பாவாணராம்பயிரைப்பொன்மழைபெய்துபாலிக்குமே. ()

விருத்தம்

பாலிய தசையிற் பலகலை பயின்று
பதிபசு பாசநூற் பகுப்பின்
வாலிய வுணர்ச்சி வாய்ந்துண்மை நாயன்
மார்களி லமைந்துமா திடத்தான்
காலியல் பத்தி கனிந்துகா சினியாள்
காவல னுயபாற் கரனை
மாலிய லாத சேரமா னென்னின்
மறுப்பரோ மாண்புடை யவரே. (௩௯)

அகவல்

மாண்டகு சைவ மன்னுபு வாழ
வேண்டகு மடியா ரினிது வாழத்
தானமுந் தருமமுந் தவமும் வாழ
வீனமின் மறைகளும் யாகமும் வாழ
வானினம் வாழ வந்தணர் வாழ
மானிலம் வாழ வான்முகில் வாழ
மணிமுடி புனைந்து மகீந்திர னாகி
யணிகிளர் சேது வமலரா மேச
னுட்டகு கருணையா லோங்குதீர்க் காயுளு
மிட்டசித் தியுமேய்ந் தேற்றம் படைத்தோன்
மிடைந்துசெல் விருந்தினை விழைவுட னோம்பியில்
லடைந்திடு விருந்துபார்த் தடையாக் கதவினன்

றனதுசத் திரங்களிற் சந்ததஞ் சாருவோர்
மனமுற வுணவனம் வழங்கிடு மளியோன்
மிடியினை யென்று மிரிஞியாய்க் கண்டுள
மடிவுரு தோங்கிய வான்பெருங் கிளையினு
னெத்திறத் துயிர்க்கு மிதஞ்செய் குவதே
சித்தமா சற்றவர் செயலெனத் தெளிந்தோன்
சத்திய மேத்திய சமயமே சைவமென்
றெத்திறத் தவர்க்கு மியல்புளித் தெரிப்போன்
செறிந்தவர் பிழைசில செய்யினும் பொறுத்தவ
ரறிந்தினி துய்ந்திட வருண்மதி கொழுத்துவோன்
சேது பதிகடஞ் சீரையு நிறீஇயதின்
மேதக நானு விதப்புகழ் விரித்தோ
னுயிரத் திரட்டியோ டாமொரு நூருய்ப்
பாய கிராமப் பரப்பெலாம் புரப்போன்
பொருளெலா நாடொறும் புகநல் வழியிற்
றெருளினுன் மனத்திடஞ் சிறிதுந் திறம்பான்
சுகவாழ் வுறுநிலை துணிந்தக மமைந்து
சகவாழ் வுற்ற சனகர் பெருமான்
சமையா சாரியர் சரித்திர வமுதுண்
டமையா தெழுங்கணீ ராற்றினிற் றிளைப்போ
னுயனார் பூசைநா ணல்லடி யவர்க்கூஉய்
நேயமோ டுணவுடை நிதிவகை கொடுப்போன்
சிவபிரான் றெண்டர் திருத்தகு வாழ்வே
பவமிலா வாழ்வெனப் பாங்குறப் படிப்போன்
றாமிகு மெய்மனச் சுந்தரப் பாற்கர
சாமிமா ராச தயாநிதி வள்ளன்
மீவரு பெரும்புகழ் விளம்பும்
பாவலர் மனையிடைப் பயிலுநற் றிருவே. (௪௦)

முற்றிற்று.

பாண்டித்துரைத்தேவர்

நான்மணிமாலை

உ

குகமயம்

பாண்டித்துரைத்தேவர்
நான்மணிமாலை

காப்பு

வெண்பா

துங்கமலி பாண்டித் துரைக்கினிது சூட்டுவிக்கு
மங்கலமார் சொன்னான் மணிமாலை—சங்கரனாட்
செங்கைக் கணேசன் றிருக்குமர னொற்றைமருப்
பைங்கைக் கணேச னருள். (க)

பாநான் மணிமாலை பாண்டித் துரைத்தேவன்
மேனான் மிலைச்சியிட மெய்த்துணையாம்—வானாருஞ்
செந்திநகர்க் கந்தனருட் சிந்துசிவன் றந்தமைந்தன்
சந்தவர விந்தமலர்த் தாள். (உ)

நூல்

வெண்பா

சீர்வாய்ந்த சைவ சிகாமணிபொன் னுச்சாமி
பேர்வாய்ந்த செல்வப் பிரபுமைந்த—னேர்வாய்ந்த
பாண்டித் துரையையுற்ற பாவலர்க ளில்லமெல்லாம்
வேண்டித் திருமருவு மெய். (க)

கலித்துறை

மெய்யா ரணங்க டடவிய வாய்த விழியினர்தீக்
கையா ரமல விராமேசர் தாளிற் கனிந்ததிடம்
பொய்யாத பத்திமை யானோ வழிவழிப் பூங்கமலச்
செய்யாணப்.பாண்டித்துரைமரபோர்வயிற்சேர்ந்ததுவே.

விருத்தம்

சேரலர் தொழும்பாண் டித்துரைத் தேவன்
செழுங்கம லத்துச்சே யிழையா
ரோரிரு வரையுந் தணப்பற மருவி
யோங்குமற் றுவரிரு வருமா
யாரிடை யேனு மணையல ரெனநூல்
விளம்பிய பொருளினை யெறிந்த
தாரணி சடிலத் தண்ணலை வேண்டி
யன்றுசெய் தவமென லாமே. (௩)

அகவல்

ஆம்பெருண் மெய்க்கலை யாய்வது தினமே
யேம்பலி னுதவுவ திரப்பவர்க் கனமே
சார்வது சைவ சற்சன சங்கமே
யோர்வளர் கவித்தொடைக் கீவது தங்கமே
யகனுறச் செபிப்ப தைந்தக் கரமே
திகழ்தர வாழ்வது தேவைந கரமே
யென்று மேத்துவ திராமேச மூர்த்தமே
சென்று திளைப்பது சேதுவிற் றீர்த்தமே
யினிதுற வோம்புவ தில்லற முறையே
நணிமகிழ்ந் தாய்வது நற்றவ மறையே
பாண்டித் துரையெனப் பலரு
மீண்டித் துதிக்கவீற் றிருக்குமிந் திரனே. (௪)

வெண்பா

இந்திரைநின் றூடரங்கோ வின்ப மதுரமருச்
செந்தமிழ்மா னூடரங்கோ தேற்றகிலேஞ்—சந்ததமும்
பாமாலை சூடுமிசைப் பாண்டித் துரைத்தேவன்
றீமாலை மேவுமணி வீடு. (௫)

கலித்துறை

வீடெங்கு மாதுல ருஞ்சுவைப்
போதன வெள்ளிவெற்புந்
நாடெங்கும் பண்ணையும் வையைப்
பெருக்கு நறைத்தளவத்
தோடெங்கும் வண்டு முரல்புயப்
பாண்டித் துரைவள்ளறன்
மாடெங்கும் பாவல ருங்கவி
மாலையும் வண்மையுமே. (௬)

விருத்தம்

வண்டமிழ்க் கலைக்கு மங்கிளக் கலைக்கும்
வடகலைக் குங்குரு வாய்ப்பக்
கொண்டதிண் பொறைக்குப் புடவிமா னிதிக்குக்
குபேரனெண் குணத்தில்வெற் பனூர்
தொண்டருக் கடிமை கொடையினிற் சுரபி
சுசியினில் வரநதி யாக
வெண்டகு பாண்டித் துரைமதன் புருஷ
ரத்தின மெனவிருப் பானே. (௭)

அகவல்

இருந்தன மலையான் றிருந்தரு ணிலையான்
விருந்தரைப் பேணின னருந்தகைப் பூணினன்
புதுவையம் பதியான் புதனிகர் மதியான்
பதியிரா மேசன் றுதியுறு நேசன்
பாவல ரன்பன் மேவலர் வன்பன்
தேவைநன் னாட்டா னுவியன் மாட்டான்
பொன்னுச் சாமி யென்னப் பூமி
பன்னிய வறத்தான் பொன்னிய நிறத்தான்

தந்தருள் பாலன் முந்துமெய்ச் சீலன்
உரைசால் பாண்டித் துரைபேர்
மருவிய திசையே பரவிய திசையே. (௮)

வெண்பா

திசைநிலவுஞ் செங்கோற் றிறலரசர் பெற்ற
மிசைநிலவுஞ் சீர்தானு மிக்க—விசைநிலவும்
பாங்குறும்பாண் டித்துரையே பாமாலை சூடியவர்
தேங்குமிசைக் கொப்போ தெளி. (௯)

கலித்துறை

தெளியாய்கொ னின்னுடை மூதா
ளருமற்றைச் செல்வர்களுங்
களியார் மதுரக் கவிமாலை
சூடிய காட்சியராய்
விளியா தவரெனப் பட்டார்
விளிந்தும் விரைத்தளவத்
துளியார் மதுத்தொடை வாகணி
பாண்டித் துரைவள்ளலே. (௧௦)

விருத்தம்

வள்ளலங் கரப்பாண் டித்துரைத் தேவ
வழுதியங் கொருவற் கோர் கவிஞன்
றெள்ளியற் கவிசொற் றுறவினுய்ச் சிறிதுஞ்
சிரந்துளக் காதுசெம் மாப்ப
வெள்ளியம் பலத்தா னவனொடு சினவி
வியன் றளிப் புறத்துமே வியதாங்
தள்ளருங் கருணைக் கொள்ளைபா வலர்க்காய்ச்
சார்ந்ததென் பார்கடக் காரே. (௧௧)

அகவல்

தக்கமெய் மதுரந் தவாத தமிழு
மக்கணி பரம்பர னருள்விளை யாடலுஞ்
சங்கமு மேதகு சைவமுந் தழைத்த
மங்கலப் பாண்டி வளநாட் டொருசா
ரோங்கிய தேவையி லுறைந்தர சாண்ட
பாங்குறு சேது பதிகடஞ் சீரைத்
துலக்கிய பாண்டித் துரையைத்
தலக்கணிற் றிலகமாய்ச் சகலருஞ் சொல்வரே. (௧௨)

வெண்பா

சொல்லும் பொருளுந் தொடர வினிதமைத்துத்
தொல்லியறே யாமற் சுவைநிரப்பப்—பல்லியலார்
பாவாக்க நெஞ்சுபடும் பாட்டினைப்பாண் டித்துரையே
யாவாக்கி னுலறைவ தார். (௧௩)

கலித்துறை

ஆர்வந் தடையினுந் தக்க வுதவி யனைத்துஞ்செயுங்
கார்வந்தகைத்தலப்பாண்டித்துரைதனைக்கண்டெழிற்செங்
நார்வந்த பைங்கிளி யேசெய்மை நின்று தனுதுபெரும்
பேர்வந்தமன் றினுக்கியாமெய் துமாற் றினைப்பேசுதியே. ()

விருத்தம்

பேசவு மறியார் பிதற்றிடு வதைப்பாப்
பெற்றியிற் பெரிதுபா ராட்டி
வாசமூ நிதியும் வழங்கிடுஞ் செல்வர்
வடிதமிழ்ப் பண்டிதர் வருத்த
வேசகல் கவிதை கேட்கவுங் கில்லா
ரிதையமுற் றெரிந்திடு மிதுவோ
வாசக னிகர்பாண் டித்துரைத் தேவ
வழங்கிடுங் கலிக்கியல் வளமே. (௧௫)

வருத்தியி னட்புறீஇ யயிர்ப்பணு காதார்
கருத்தினிற் சுவையருக் கன்னலங் கட்டி
சோர்வுறுப் பாண்டித் துரைநன்
னீரரு காத நெடியவூ ருணியே. (௨௦)

வெண்பா

ஊரெல்லா மோடி யுலையு நமரங்கா
ளேரெல்லா மோருருவ மேந்தனையான்—பேரெல்லாந்
துன்னியமெய்ப் பாண்டித் துரைவள்ள லைப்பாடி
யின்னினிநும் மிற்போ யிரும். (௨௧)

கலித்துறை

இருளா ரிதர மதத்துற்ற செல்வரு மென்னுடைய
பொருளார் கவிகட்குப் பொன்மாரி பெய்யப் புரிவித்தசீ
ரருளார் முருகற் கயலானென் றிங்குனை யார்பகர்வார்
தெருளாரும்பாண்டித்துரைத்தேவசைவசிகாமணியே. ()

விருத்தம்

மணிவளர் தரங்க மறிகடற் குட்ட
வான்கல விரைவும்வந் ததிர்ப்பும்
பிணிகிளர் மெலிவை மூப்பினிற் றளர்வைப்
பெருக்கவுள் ளோய்ந்தபே துறனின்
னணிகிள ரவையை யணுகவல் விரைவி
னகலுமென் றயிர்ப்புறு தடைந்தேன்
கணிகிளர் கடம்பக் கடவுளைத் தொழுங்கைக்
கமலப்பாண் டித்துரைக் கனமே. (௨௩)

அகவல்

கனங்கொளுந் தண்டமிழ்க் கலைப்புள வவையெலா
மனங்கொள வடித்துணர் மதிநம ரங்காள்
கல்லாத் திணியிருட் கழுந்தா மனத்தனைச்
செல்லார் மலயச் சிறுமுனி யெனவுங்
கேளையும் புரவாக் கிருபணன் றனைக்கார்
கோளையுண் டெழுஞ்சரற் கொண்மூ வெனவும்
வெடிக்கட லாழ்ந்த வெந்துய ராளனை
யிடிக்கொடி யுயர்த்த விந்திர னெனவும்
பேயும் வெறுக்கும் பிணர்வடி வாளனைப்
பாயுஞ் சுவாகதப் பரியின னெனவு
மறிவிலாச் சேயுர னணைந்தா டழியும்
பொறையிலாச் சினத்தனைப் பூமிப னெனவுங்
கனவிலும் பொய்யையே கட்டுரைப் பானைச்
சனமெலாம் புகழ்மைச் சத்திய னெனவு
மெண்ணிய வெண்ணியாங் கித்திற மாக
வெண்ணியன் பருச்சொலா யிருந்தன வற்றி
லொன்றும் விடாம லொருங்குறத் திரட்டி
யென்றும் புனையா வியற்றிநாள் கழித்தனி
ரோவறு தவம்புரிந் துயர்குண முழுது
மேவிய தெய்வ வீடெனத் தேவைவாழ்
சுத்தவுட் பாண்டித் துரையை
யெத்திறச் சொல்லினு வியையுமா சொல்விரே. (௨௪)

வெண்பா

சொல்லாரும் பாமாலை சூடினன் வண்மையினு
னெல்லாரு மோர்வடிவா யேய்ந்தனையா—னல்லார்கள்
பல்லாரு மேத்தியிடும் பாண்டித் துரைபுகழ்மை
செல்லாத தெய்மா திரம். (௨௫)

கலித்துறை

திரங்காணுஞ் சீர்ப்பொன்னுச் சாமி
தவத்துற்ற சீலமலை
சிரங்காணுங் கங்கை யிராமேச
னன்பன் றிகழளகா
புரங்காணுந் தேவையிற் பாண்டித்
துரைச்செல்வன் பூங்கமலக்
கரங்காணும் பாவலர் வெங்கலி
யோட்டிடுங் கற்பகமே. (௨௬)

விருத்தம்

கற்பகக் காமு மணிவட நீறு
கலந்தொளிர் தோற்றமு முயிர்மாட்
டற்பக லாத வுள்ளமு மருந்தண்
ணளிவழிந் தொழுகுமா னனமும்
பொற்பக லாப்பான் முறுவலும் புகழும்
....
னற்பக னிகர்பாண் டித்துரைக் ககலா
நன்மைபு முன்னைநாட் டவமே. (௨௭)

அகவல்

தவமுற முயன்று சதமக நிரப்பி
புவனையி னுவணையை யோம்பிய பேருடை
யன்னவ ரவுணரா லரக்கராற் பிறராற்
பன்னருங் காலம் பரிபவ மெய்தித்
துன்றிய துயர்க்கடற் றேய்ந்தன ரன்றி
யென்றுகொல் சுகமா யிருந்தன ரிசைமின்
நம்மனோ ருயிராய் நயனநன் மணியாய்ச்
செம்மனத் துணைவனுய்த் திருவில்வீற் றிருக்கும்

பாண்டித் துரையெனப் பலர்புகழ் நாமம்
பூண்டுத் தமமெலாம் புனைந்தவன் வழிவழி
சேது பதிகளாய்த் திருமுடி புனைந்து
மேதகை படைத்த வேந்தரில் வழியில்
இன்னலங் கடலினி லின்னலெய் தினரென
வின்னமு மொருசொ லெழுந்தில தற்றுற்
சீரிய மதியினிற் றேறில
யாரது தவம்பெரி தேற்றமென் பதுவே. (௨அ)

வெண்பா

என்னு லிசைக்கவற்றோ வென்போல்வா ரெல்லாருஞ்
சொன்னலு முற்றுமோ தூயகர—முந்நாலா
யேய்ந்தவனைத் தாழ்ந்திடும்பாண் டித்துரைதான் வீற்றிருக்கும்
வாய்ந்த கனகமலி மன்று. (௨௯)

கலித்துறை

மன்னிய செல்வப் பெருவாழ்வி
னீரென்றும் வாழ்ந்திருக்க
வின்னியல் பாடுமென் போல்வார்
துயரி லிளைக்கவற்றோ
தன்னிக ராமுற் றுயிரோம்
பியபொன்னுச் சாமிதந்த
பொன்னிய லானமெய்ப் பாண்டித்
துரைச்செல்வப் புண்ணியனே. (௩௦)

விருத்தம்

புண்ணிய நிலைக்கோல் பொற்புற வோச்சிப்
புவிப்பொறை பொறுத்தபைம் பொலம்பூட்
டிண்ணிய வரைத்தோட் செயரகு நாத
சேதுகா வலன்முதற் செல்வர்

நண்ணிய புகழ்மை நாடொறு மோங்க
நம்பிபாண் டித்துரை நாட்டிக்
கண்ணிய கழக நிறுவிக்கா தலர்க்குக்
கலைகள்சந் ததங்கற்பிப் பானே. (௩௧)

அகவல்

கற்றவர் தூக்கினு னற்றிறந் தூக்கினன்
முற்றலர் தருமன் புற்றமெய்த் தருமன்
மன்றனை மனத்தா னென்றவெண் மனத்தான்
குன்றுறழ் நிதானன் பொன்றலி னிதானன்
றேவையம் புரியான் பாவம் புரியான்
காவண னையா னுவுரை னையா
னருண்முக மதியான் றெருண்மிகு மதியான்
பொருளியல் கலையா னிரணியக் கலையான்
றிருகுள மிசையான் பெரிதுறு மிசையா
னொருவரும் போகி தரையமர் போகி
சைவமா மித்திரன் செவ்வியோர் மித்திரன்
மௌவல்சூழ்மொய்ம்பன் றெவ்வர்தாழ்மொய்ம்பன்
றிருநுதற் காப்பான் மருவினர்க் காப்பான்
சுரர்மறை தொழும்பன் னிருபுயன் றொழும்பன்
றுங்கமெய்ப் பாண்டித் துரைதன்
சங்கமே புங்கவர் தங்கிய சங்கமே. (௩௨)

வெண்பா

சங்கத்தி லன்று தருமிக்குக் கண்கிழித்த
சங்கத்தான் பாவுரைத்த தன்மையென்றுஞ்—சங்கத்துக்
கீபுநெறி காட்டியவா றென்பார்பாண் டித்துரையே
நேயமுறக் கொள்ளுமிதுன் னெஞ்சு. (௩௩)

கலித்துறை

நெஞ்சேயங் குற்றிங்கு வாளா வரில்வசை நேருமென்னே
லஞ்சே னிகர்விழி வள்ளி மணாள னருளிலனே
மஞ்சே யனசெங்கை பாண்டித் துரைக்கு வழிப்பட்டகா
ணஞ்சேயுட்டெவ்வருஞ்சேர்ந்தாரைக்காண்பர்கணங்கெய்தவே.

விருத்தம்

எய்த்தலை வெய்தும் பாவலர்க் கீயா
னென்றிடிற் கலையிலே யாசை
வைத்தலை யொழிவான் வறியனே யென்னின்
வழிவழி வருநிதி மலையான்
செய்த்தலை வாளை சேலுக டேவைச்
சீலப்பாண் டித்துரைச் சீமான்
முத்தலை வேலோ னருச்சனை முடித்துண்
முற்றுற நெகிழ்முறை யானே. (௩௫)

அகவல்

முறைமையிற் றேவையாண் முன்னவர் சூடிய
வெறிகதிர் மணிமுடிக் கிசைந்திடுஞ் சிரத்தான்
புண்டர மாகிய புனிதவெண் ணீறு
மெண்டகு திலகமு மிசைந்திடு நெற்றியான்
பொங்குதண் ணளிகுலாய்ப் பூரண மதியையுஞ்
செங்கம லத்தையுஞ் சிரிக்கு முகத்தான்
எள்ளுறு மிடித்தழ லெறும்கெடக் கருணையாம்
வெள்ளஞ் சுரந்திடும் விரைமலர் நோக்கான்
விழிப்புனல் கால்பொர மெய்த்திருத் தொண்டர்கள்
பழிப்பரும் பாவகை படிக்கும் வாயான்
துன்பினுற் றவர்செவித் துளைவழி யோடியுள்
ளென்பையு முருக்கிடு மினியமென் மொழியான்

கனகமெய்ச் சரத்தொடு கவினுறு கண்டிகை
யனக வடமு மமர்ந்தகந் தாரத்தான்
மாசுண மலைதனை வளைத்தென நவமணித்
தேசுறு மங்கதந் திகழிணைப் புயத்தா
னணிகிளர் பசும்பொனு லமைந்துமே தக்க
மணிகிளர் கடகம் வயங்கிய கையா
னிறைவிலைச் செம்பொனு னேர்ந்துமா மணிநிரை
குறைவறக் குலவுமங் குலியமார் விரலான்
மாவணி மதாணியும் வயங்குப வீதமுந்
தாவினுத் தரீயமுந் தயங்கிய வுரத்தான்
வன்னந் துறுங்கர மாயனும் வேட்கும்
பொன்னந் துகிற்கெழில் புணர்த்திடு மிடையான்
சந்தத மேத்திய சைவா கமவழிச்
சிந்தைநெக் கியற்றிடுஞ் சிவார்ச்சனைப் பத்தியான்
பரவிய பெரும்புகழ்ப் பாண்டித்
துரைதவ மேதவத் துறையினில் வாய்ந்ததே. (கசு)

வெண்பா

வாய்ந்த சிவபத்தி மாறுப்பாண் டித்துரையே
யீந்தவர்மாய்ந் தாலு மிருந்தவரே—மாய்ந்தவர்கண்
மாய்ந்தவரா சாரிரந்தார் வாழ்ந்திடினு மாய்ந்தவரென்
றுய்ந்தவர்கள் சொன்னு ரறி. (கஎ)

கலித்துறை

அறிவா லுயர்ந்திடும் பாண்டித்
துரைச்செல்வ வான்றவர்கள்
செறிவா லுயர்புரு டோத்தம
னேயிட்ட சித்திகளு

மெறிவா ரிதிப்புவித் தீர்க்கா
யுளுமென் னிதையத்தமர்
நெறிவார் குழல்வள்ளி கொண்க
னருளு நினக்குவந்தே. (கஅ)

விருத்தம்

வந்தனை யன்பர் மனத்திடைச் சேக்கும்
வதனமு விரண்டுடை வேலோன்
கந்தனின் னருளிற் காட்டவுண் ணம்பிக்
கழறிப்பாக் காதலி னுய்த்தே
னிந்திர னிகர்பாண் டித்துரைத் தேவ
யாதுநீ செய்யினு மதனுல்
வந்திடு மிசையும் வசையுநின் பாலே
மன்றவென் றும்வளர்ந் திடுமே. (ககூ)

அகவல்

வளந்திகழ் தேவையா மாண்பதி வாசன்
றளந்திகழ் தளவத் தார்த்தொடை வாசன்
றன்னிகர் பொன்னுச் சாமிமான் மருமா
னன்னய மாரகு நாயகன் மருமான்
பாற்கர சேது பதிக்கு மூத்தோன்
நூற்கடல் கடந்த நுண்மையின் மூத்தோன்
ஆலய மடங்களி லுறுப்பல பணியான்
மேலவ ரெலாம்புகழ் வியன்குணப் பணியான்
சைவமாண் கதிரொடு தழைத்த கனலி
யெவ்வமாம் புறவன மெரித்த கனலி
கந்தனெம் பெருமான் கவியுறு பத்தியான்
சந்ததஞ் சற்சன சங்கமார் பத்தியான்
மந்தவந் தின்பொடு வையையார் நாட்டினன்
முந்தையோ ரிசைபோன் முதிரிசை நாட்டினன்

நிலமயி லோடிரு நிறத்து மணந்தான்
குலவலா மாதரைக் குறைவற மணந்தான்
முக்கணு னருச்சனை முறைவழா மனத்தான்
சக்கரத் தொடுகரந் தங்கிய மனத்தான்
கலிவெயி லொழித்திடுங் கைக்கந் தரத்தான்
பொலிதரு கண்டிகை பூண்டகந் தரத்தான்
அருட்கவிப் பாரா யணமரு வாக்கினன்
தெருட்கழ கம்பல திருந்துற வாக்கினன்
பால வனத்தப் பதியினைப் போற்றுவோன்
சீலமெய்த்தொண்டரைத் திருக்கறப்போற்றுவோன்
என்ன வருந்தகு மிதுவென வளத்தா
னென்னலர் துயர்க்கு முதவிடு முளத்தான்
ரூனுங் கவியெனுந் தருக்கறத் தணிவா
னேனையர் கவித்தொடை யிதையமொத் தணிவா
னேய்வுறும் விருத்தர்பா லோங்குமே மத்தான்
மேவுமிற் கண்டரு மிக்கவே மத்தான்
றுதிவளர் பாண்டித் துரைதன்
விதிவளர் சீரின் மேலெது சீரே.

முற்றிற்று.

மயில்வாகன வம்ச
வைபவம்

உ

சிவமயம்

மயில்வாகன வம்ச
வைபவம்

பூமேவு மிதழியந்தார் பொலிந்த வேணிப்
புனிதனிருஞ் சைவநெறிப் பொருண்முற் றோர்ந்த
தூமேவு பெரும்பத்திச் சிரத்தை யாளன்
சுரநதிகோத் திரத்துக்கோர் சுடரே யன்னான்
மாமேவு மணிமகுட மன்னர் மன்ற
மந்திரிசுந் தரவுடுவில் வாச னின்றேம்
பாமேவு மிணைவாகுப் பருப்ப தத்தம்
பலவாண முதலியுள்ளான் பழைய சீரான். (௧)

கந்தமலர்க் குவளையந்தார் கவினுந் தோளான்
காணிகளு மிருநிதியுங் கணக்கி லாதோ
னிந்தையிலாச் சிவசமய நெறிவ ழாதோ
னிருபாரு ளுத்தியோக நெடிது பூண்டோன்
சந்ததமோம் பிடுந்தரும தானச் செல்வன்
றண்பணைசூ ழுடுப்பிட்டித் தனதன் சீர்த்தி
முந்துமத்தி மாப்பாண கதிர்கா மக்கோன்
முற்றவத்திற் றந்தநல்லார் மூவர் தம்மில். (௨)

திருந்துதிரு முகத்திருவாய்ச் செல்வ வேமச்
சிகரத்தின் வீற்றிருந்துஞ் செருக்கொன் றின்றி
விருந்தினர்தென் புலத்தவர்கண் மிடியி னோர்கண்
மென்மழலைக் குழந்தைகளை விழைவிற் காத்தாள்

பொருந்தியிடத் தயைபுனைந்த புனிதச் செல்வி
புண்ணியமெய் யுற்றெனப் புகல நின்றாண்
மருந்துற்ழு மதுரமொழி வள்ளி யம்மை
மாதரசி யைப்புணர்ந்து மகிழ்வி னாலே (௩.)

தருமயில்வா கனமுதலி யரச மன்றிற்
றக்கவமைச் சியல்பூண்ட தலைமை யோற்கு
மருமலர்ப்பெண் மங்கைநா யகிக்கும் பின்னர்
வருமருளம் பலமுதலி வள்ளற் கையான்
றருமமிதி னாங்கில்லை யெனச்கல் லூரி
தாபித்தோ சருக்குவே தனந்தா னீந்து
தெருமரல்செ யும்பிணிக்கு மருந்து நல்கித்
தீனருக்குத் தானுண்ப தினமு மீவோன். (௪)

கொற்றவர்க ளிறைமையிய லாய்வா ரென்றுங்
குறுகிடுவார் மன்றிற்றங் கிராமத் துற்ற
வற்றமறுஞ் சனத்தொகைக ளியாவுந் தம்பா
லணைவுறு தகங்களித்திங் கிவன்பா னிற்கு
முற்றலைமை யாணைதெரீஇ யிறும்பூ தெய்த
முன்னுபுகழ் மூதாளர் முயல்வி னீட்டிப்
பெற்றபுக ழிற்பன்ம டங்கு கூட்டிப்
பிறந்ததிசைக் கிசையென்றும் பிறங்க வைத்தோன்.

தன்னிலத்துந் தாரவல்லி நிலத்து முன்னோன்
றகுநிலத்துந் தவ்வையருண் மருக னான
மன்னிலத்தும் வரும்வாரித் தொகைக ளெல்லா
மருந்துக்கும் விருந்துக்குங் கழகத் துக்கும்
பன்னிலத்து நின்றுவரும் பசியா ளர்க்கும்
படிவருக்கும் பிதிரருக்கும் பரிவி னல்கிப்
பொன்னிலத்து மன்னவனுந் தருமத் தேவும்
புரவலரு மேத்திசைப்பப் பொலிந்தா னன்றே. (௬)

தந்தைபிதா மகன்பிரபி தாம கன்சீர்ச்
சனனிமுதன் மூவரவர் தம்முன் னாக
வந்தவழிப் பிதிரரெலாம் வாழ்ந்த வூர்கண்
மற்றவற்றி னுறுமாக்கண் மரபுக் கெல்லா
மிந்தவளம் பதியுயர்ந்த திவரை மேவ
விருந்தவஞ்செய் தனமோவென் றெண்ண வைத்த
வெந்தையுயர் வறியாரே யறியார் பானு
விலங்கொளியுங் காணாதா ரிவர்தா மன்றே. (௭)

இரவுபகன் மருந்துதவி யாயுள் வேத
விருங்கலைபோ தித்திளையோர்க் கோச ரோடு
மரபுழிநேர்ந் துழிக்கலைக டேற்றித் தன்சீர்
மாநிலவ ளாகத்தை மருவிப் பார்க்குங்
கருமமெலா நம்பிக்கை வாய்ந்து கண்ணோர்
காவிதியர் பாலாக்கிக் கால நேரிற்
பொருவிலிரா மாயணத்துப் பொருளைக் கூர்ந்த
புத்திமைந்தர்க் குணர்த்திடுவான் பொருந்து மல்லில்.

அறமேயிவ் வுருவெனமெய் யறிஞ ரேத்து
மருண்மயில்வா கனமுதலி யண்ண னுள்ளத்
துறமேலை யியனிற்கப் பொருள்கள் காணி
யுரிமைநிலை நிற்பத்தந் துவந்து நாமும்
பெறமேவி யொருநாளும் பிறழ்வு றாமற்
பெட்புறவா ழுதிரென்ற பெரியோ னம்பொ
னிறமேரு வரைமுடியி னிலவ வோங்கு
நெய்ச்சுடர்போ லிசையெங்கு நிறைய நின்றோன். ()

அந்தியகா லத்திற்றமிழ்க் ககத்தி யன்போ
லமர்ந்தசர வணமுத்துப் பண்டி தன்சீர்
மு்துகுணச் சம்பந்தப் புலவன் றன்னை
முற்றொடரன் பினிலழைத்து முகமன் பேசிச்

சிந்தையுறும் பெருங்களியா லிவனை யோங்குஞ்
செந்தமிழா சிரியனெனத் திருத்தி வைம்மின்
சந்ததமு முமைமறவா னென்றன் ஞோர்கைத்
தலத்திலெனை யடைக்கலமாத் தகவி னீந்தோன். ()

தோன்றுபடு கேண்மையின ரிவருட் டுயர்
துகடபமுன் கல்லாநூற் றெருதுதி யாவுஞ்
சென்றுநிதம் விரையாது திருந்தக் கற்றுச்
செஞ்சுடர்வேற் கரத்தமலன் சீர்கள் பாடி
யென்றுமியற் குரவனு யினிதின் வாழ்தி
யெனத்திருவாய் மலர்ந்தருளி யிகவாழ் வோய்ந்து
மன்றுகிழ வோனுலகத் துற்றுன் றாக்கு
மதிவிசுவா வசுவெய்த மற்றி தன்முன். (௧௧)

நீண்டபுகழ்க் கோப்பாயி னிமலச் சைவ
நெறிமைக்குங் குலத்தினுக்கு நிதிக்கு மல்கும்
காண்டகைய நிலத்தினுக்கு மொருவ னுகக்
கனமுறுசுப் பிரமணிய முதலிக் கண்ணன்
பூண்டபெருந் தவத்துதித்துக் கற்ப கத்திற்
பொலங்காம வல்லியெனப் பொற்பு வாய்ந்து
நாண்டலைய நான்மைக்கும் பொறைமுன் னுன
நற்றெருகையா வினுக்குமில்லாய் நண்ணி நின்றுள் ()

எம்மையெலாந் தலையளியின் வளர்த்த வன்னை
யிருமரபுந் துய்யவன்னை யிரந்து நேர்வார்
தம்மையெலாம் புரந்தவன்னை தரும தான
தவம்வளர்த்த வன்னைதண் ணளிக்கோ ரன்னை
மெய்ம்மையெலாந் திகழ்விரதம் விழைந்தோம் பன்னை
விமலசிவ புராணங்கள் விழைய வன்னை
செம்மையெலாந் தன்வழிபோற் றிருத்தி நின்ற
சிதம்பரநா யகித்திருவைத் தீமுன் வேட்டான். (௧௩)

மாதவனுஞ் செந்திருவு மதனுங் காதன்
மனையவளுஞ் சசியுமக வானுங் கஞ்சப்
போதவனு நாமகளும் போலத் துய்ய
போகவநு ராகசுகம் பூண்டு வாம
மாதவனை யென்னிதயஞ் சேக்குஞ் செய்ய
வடிசுடர்வேற் பெருமானை வணங்கி நோற்ற
மாதவமெய்ப் பயனிதென்றென் றெவரும் வாழ்த்த
வலம்புரிமுத் தினிலொருசீர் மைந்தன் வந்தான் (௧௪)

வந்திசையம் பலவாண முதலி நாமம்
வாய்ந்துபுவி மான்சேம வைப்பா யோங்கிச்
செந்தமிழு மிங்கிலிஷுந் திருந்தக் கற்றுச்
சிட்டரெலாஞ் சென்னிமிசைச் செங்கை கூப்பி
வந்தனைசெய் தேத்தியிடு மான நீய
மருவியறத் தொகைகளெலாம் வழாம லோம்பிச்
செந்துவர்வாய்ச் சியர்விழிகள் புயக்க லாற்றுச்
செவ்விமுதிர் காளையினிற் றிகழ்ந்தான் மாதோ. (௧௫)

மருதநில மன்னவனுய் வைகு மாற்றல்
வச்சிரத்தைத் தாங்குதலால் வேந்த னென்று
கருதுதலாற் கோப்புராப்பாற் றனத் தென்றுங்
களிப்புறலாற் கற்பகச்சார் காணு மாற்றுற்
பொருவரிய புலவர்களைப் போற்ற லான்ற
போகியெனப் புகறலா லாயி ரங்கண்
மருவுதலாற் பொன்னூரத்தா லும்பற் கண்ணே
வைகுதலால் வாசவனுய் வயங்கு நீரான். (௧௬)

கண்டிகையுந் திருநீற்றுப் பொலிவு முண்மைக்
கதியுதவுஞ் சைவவியல் காட்டு மாண்பும்
பண்டிகைப்பு ருவமல பரம ஞானப்
பாவமுத வொழுக்கொழியாப் பவள வாயு

மெண்டிகையு மென்றுநிலா யிலகு சீரு
    மிதரமதத் திண்காட்டை யெறியுஞ் சீருந்
தண்டிகையி லுறுஞ்சீரு முறலால் வாய்மைச்
    சண்டைமறைப் பிள்ளையெனத் தயங்கு சீரான். ( )

வாரிதியின் பாரமிசை வயங்கு மூர்கா
    வற்றுறைச்செங் கோனடத்தி மரபு காத்த
சூரியனம் பலவாணத் துரையைத் தந்த
    தொன்மரபுக் கொருதீபஞ் சுகுண மேரு
நாரியலில் லறம்புரந்த செல்வ மங்கை
    நாயகிசின் னுளின்வா னுடு நண்ணப்
பேரியலன் னவடுணைவ னுன சீர்ச்சுப்
    பிரமணிய முதலியதன் பின்ன ரம்மா. (௧௮)

தக்கவர்க ளமர்கந்த ரோடைத் தாமோ
    தரமுதலி சிறப்புமுற்றத் தழுவி நின்றோன்
நக்கனடி மனத்தமைத்தோன் றந்த மங்கை
    நாயகியைத் துவிதீய தார மாக்கொண்
டக்கினிமுன் முறையினில்வேட் டாரு மேத்த
    வலர்மயிலு மாயனும்போ லளவ ளாவி
யொக்கல்களும் பிதிரர்களு முவந்து போற்ற
    வோங்குநுகர் வெலாநுகர்ந்தங் குறைந்தா ரன்றே

அன்னவர்கள் பன்னெடுநா ளாற்றி வைத்த
    வறமுருக்கொண்டெனவுதித்தின் னமுதைத்தேனைக்
கன்னனறுஞ் சுவையைக்கைப் பித்த தீஞ்சொற்
    களங்கமிலா மதிவதனக் கார்மென் கூந்த
லன்னநடைச் சிங்கவிடை யார ணங்கை
    யருந்தவஞ்செய் தவமாஞ்சின் னச்சிப் பொன்னை
வன்னிவலஞ் சுழித்தோங்க மணந்தில் வாழ்வை
    மரபுளியோம் பிச்சுகமாய் வாழ்ந்து பெற்ற. (௨௦)

பிரதமபுத் திரன்மயில்வா கனப்பே ரண்ணல்
    பிறக்றாரு ளம்பலக்கோன் பிரபு வாஞ்சுப்
பிரமணியன் றிகழ்வள்ளி யம்மை கோலப்
    பெய்வளைத்தோட் கதிராசி பிரச மானு
பிரதமொழிச் சேதுமபி லுடலா றுக்கு
    மின்னுயிரொன் றேவென்ன வெவரும் வாழ்த்தச்
சாதநிறை பொறையிரக்கந் தருமந் தானஞ்
    சைவநெறி யெலாந்தழைக்கத் தகவின் வாழ்ந்தார். ( )

ஆதியுறு முதலிமா ரிருவ ருக்கு
    மருமருக னுகியவம் பலவா ணக்கோன்
மாதரசி பருவதவர்த் தனிமா செல்வ
    மகபதிசுப் பிரமணிய வள்ள றந்த
பேதையைவேட் டிருமகளிர்த் தந்தா னன்னோர்
    பெயர்மங்கை நாயகிப்பொன் பிறங்கும் பங்க
சாதமுகக் கதிராசித் தையைய லென்பார்
    தம்முயிரி னெவ்வுயிருந் தாங்கு நீரார். (௨௨)

குலத்தளவோ வுற்றவெழி லளவு மாகுங்
    குணமென்னக் கூரியர்கள் குறித்துச் சொற்ற
நலத்தளவுக் கிசைந்திடுமேற் கோளா நின்ற
    நாரியர்க ளிவர்பாற்றோன் னுட்டொட் டுற்ற
நிலத்தளவு நினைப்பளவா மற்றே சார்ந்த
    நிதியளவு மிதுமுன்னு ணிரப்பு கோன்மைப்
பலத்தளவே யெனவெடுத்துப் பகர்வ தன்றிப்
    பங்கயற்கும் பிறிதுரைக்கப் படுவ தின்றே. (௨௫)

நிதித்திறமுங் குலத்திறமும் வரிசை யாணை
    நிலத்திறமு மினத்திறமு நீடுஞ் சீர்த்தித்
துதித்திறமு முதலாய வுலகக் காட்சித்
    தோற்றமெனத் துணிந்துபெருந் தொண்டர் போலக்

கதித்திறநன் குறவிரிக்குஞ் சைவா சாரக்
    கட்டளையா யாங்குரைத்த கடன்முற் றோம்பும்
விதித்திறமொன் றேயுயிரை வீட்டி லேற்று
    மேதகைத்தென் றெழுகுமிந்த மின்னார் தம்மில் ()

வயலடுத்த வுடுப்பிட்டி மன்னன் சைவ
    மணிமணிய வுத்தியோக மரபிற் காத்தோன்
புயலடுத்த துணைக்கரத்தான் சிவன்றாட் பூசை
    பூண்டசிதம் பரநாதப் புனித வள்ளல்
இயலடுத்த புதர்பனுவற் கியைந்த சுத்த
    வில்லத்தை விளக்கின்றி யிலங்க வைத்துச்
செயலடுத்த தெலாந்திருந்துங் கற்பிற் செல்வத்
    தேவியெழில் வேதவனத் தெரிவை யோடும்.(உ ரு)

கந்தவனத் தறுமுகனைக் கடையேன் கண்ணிற்
    காரிருளைத் தேய்த்தவருட் கடலை வேற்கைச்
சுந்தரனை யடிவணங்கிப் புரிந்த நோன்பே
    தூலவடி வுற்றன்ன தோற்றத் தாளைச்
செந்திருவுங் கொஞ்சுமுகச் செவ்வி யாளைச்
    சீலநிறை வள்ளியம்மைச் செல்வ மானை
மந்திரியை நிகர்செல்வ னவாலிச் சைவ
    மணிமயில்வா கனமுதலி மணந்தான் றீமுன். (உகூ)

சாலநெடு நாட்புரிந்த தவமுஞ் சைவ
    சமயமுமா யொருவடிவந் தாங்குற் றன்னான்
கோலமுள மும்விழியும் புய்க்க லாகாக்
    குமாரகு ரியமுதலி கொற்ற மன்னர்
சீலமுறுஞ் சாதுசன சங்க நெஞ்சிற்
    சிரத்தினில்வீற் றிருக்குமிருஞ் சீர்த்தி யாளன்
ஞாலமயின் முகத்திலக மான மங்கை
    நாயகியை மணப்புணர்ந்து நன்னர் வாழ்ந்தான். ()

மணியமுத்துக் குமாரகு ரியமா ராசன்
    வாய்ந்தசிவ குமாரகு ரியன்கோ மன்ற
நணியசர வணமுத்து முதலி வேட்ட
    நவமணிப்பூ ணொளிர்தங்க நறைக்க டம்பற்
பணியுமிரும் பத்திமையி னிறைந்த பொன்னம்
    பாவைவள்ளி யம்மைகுணப் பால வான
வணியணியுஞ் சதாசிவகு மார சூரிய
    னருந்தவத்தி னிவர்பயந்த வன்பார் மக்கள். (உ அ)

நல்யாழைப் பழித்தமொழி யம்மை தெல்லி
    நாரிதனைப் பிறக்றாரு ளம்ப லக்கோன்
கல்யாணம் புரிந்திசையம் பலவா ணச்சீர்க்
    காளைதிகழ் ராசரத் தினத்தைத் தந்தான்
தொல்யாக பதிமனைநேர் வள்ளி யம்மைத்
    தோகையைச்சுப் பிரமணியன் றேய்ந்து கந்தன்
சொல்யாவும் படித்தவனை நிதமு மேத்தித்
    தொழுஞ்சிவசுப் பிரமணியச் சுதனைத் தந்தான்.(உகூ)

வள்ளியம்மைக் குயிலைமுத்துக் குமாரன் றந்த
    வாகைவயித் தியலிங்கன் மரபில் வேட்டுத்
தெள்ளியசீர் மக்களொரு மூவர்த் தந்தான்
    செந்துவர்வாய்க் கதிராசிச் செல்வ மானைத்
தள்ளருஞ்சீ லம்படைத்த வநுசன் றாமோ
    தரவள்ள லக்கினிமுன் றழுவிச் செய்ய
வள்ளியசீ ரிருமைந்தர்த் தந்தான் காமன்
    வயங்கிடுசீர்ச் சாமனென வழுத்து நீரார். (ஙo)

நுதலிளைய மதிநிகருஞ் சேது வென்னு
    நோக்கருஞ்சீர் படைத்தாளை மணந்து தாஞ்சொ
லுதலிலொரு தவறுமிலா மேன்மை சான்ற
    வொருமூவர் மக்கடமை யுவந்து தந்தான்

கதலிபலா மாத்தெங்கு கந்தி கன்னற்
        காடுகிளர் நவாலியூர் நாகை நாத
முதலிநுவ ரெலியாவிற் சிறுப்புவான
        முதல்வனிரும் பட்டமெலாம் முறையிற் பெற்றேன்.

மாணிக்க மாமயில்வா கனக்கோன் பத்தி
        வழாத்திலக வதியென்ன வழங்குஞ் சோதி
யாணிப்பொன் னைத்தழுவ வவள்பின் வந்த
        வாரணங்கு வள்ளியம்மை யனத்தைக் கஞ்சப்
பாணிச்செவ் வேற்பெருமான் பதத்தி லன்பு
        பழுத்திடுமம் பலவாணப் பிறக்றர் வேட்டான்
ஆணிற்கண் ணன்மயில்வா கனன்கே ளெல்லா
        மருந்தவத்திற் சைவர்செல்வ ராயி னாரே. (௩௨)

முத்தமிழ்ப்பண் டிதன்புகழ்ச்சே னாதி ராச
        முதலிவழி வந்தருள்கந் தைய நாம
வித்தகன்மெய்த் தவத்துதித்த நெல்லை நாத
        விதரணன்பின் னிளவலிரு வாலை வேந்தன்
சித்தமுதற் கரணமொன்றுந் திரிபில் லாத
        சீலமலி நாகலிங்கச் செல்வன் சைவ
பத்திபழுத் திட்டபடு தரச்சீ மாட்டி
        பருவதவர்த் தனியையுளப் பரிவின் வேட்டான். ()

நங்கையிவட் கிளையசிவக் கொழுந்தை நாகை
        நாதமுத லிச்செல்வ னயந்து தந்த
துங்கமுறு சேனாதி ராசன் வேட்டான்
        றொன்மைதிக ழுத்தூனாந் தொடர்பி னன்னேன்
றங்கைதைய னாயகியை யத்வக் கேற்றான்
        சாந்தரத்ந மாமயில்வா கனக்கோன் வேட்டான்
மங்கையிவட் குற்றிடும்பின் னிளவ லாகி
        வந்தமைந்தன் கனகநா யகன்றான் மாதோ. (௩௪)

சிறந்திடுமம் பலவாண முதலி செல்வத்
        தேவிவள்ளி யம்மைதன்பாற் சேர்ந்து நின்று
பிறந்தவளத் தவர்மாண்பு தெரிந்த வாறு
        பேசப்பட் டதுசுகத்தை நல்கி யென்று
மறந்துமொரு தீமைகளுஞ் செய்யா தெந்த
        மன்னுயிர்க்கு நன்மைகளே வழாம லாற்றி
யிறந்தமயில் வாகனமா ராஜ ராஜ
        னியல்புசில வெடுத்திசைக்கப் படுவ திப்பால். (௩௫)

மேதினியை யாண்டுசெங்கோன் மேன்மை பூண்ட
        விக்ரேறி யாநாம வியன்சீ மாட்டி
மாதரசி சங்கமுதற் சங்க மெல்லா
        மல்கிமயில் வாகனமா ராசன் சீர்த்தி
சாதுசன சங்கமுறுஞ் சைவ சங்கந்
        தமிழ்வளரும் பெரியதலைச் சங்க மெட்டு
மாதிரமுங் கொழுந்துவிட் டோடித் தொல்லை
        வானவர்சங் கந்தோறும் வளர்ந்த தம்மா. (௩௬)

காவலர்க டருமுழக்கு முத்தி யோகக்
        கடன்பரித்தோர் தருமுழக்குங் கலங்கும் வெந்நோய்
ஓவலர்க டருமுழக்கும் விரதம் பூண்ட
        வுத்தமர்க டருமுழக்கும் விருந்துக் கெய்து
மாவலர்க டருமுழக்கும் விருத்தர் பால
        ரந்தகர்க ளநாதர்தரு முழக்கு மான்ற
பாவலர்க டருமுழக்கும் பரவை யேழிற்
        படுமுழக்கைவிழுங்கியெழும்பலமன்றத்தான். (௩௭)

வீட்டுக்கு நிலமமையா தெனயான் கேட்ப
        விரைந்தநுச னெடுவினவி விழைந்தந் நாளே
நீட்டித்தந் தருளியதா தாவை யெய்த்தோர்
        சேமவைப்பைப் புருஷரத் தினத்தைப் பல்வே

றேட்டுக்கு மடங்காத விசைமை யானை
யின்பமயில் வாகனரா சனையிம் மக்கட்
கூட்டுக்கு ளுதித்ததெய் வத்தை யின்னுங்
குளிர்முகங்கண் டிடுவேமோ குவலை யத்தே. (௩௮)

தன்மக்க டம்பியர்க டங்கை மார்கள்
சகலனருண் மக்கள்சந் ததமு மொன்றித்
தன்மக்க ளுளநிறுத்தித் தளர்ந்து ளோரைத்
தாங்கித்தொன் னிலையொன்றுந் தணந்தி டாமன்
மன்மக்கள் போற்செல்வ வாழ்வின் வைக
வைத்தமயில் வாகனமா தவனை மேலெச்
சென்மக்கட் டிருமுகங்கண் டல்ல லெல்லாஞ்
சீரியநன் மொழிகேட்டுத் திகழு வோமே. (௩௯)

பின்னவர்மக் களைத்தனது மக்கள் போலப்
பேணிநிதஞ் செய்வதெலாம் பிறழா தாற்றி
யன்னவர்கள் பாகமெலா மவர்பா லாக்கி
யரிட்டவிணை விழிக்குமணி யொன்றே போல
நன்னலமார் மருகரொடெல் லாரும் வைக
நம்பிமயில் வாகனமால் செய்த தெல்லா
மென்னருக்கு மிதமாஞ்சோ தரர்க்கு வஞ்ச
மியற்றிடும்வன் கணருளத்தி லெழுப்புந் தீயே.(௪௦)

தென்னிலங்கைத் தீவினுக்கோர் தீப மென்கோ
தெளிதருசஞ் சீவியென்கோ செந்தே னென்கோ
மன்னர்முடி மணியென்கோ தரும தான
மாளிகையென் கோசுகுண வடவெற் பென்கோ
புன்னெறியி லாக்கருணைப் புணரி யென்கோ
போதருமோக் குஞ்சுகந்த புட்ப மென்கோ.
சொன்னதரு வென்கோமெய்ச் சுரபி யென்கோ
துங்கமயில் வாகனமா துரையைத் தானே. (௪௧)

ஊரெல்லா முறைபவர்க ளொருங்கு தங்க
ளுள்ளத்து நயனத்து மொழிவு றுமற்
பேரெல்லாம் பெறுமயில்வா கனச்சீர்த் தெய்வப்
பிள்ளைதிரு முகங்காட்டிப் பேசி யின்சொற்
சீரெல்லாந் திரியாமற் றிகழ்மி னென்று
தேற்றியன வரதநம்பாற் செல்வ தோரா
தாரெல்லா மழுக்காறு தூண்டத் தூண்ட
வன்னவனைத் துஞ்சினனென் றறைந்திட் டாரே. ()

விரிந்தமனை யிதுதொன்று தொட்டெம் முன்னோர்
மேதகைய விளைவினா லன்ன தானம்
புரிந்ததின்மெய்க் கிளைவளமு மெழிலுஞ் செல்வப்
பொற்றைகளு நாடோறும் பொலிந்த பொற்பாற்
பரிந்ததனைச் செய்தியென்ற மாம னாமம்
பலவாணத் துரையுட்கோள் பழுது றும
லரிந்தமனின் னிகர்கதிரா சிப்பெண் ணோடு
மநவரத மன்னமிட்டுண் ணருத்திச் செல்வன். (௪௩)

மருமகனைக் கொழும்புக்குய்த் துதையத் துண்ணா
மதுரவுணா வுண்டுவாய் பூசி மெய்யிற்
றெருமரலி னாசனத்தின் வைகிக் கண்ணிற்
றிமிரமடை யாமலைம்மேற் செறிந்தி டாம
லொருமனமா யுறங்குபவர் போலு றங்க
வுள்ளுயிர்கா யத்தினைவிட் டோடிற் றம்மா
தருமவகை புரிந்ததிறங் காண்மின் காண்மின்
றனந்தொகுத்துக்கரந்துவைக்குந்தறுகணீரே. (௪௪)

நோக்கமவை யொன்றினையே நோக்கல் போற்றன்
னூலிடைமா னுந்தானு நுவலச் சற்றும்
வாக்கிலமை யாத்தரும வகைமுற் றோம்பும்
வள்ளலிவன் வயினென்றும் வைக லின்றி

யாக்கமெலாந் தீவழிக்கே யாக்கு முள்ளத்
தாற்குருட ரகங்களினு மசைத லாற்செம்
பூக்கமலை யைச்சினந்து புவியி னீருய்ப்
பொன்றுகெனவைவர்நுண்ணூற்பொருடேர்ந்தாரே.

வீட்டிற்ரு னிலாவமையம் பசியி னெய்த்தோர்
மேவிடினு முனிந்துபுறம் விடாம லுண்டி
யூட்டிடவும் விரதமனுட் டிப்போ ரெப்போ
துற்றிடினு மப்போதங் குண்ண வுள்ளம்
வேட்டவுண வீந்திடவும் வயாநல் லார்கள்
விருத்தர்சிசுக் கட்கமையம் விதியா துண்டி
வாட்டமற வுதவிடவு முமக்க டைத்த
வண்ணமெனப் பாசகரை வைத்த நீரான் (௪௬)

மெய்யறிஞர் மகன்றந்தைக் காற்று மென்ற
விதிக்கெடுத்துக் காட்டிவனே யென்று மேதைச்
செய்யரவர் புகழநின்ற தொன்ரூ வன்னோன்
சிறுவரினை யார்மக்க டெரிந்தவ் வாறு
வையமதித் திடநிற்பக் கண்டு மேனோர்
மக்களையு முகமனுய் வந்த வாறு
பொய்யுரைத்து நமரங்கா ணுங்கள் பட்ட
புன்மையெலா மின்றளவிற் பொன்றிற் றன்றே. ()

கங்கைமர புலகுற்ற காலந் தொட்டுக்
கலப்பொன்று மில்லாமற் கடியப் பட்ட
பங்கமுறு புலாலுண்டல் கள்ளு மாந்தல்
பரசமயப் படுகுழியிற் பதறி வீழ்தல்
அங்கிநிகர் மிடிவெதுப்பி லல்ல லெய்த
லருட்பரம னடிமறத்த லாதி யில்லாத்
துங்கமுறு கிளைக்குலா சலங்கள் சூழச்
சொன்னகிரி யெனநடுவிற் றுலங்கி நின்ரோன். (௪௮)

நீதிதிகழ் பிதாமகன்போல் மருந்து நோய்க்கு
நிதமெளிதிற் றந்துணவு நெறியி னல்கி
மாதரும நிற்கநிலங் கல்லூ ரிக்கு
வரைந்துதவி வகுத்துமா ணுக்கர் பல்லோ
ரோதியிட வூக்கிநில மில்லார்க் கன்பி
னுதவியில்ல மாதுலருக் குளுற்றி யீந்த
மேதகைய தயாநிதிக்கு விளிவு சூழ்ந்த
விதிக்கொடியார்வினைக்கொடியார்க்'கென்செய்வாரே.

எற்றமுறு மன்பினர்க ளெனினு மன்ன
திலாதவர்க ளெனினுந்தன் னில்லுற் றுட்கோள்
சாற்றமுன முகத்திற்றண் ணளிமீ தூரத்
தக்கவுண வூட்டுவதுந் தழலின் வெம்மை
யாற்றுகருப் பிணிலுமவ்வா ருற்று மாறு
மடுத்தடுத்து வந்திடினு மொருநாட் போலப்
போற்றுவதுந் தகைவாரைக் கடியு மாறும்
பொருந்தியது சிறப்பாவிப் புனித ணுர்க்கே. (௫௦)

நிலத்திணற் கல்வியிணு னிதியா னீடு
நீதியிணு லாணையிணு னிமிர்ந்த யாக்கை
வலத்திணு லிடையினுமிங் குயர்ந்தா ருண்டு
வயங்குமயில் வாகனமா ராசன் போலக்
குலத்திணு லுயர்வதொல்லா திதனோ டாதி
கொண்டதிற மத்தனையுங் கூடி நின்ற
நலத்திணற் ருனிவனை நாருக் கெல்லா
நாயகனென் றுலகமெலா நவிலு மாறே (௫௧)

வள்ளலிவன் மரபிடைநல் வதுவை வேண்டி
வரம்பறுநா ளத்தனைவான் செல்வர் பல்வே
றெள்ளரிய பணிசெய்து மியலா வாறிங்
கியாரறியா ரினித்தவங்கள் செய்து மைந்தர்க்

கொள்ளினுங்கோற் றொடிமின்னார்க் கொளலொல் லாது
கூர்தவங்கள் பன்னெடுநாட் குறித்துச் செய்துந்
தெள்ளியசீ ரும்பரவர் சேர்வ ரென்று
செப்பிடினு மொருவாறு செப்ப லாமே. (௫௨)

சங்கரியங் கைவிரலிற் றோன்றி யீசன்
சடையமர்ந்தோ ரரசனருந் தவத்திங் குற்றுப்
பங்கமுறும் பவவிருளைப் பாற்றித் தெய்வப்
பதிகடொறு மிருந்தபா கீர திப்பேர்க்
கங்கையைவே ளாளர்குலத் தலையென் றோர்கள்
கழறிலரே னையர்கள்குலத் தலைசொற் றலுந்
துங்கமயில் வாகனவே ளுதித்த கங்கைத்
தூய்மைமுத லியவங்கண் சூழ்ந்தி டாவே. (௫௩)

பன்முறையும் புணர்த்திவைத்த விடரா மாழிப்
படரொன்று மடையாது பாது காத்த
நன்முறைகண் டோதண்ட முறவொட் டாது
நடுவிளங்க மதிகொளுத்தி நவையிற் றீர்த்த
முன்முறைகண் டோர்மெலியர் வலிய ரானோர்
முகம்புடைத்துக் கண்ணீர்முந் நீரின் மூழ்கி
மன்முறைமுற் றுணர்ந்தவள்ள லிவற்கா மக்கண்
மனைமுதலோ ரினும்பெரிது மாயு மாறே. (௫௪)

கடைபோகச் செல்வநுகர்ந் தவரில் லென்று
கற்றவர்கள் வடித்தெடுத்துக் காட்டு மாறு
தடைபோகு மெனத்துணிவா ரில்லை யேனுந்
தண்பணைக டொறுமயிலைச் சாலந் துள்ளி
மடைபோகும் புனலினட விடுங்சோப் பாயில்
வாழ்மயில்வா கனனுமவன் மரபிற் றோன்றா
னடைபோகு முன்னவரு மதற்கு மாறாய்
நண்ணியதை ஞானிகளு நயப்பர் மாதோ. (௫௫)

மாத்தழன்முன் மங்கலநாண் பூட்டி டாமன்
மணத்தலயன் மனைப்புகுதன் மறுகி னிற்றல்
கூத்துவிழாக் கூட்டமங் காடிக் கேகல்
குனிதருமூப் பெய்திடமுன் கோயிற் கேகல்
பூத்ததினம் புறத்துலவல் புனலா டாது
புனிதவுடை யுடாதுநீ றிடாது தேவை
யேத்தியிடா தட்டில்வினைக் கேக லின்ன
வென்றுமிவன் குலமடவார்க் கில்லாப் பண்பே. (௫௬)

குருவான மெய்கண்டார் சேக்கி ழார்மெய்க்
குணத்தொண்டத் தொகைப்பட்ட வொருபன் மூவர்
திருவாரும் வெண்ணெய்நல்லூர்ச் சடையன் றீயிற்
செட்டிக்கா யுயிரிழந்த வெழுப தின்மர்
தருவாரு நிழலுவணைத் தலைவற் காகத்
தரையினட்ட தகையவனுங் கோப்பா யுற்ற
பொருவாரில் லாமயில்வா கனனும் வந்த
புனிதகுல மொன்றுநற் புகழ்வே றுண்டோ. (௫௭)

தன்னிலைமை பரிக்கமக்க ளனுசர் மக்கள்
சார்ந்தமரு மக்களுளர் தக்கா ரென்று
மன்னியமெய்ப் புகழுடம்பை நாட்டிப் பூத
மயலுடம்பு தனைவிட்டு வண்மை சார்ந்த
நன்னயமார் சிவலோக நாடிச் சென்று
னம்பிமயில் வாகனவே ணமரங் காணீ
ரின்னலுறீர் பிறந்தவர்க ளிறக்கை திண்ண
மிறையொருவ னல்லான்மற் றிறவார் யாரே. (௫௮)

மண்ணவர்கண் மணிமயில்வா கனமா ராசன்
மாத்தருமம் விடாத்துணையாய் வழிமுன் போதப்
பண்ணணையுந் தெய்வவருட் பாடற் செங்தேன்
பராநந்த மூட்டிடமெய்ப் பத்தர் பாங்குற்
றுண்ணசையி னரகரசம் போமென் றங்கை
யுயர்சிரத்தி லிருத்தவிசை யுடம்பை நாட்டி
விண்ணவர்க ளெலாம்பரவ விமல லோக
மேவினா னினிவரவு மோவி னானே. (௫௯)

முற்றிற்று.

பிரபாவப் பாமாலை

உ

குகமயம்.

பிரபாவப் பாமாலை.

கலித்துறை

எடுத்தா யிரஞ்சொல்ல வேண்டுவ
தோநினக் கென் றுநல்லோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொன்னிமிர்ந்
தோடிக் குறைவற்றெழீஇ
யடுத்தாரு மூவுல குங்கேட்கு
மென்ப தறிந்துளோகா
ணடுத்தாழ் விலாத புகழ்க்கந்த
சாமி நரேந்திரனே. (க)

ஆசிரியவிருத்தம்

கந்தசா மிப்பிள்ளை யேவல்வை நகராச
கவிஞர்கண் மதித்ததருவே
கதிபெறுங் கோஞசலேந்திர னிருந்தவங்
காட்டுஞ் சிரேஷ்டமதலாய்
காவலர் மதித்தவட் டைஸ்வரிய பிரமுதித
கனநிலவு குணபூஷண
களிதருந் தண்ணளி வழிந்தொழுகு முகசந்த்ர
கந்தர்ப்ப நிகர்சுந்தர

மந்தகா சத்தினிய தேமொழியி னெவ்வெவர்
மனத்தையு முருக்குமன்ப
வடிதமிழ்க் காவிய புராணசோ திடநூல்
வழாதவகை தேர்ந்தநிபுண

வரமுறுங் கீரிமலை யறுமுகன் கோவிறனை
மாண்புட னமைத்ததுங்க
மட்டுக் களப்பினிற் கடிமணச் செல்வியொடு
வாழ்ந்திடும் புருஷோத்தம
கந்தனா ரவிந்த மங்கைகுடி கொண்டவொளிர்
கண்ணாடி யன்னமரும
கலபமயி லூர்ந்திடுமெம் மானிரும் புகழையே
கனவிலுங் கருதுதொண்ட
காசினி யளந்துமிசை யாசினி யளந்துகிளர்
ககுபமு மளந்தபுகழோய்
கைவல்ய நெறிதரும் பூதிசா தனமேன்மை
கைவிடா தினிதுயர்ந்தோய்
சிந்தனா தீதமுரு கன்விரத முற்றுந்
திறம்பாது நோற்குநியம
தேறுமெய்ப் புண்ணிய மௌனத்தையுங் குறையாது
செய்துமுற் றியவித்தக
தெண்டிரைக் கடளுவி வந்தேற் குளத்துவகை
சேர்ந்துபொரு ளுதவிசெய்து
தீர்க்காயு ளுந்திகழ்சர் வாபீஷ்ட சித்தியுஞ்
சேர்ந்தனரு ளாற்பெறுதியே. (௨)

கலித்துறை

நொந்தேமந் தோவென வெங்கலிப்
பட்டு நுணங்கியுடல்
வந்தேய் பவரன்ன மாடைபொன்
பெற்று மகிழ்வதன்முன்

கந்தேய் புயக்கந்த சாமித்
தயாளன் கனிந்தமொழிச்
செந்தேனை மாரியி லாடியெச்
சோகமுந் தீருவரே. (௩)

பண்ணோக்கு மின்மொழி வள்ளி
மணாளன் பதாம்புயத்தை
புண்ணோக்கு மன்பினன் கோணாச
லேந்திர னோகைமைந்தன்
விண்ணோக்குங் கைத்தலத் தான்கந்த
சாமி விழைந்தகடைக்
கண்ணோக்க மேநன் மருந்தாவ
தென்றுங் கலிப்பிணிக்கே. (௪)

பொன்னகை யார முகுர
மருமத்தன் போற்றலரூர்
புன்னகை யாற்சுட்ட சங்கர
தேசிகற் போற்றன்பன்வெஞ்
சொன்னகை யாதுங் கொளாக்கந்த
சாமிச் சுகுணவள்ளன்
மென்னகை வானில வாற்கலிக்
கங்குல் விழுந்திடுமே. (௫)

சேயா யரியுந்தித் தாமரை
வந்த திசைமுகனே
யீயாத புல்லர் மனைதோறு
நீவைத்த வேமவெற்பை
வாயார் சரத மொழிக்கந்த
சாமி மனையில்வைத்தா
லோயாமல் யார்க்கு மகிழ்ந்தள்ளி
யள்ளி யுதவுவனே. (௬)

கலிவெண்பா

ஊரெல்லாம்பண்டிதரு மோங்குகொடைச்செல்வரும்வாழ்
பெரெல்லாங் கொண்டு பிரிவின்றிப் —பாரெல்லாம்
பன்னியிட நின்றொளிர்யாழ்ப் பாணத்தி னுத்தரத்தின்
மன்னியிடும் வல்லை வளம்பதியிற் —சென்னிநிகர்
கோணாச லேந்திரனுங் கோணா மனச்சனகன்
மாணார் தவத்துதித்த மைந்தனே —யேணாருங்
கீரிமலை யாறுமுகன் கேழ்கிளர்பொற் கோவிலெழச்
சீரியசெம் பொன்னளித்த செல்வனே —யேரியலுங்
காயமரும் பப்புளகங் கண்ணருவி பாயவைவேற்
சேயவனைக் காணுந் தியானத்தாய் —மாயமலி
வெய்ய விதரமதம் வீழச் சிவசமயம்
வையமுழு தோங்க வளர்ப்பவனே —செய்யநெறிச்
செந்தில் வடக்குத் திருத்தணிகை நாப்பணுறு
முந்துதலந் தோறு முருகனரு —ளுந்தியிடச்
சென்றுசென்று சேவித்துத் தீர்த்த மகிழ்ந்தாடி
மன்றவளர் பத்தி வழாநெறியோய் —குன்றலுறு
மேயதுலைச் சட்டி விரதத்திற் கந்தனன்ப
ராயவர்ப்பூ சித்தருத்து மண்ணலே —யாயுமிசை
நீடுதல யாத்திரைச்சேர் நேயர்க் குணாவரிசி
யாடை நிதியுதவு மாண்டகையே —பீடுதரு
மெண்ணீடு மாறெழுத்து மீசனெழுத் தைந்துமொளிர்
வெண்ணீறு மோம்பும் விரதனே —யுண்ணீர்சா
றேக்குளவெற் பிற்பிரசச் சீகரம்பெய் தென்னவின்சொ
லோங்குளநல்லோர்க்குரைக்குமுத்தமனே —தாங்குமிணர்ச்
செங்கமலப் போதைச் சிரித்தொழியாத் தண்ணளிவான்
றிங்களுக்கு நல்குந் திருமுகத்தாய் —பொங்குமிசைச்
சாதுசன மானவிருந் தங்கவணி நாப்பணவிர்
மாதுகுசீர்த் தெய்வவர மாமணியே —மேதகைய

வெல்லா நயமு மிசைந்ததெய்வ நாயகியா
நல்லா ளைமணந்த நாயகனே —செல்லாருங்
காநிமிரு மட்டுக் களப்பான தானத்தின்
மேனிமிரும் வாழ்வுகந்த வேந்தனே —வானிமிருஞ்
சைவ நெறித்தவத்தர் சார்ந்திடின்மற் றன்னவரைத்
தெய்வமெனப் பூசிக்குஞ் சீலனே —யெவ்வமெலாம்
வெல்லுந் தவர்பாவ மெய்புமன மும்புகலுஞ்
சொல்லும் பகிர்வுபடாத் தூயவனே —தொல்லியல்சால்
வாலியநல் லுண்மைவள மாருப் பலதிறத்து
நூலினிருங் கேள்விநுகர் நுண்ணியனே —யேலுமிய
னன்றியொன்று செய்தோ னவையனந்தஞ் செய்யினுமந்
நன்றியொன்றையேபேணு நட்பினனே —யொன்றியெழுங்
கோடிரிந்து மாரிபொய்த்துக் கோரக் கருப்புறுமந்
நாடனினு மீகைவிடா நல்லவனே —பாடுமுறை
வேத்தவையிற் காரியமு மேவாமற் சார்ந்துழியின்
வாய்த்தவெழுத் தான்முடிக்கும் வண்மையனே —காத்தியென
வுற்றொருவன் முன்ன முதவிபெற்றோன் பின்வரினு
மற்ற மறவோம்பு மாண்டகையே —குற்றமலி
கள்ளக் கிருபணருட் கார்த்தவிரும் புங்குழைவு
கொள்ளக் கொடைபயிற்றுங் கோமானே —வெள்ளத்தி
னேர்ந்துழிநேர்ந் தாங்கே நிதியமெலாம் புண்ணியத்திற்
றேர்ந்து மகிழ்ந்துதவுஞ் சீமானே —கூர்ந்தறிவி
னென்றுமமெகள தாரியர்கள் யார்க்குஞ் சிகாமணியா
யின்றமிழ்ப்பா வாணர்வைத்த வேந்தலே —துன்றிவளர்
காணிவளம் வாணிகச்சீர் காண்டகைய வங்கவளந்
தாணுவென மேவுவிக்குந் தாடாளா —பேணிநித
முற்றவரை யந்தணரை யொக்க றமைவிருந்தைக்
கற்றவரை யாதுலரைக் காப்பவனே —சுற்றிவள

ரிந்தநே மிப்புடவி யெல்லா மிசைபரந்த
கந்தசா மிப்பிள்ளைக் கண்மணியே—யந்தநாட்
செய்த தவத்தெடுத்த தேகத் துறும்பலன்முற்
றெய்தினு யார்பிறரீ தெய்தினர்—மெய்தழுவ
நம்மனை னெல்லாரு நண்ணியொருங் கோதினுநின்
செம்மைகிளர் சீரெல்லை சேருமோ—விம்மையுறு
மின்ப நுகர்ச்சிமுழு தெய்தினு யின்னுமுண்டே
லன்பினுகர் வாயிதனுக் கையமின்றே—பின்பினுகர்
பேறுமடை வாய்குகனர் போராத் திருவருண்முன்
னேறியிடு மின்ப மெலாம். (௭)

கலித்துறை

ஐயா வனத்துக்கு வாணிகத்
துற்றன ரன்பரிங்ங
னெய்யா தவர்வர முன்னர்ப்
பயாண மிசைவுளதேற்
பொய்யா தவர்சொன்ன பொன்னீவன்
யானென்ற பூவைவைக
மெய்யார் புகழ்க்கந்த சாமிக்கு
வான்செல்வம் வேறென்னையே. (௮)

அனத்துக் கிசைந்த நடைத்தெய்வ
நாயகி யாரணங்கு
மனத்துக் கிசைந்த மனைத்தைய
லாகிய மாண்பதினே
கனத்துக் கிசைந்த புகழ்க்கந்த
சாமி கருதியென்றுஞ்
சனத்துக் கிசைந்த படிகொடை
மேனின்ற தண்ணளியே. (௯)

கலிவெண்பா

ஆவிக்கு ளாவியா யாடியுல கத்தனையு
மேவிப் பிரியாத மெய்க்கடவுள்—சேவிக்கு
மன்பருளப் போதி லனவரத நீங்காம
லின்பமெலா மீயு மிறைக்குணத்தா—னென்பதின்மர்
முன்னவனென் றேத்தவந்த மூவிரண்டு மாமுகத்து
மன்னனிறைச் சட்டி மகாவிரதஞ்—சொன்னபடி
சாந்தனுட னேற்றவன்றன் கற்பனைகொண் டுண்ணெகிழ்ந்து
வாய்ந்தபத்தர்க் கின்ப மதுரவுண—வீந்துகிள
ராம முதலியதந் தாடைவகை தந்துதவி
யேமமிருந் தெய்வதல யாத்திரையி—னுமவர்க்கு
வாரிதொறு மன்னம் வழங்கி முதியர்முதற்
சோருநரைப் பண்டி தொறுஞ்சேர்த்து—நேரகலுந்
தூயகதிர் காமமுற்றுச் சூழ்ந்தங் கருச்சிப்போர்
பாயபுகழ் மன்னர்முதற் பல்லோரா—லாயமதிப்
பெத்திறமு மெய்தி யினிதவர்கள் கோடித்து
வைத்த விடுதியினில் வாசவனார்—பத்திபோல்
வாழ்ந்துசொன்ன மன்ன மணிப்பூ ணுடைபலவுஞ்
சூழ்ந்துதவி யெவ்வெத் துறையார்க்குந்—தாழ்ந்துவினை
வாட்டுங் கதிரை மலையேறிச் சார்ந்தவர்கண்
மாட்டுங் குகன்கருணை மல்குவிளை—யாட்டியலைக்
காட்டியத்தா வன்னாய் கதிர்வடிவே லாசெய்ய
சூட்டுநிமிர் சேவற் றுவசத்தாய்—வேட்டுவமின்
காதலா பூங்கடம்பா கார்த்திகைமைந் தாவிட்டய
மாதுமையாண் முத்தமிடு மாமணியே—யாதிநடு
வந்தங் கடந்தநித்தி யானந்த மாவாழ்வே
சிந்தை தெவிட்டாத தெள்ளமுதே—மைந்துதிக
ழேற்றிலிவ் ரீசனு ரேத்துகுரு வேயென்னப்
போற்றிவிடை பெற்றுவரும் புண்ணியமே—மேற்றகையோர்

சாற்று புகழ்க்கந்த சாமிமனக் கோவிலிடை
யேற்றிவைத்த வின்ப வெழில்விளக்கே—நாற்றிசைமா
வத்திரனார் தந்த வசிட்டமுனி தேவிக்கும்
புத்தியினாற் கற்புரைக்கும் பூங்கிளியே—சுத்தமலி
சேந்தனரு ளெம்பெருமான் சீர்ப்பத்தி வல்லியென்றுங்
கூர்ந்து படருங் கொழுகொம்பே—சார்ந்தவியன்
ஞாலம் பரவுதெய்வ நாயகியா மெய்ச்சுகுண
கோலங் கனிந்தமடக் கோகிலமே—நீலநிறச்
சேய்மைமுகிற் றோற்றந் தெரிந்துமயி லிங்காடுங்
காய்கதிரோற் கண்டலருங் கட்கமலம்—வாய்மையிது
செல்வுழிக் கண்ணொருநாட் காண்பினுமென் றான்றவர்கள்
சொல்வசன நெஞ்சத்திற் றுன்னிநிற்கு—மெல்லியலே
நாணைய னீபுதல்வி நன்மருக னின்கணவன்
றானிதனை நம்பிடுதி தப்பல்லத்—தூநிலவு
முள்ளத்தா னீர்செய்த வோங்குமுப காரத்தை
யெள்ளத் தனையேனும் யான்மறவேன்—றள்ளற்றுச்
சந்ததமு நேசந் தணவாம னும்வாழக்
கந்தனருண் முன்னிற்குங் காண். (௧௦)

கலித்துறை

பொன்னன்பு கூரு முகத்தெய்வ
    நாயகிப் புண்ணியமான்
கன்னன் புகழுங் கொடைக்கந்த
    சாமியெக் காலத்தினுந்
தன்னன்பர்ப் பேணுந் திருத்தொண்ட
    ராதலிற் சண்முகத்தே
மன்னன்குன் றாப்பொற் கிழியை
    யவர்க்கு வழங்குகவே. (௧௧)

மானாருக் கோர்கட் டளையாக
    வேதன் வகுத்துவைத்த
தேனார் மதுர மொழித்தெய்வ
    நாயகிச் செல்வமின்னே
யானா வளந்துய்த்து மக்கட்
    சிறப்பொடு மன்பனொடுங்
கானார் கடம்பன் கடாட்சத்தில்
    வாழ்தியெக் காலத்துமே. (௧௨)

நெஞ்சங் குளிர்ந்து விழிகுளிர்ந்
    தின்சொ னிகழ்த்திமுகக்
கஞ்சங் குளிர்ந்து பணிந்தென்
    கவிக்குக் கனகந்தந்தாள்
தஞ்சஞ் செறிந்தவர்த் தாங்கிடுஞ்
    சீர்க்கந்த சாமியில்லாள்
வஞ்சங் கடிந்த மனத்தெய்வ
    நாயகி மாதரசே. (௧௩)

நாமன்ற வுண்மை மொழியோது
    நல்லவர் நண்ணிவளர்
மாமன்ற நாதன் புகழ்க்கந்த
    சாமி வரோதயனும்
பூமன்ற லாருங் குழற்றெய்வ
    நாயகிப் பூவையும்பொற்
சோமன்றந் தார்நிதி தந்தாரென்
    பாத்தொடை சூடிக்கொண்டே. (௧௪)

கோச்சகம்

ஆனாயி னேரு மரியசுவைச் செந்தமிழை
வீணான தென்று வெறுத்துவிடு மிந்நாளி
ஞானதி பூண்டதெய்வ நாயகிமா னன்னதையுட்
கோணாது பூணக்குறித்ததெங்கள் புண்ணியமே. (௧௫)

கலித்துறை

சூன்மேக நேர்தருங் கைக்கந்த
சாமிச் சுகுணவள்ளால்
தேன்மேவு மின்ப மொழித்தெய்வ
நாயகிச் செந்திருவே
யூன்மே வுயிர்க்குயி ராங்குக
நாத னுளன்புரக்க
மேன்மேலும் வாழுதிர் யானூர்க்குப்
போக விடைதம்மினே. (கசா)

முற்றிற்று.

பருத்தித்துறைக் கலித்துறை

உ

சிவமயம்

பருத்தித்துறைக் கலித்துறை

ஆறு வதனப் பிரானன்பர்க்
        கெய்ப்பில்வைப் பன்னவன்வா
னேறு மதிற்பருத் தித்துறைச்
        செல்வ ரிதயம்புக்கு
வீறு மகிழ்வி னெனைக்காக்க
        வூக்கிய வித்தகமாத்
தேறு வதற்கிட மானதன்
        ஞார்செய்த செவ்விகளே. (௧)

சங்க வளம்பிர சங்க
        வளங்கல்விச் சாலைவளந்
தங்க வளம்வண் கொடைவளந்
        தான தருமவளம்
வங்க வளம்பன் னிலவளம்
        பூந்திரு வாழுமனைத்
துங்க வளம்வள முற்றும்
        பருத்தித் துறைக்கண்ணவே. (௨)

மன்னவர் மன்றமு முல்கு
        பொருட்குவை வைப்பும்பல்லூர்த்
துன்னு நிகழ்ச்சி யுடனுடன்
        றெற்றிடுந் துங்கவைப்பும்

15

பொன்னணி யாடை யரிசிநெல்
லாதி பொலிந்தவைப்பு
மின்னவு மன்னிய பன்னற்
றுறைக்க ணவையிலவே. (௩)

விருத்தரைப் பாலரை வான்கவி
வாணரை மெய்த்தவரை
யருத்தியிற் காத்திடுங் கூவல்
குளமட மாலயங்க
டிருத்து மருத்துவச் சாலைதண்
ணீர்ப்பந்தல் சேர்வித்திடும்
பருத்தித் துறைப்புரு டோத்தமர்
தேக்கிய பாக்கியமே. (௪)

அருந்துதிக் கற்பி னரிவைய
ரோடில் லறத்திலென்றும்
பெருந்துதி மேவர வாழ்ந்தருட்
டெய்வம் பிதிரரொக்கல்
விருந்து பசுமட வார்பிணி
யாளர்கள் வேதியரைத்
திருந்துறக் காப்பர் பருத்தித்
துறைப்பெருஞ் செல்வர்களே. ( )

கனமே றியதுலைத் தட்டுறத்
தாழுங் கணக்கிலென்றுந்
தனமேறத் தாழுவ ரூதிய
வாணிகச் சால்பின்மிக்கார்
தினமே றியதுதி மன்னவர்
பாற்பெற்ற சீர்ப்பட்டத்தார்
மனமே றியதயை யார்பருத்
தித்துறை வாசவரே. (௬)

முன்னிற்ப ரீய வுலோபர்க்கு
மீயு முறைகற்பிப்பார்
பின்னிற்பர் பாவம் பழிக்கென்று
மோருரை பேசுவர்வான்
மன்னிற் பலதிறப் போகந்துய்ப்
பார்மழை வண்ணனெனப்
பொன்னிற் பிறங்குரத் தார்பருத்
தித்துறைப் புண்ணியரே. (௭)

நீற்றியற் செல்வந் தியான
செபத்தி னியமமன்பர்ப்
போற்றியற் செல்வந் திருவருட்
பாமெய்ப் புராணத்துண்மை
தேற்றியற் செல்வங் குகற்பாடு
வார்க்குத் தியாகமருள்
பேற்றியற் செல்வம்பன் னற்றுறை
வாழப் பெருகியவே. (௮)

திங்கட் கடவுண் முழுக்கலை
யோடு திகழிலென்று
மங்கட் புவிக்கின்ப மாவது
போல வரவிந்தப்பூச்
செங்கட் பருத்தித் துறையார்செல்
வத்தொடு சேர்ந்துநிற்பி
னெங்கட்கு மாத்திர மோவின்பந்
தானுயிர் யாவுக்குமே. (௯)

எடுத்துமுன் னூருணி நீர்நிறைந்
தற்றே யெனவள்ளுவர்
தொடுத்த தொடர்புக் கிலக்கிய
மாகத் துணிந்துசொல

வடுத்தபன் னற்றுறை யார்க்கிட்ட
சித்திமுற் றுயுளெல்லாங்
கொடுத்திடு மாறு குகனைப்
பணிதுங் குழைந்துளமே. (கo)

முத்துக் குமார சுவாமிக்
குருமதி முன்னவர்நேர்
பத்திக் குமார சுவாமிப்
புலவனெம் பான்மகிழ்வு
வைத்துப்பன் னூட்பல நூல்கற்றுத்
தேறிய மாண்பினுள
மொத்துத் தளர்வி னுதவினர்
வாழ்கவவ் வுத்தமரே. (கக)

நேய முறத்தமி ழெம்பாற்கற்
றுங்கிள நீடிப்பிற
தேய நிபுணரி லெம்மே
நிலையுற்ற சீர்நமசி
வாய புதனிவண் றங்கூனின்
றற்றத்தின் வந்துபொரு
ளேய மகிழ்விற்றந் தான்வாழ்க
வின்பத்தி லென்றைக்குமே. (கஉ)

வெண்பா

சீர்சா ருடுப்பிட்டி செய்ய கரணவா
யேர்சார் புலோலி யிரும்பருத்திப்—பேர்சார்
துறைவல்வை புத்தூருத் துங்கரென்று மிங்நெஞ்
சுறைவதற்கென் னேன்புழுங்தே னே. (கங)

வல்வைக் கலித்துறை

சிவமயம்.

வல்வைக் கலித்துறை.

கோவிற் சிறப்பு மடச்சிறப்
போடை குளச்சிறப்புக்
காவிற் சிறப்புப் புராணச்
சிறப்புக் கனிந்தவருட்
பாவிற் சிறப்புவெண் ணீற்றுச்
சிறப்பிசைப் பண்சிறப்பாற்
பூவிற் சிறப்புமுற் றும்வல்வை
யூரிற் பொலிந்தனவே. (க)

கலச்செல்வம் வாணிகச் செல்வங்
கொடைச்செல்வங் காணிச்செல்வஞ்
சலச்செல்வந் தான தருமச்செல்
வங்கல்விச் சாலைச்செல்வங்
குலச்செல்வ மக்கண் மனைச்செல்வஞ்
சீர்ச்செல்வங் கொண்டதபோ
பலச்செல்வ மாய்வல்வை யூருக்கு
முற்றும் பலித்தனவே. (உ)

மருத்துவ சாலைதண் ணீர்ப்பந்த
ரானிரை வைப்புநிரைத்
தருத்திகழ் நீழல் வழியா
வணமன்ன சத்திரமோய்

விருத்த ரநாதர் பிணியினர்
சாலே மிகக்குழுமக்
கருத்தொடு கண்புய்க்க லாதுறும்
வல்லைக் கடிநகர்க்கே. (௩)

கந்த வனநடு வாம்பருத்
தித்துறை காணுங்கிழக்
கந்த ணலர்ப்பொழில் வல்லை
குடக்கி லணிவிளைத்துச்
சிந்துவின் றென்கரைப் பாலுற்ற
மூன்றுமெய்ச் சீர்பயக்கு
மிந்த வகைநய மேனையெங்
நாட்டி லிசைந்ததுவே. (௪)

முற்றத்தி னந்தின மூர்ந்திடும்
வல்லை முதுநகர்வாழ்
கொற்றக் குருகுல மாக்க
ளிருஞ்சபை கூட்டியிட
ரற்றத் தியற்றிய நன்றி
மிகப்பெரி தம்புவியிற்
சுற்றத்தி லிங்கிவ ரேநமக்
குற்ற துணைவர்களே. (௫)

நீதி மரபிற் றிருத்தொண்ட
ரோடு நிகரும்பத்திச்
சோதி மலர்முகச் சீர்வேங்க
டாசலத் துங்கவள்ளல்
பாதி மதிச்சடை யான்றேவி
யோடு பயிலத்தந்த
சேதிம மொன்றமை யும்வல்லைச்
சீரைத் தெரித்திடவே. (௬)

விண்ணியல் செல்வத்தின் மண்ணியில்
செல்வ மிதக்கத்துய்த்த
புண்ணிய சீலத் திருவேங்
கடாசலப் பூபன்வந்து
நண்ணிய வான்குலத் தார்வாழும்
வல்லை நகரினினூங்
கெண்ணியல் போக நகர்வேறிங்
கியாவ திசைத்திடவே. (௭)

நாணுளுஞ் செந்தமிழ் வாணருக்
கேற்பன நல்கியிசை
பூணு வணிந்து சிவபத்தி
யேறிப் பொறைமுதல
கோணு தணிந்து தருமமன்
ருகிக் குலவியிடு
மாணு வுலோபரைக் காணுத
வல்லை வளநகரே. (௮)

கார்க்காமர் கண்டத்து நம்வயித்
யேசர் கருணையினுற்
றீர்க்கா யுளுமிட்ட சித்தியு
மெய்திச் செறிந்தகுள
நீர்க்கா லெலாமுத்தச் சங்கின
மூர்ந்து நிறைந்தவல்லை
யூர்க்கா வலர்வைகி லெங்களுக்
கேபெரி தாதியமே. (௯)

தனிச் செய்யுள்கள்

உ

சிவமயம்

தனிச் செய்யுள்கள்.

ஆசிரிய விருத்தம்

உண்மைகிளர் பரசிவப் பிரணீத நிகமாக
மோக்தமெய்ச் சைவதிலக
வோங்கிடு முருத்ராட்ச மாலிகா பரணநீற்
றொளியருப் புனிதவடிவ
வொப்பில்பதி பசுபாச லட்சணந் திரிபைய
மொழிவுற வுணர்ந்தநிபுண
வுயர்முத்து ராமலிங் கக்குரிசி லுண்மையி
னுதித்தபிர தமகுமார
பெண்மைகிளர் யௌவனநல் லார்மய லுளத்திற்
பிறங்கிடுந் தருணமதன
பிரபுசன சங்கமுஞ் சாதுசன சங்கமும்
பேணுமதி மாநநீய
பிரபல மடங்கோவி னன்குற நடத்திடும்
பிரமுதித தர்மகர்த்த
பிரசமலர் லட்சுமி சதாகால முங்குலவு
பிரதாப முகுரமரும
திண்மைகிள ரொன்னலரை யடவிமலை யோட்டிடுந்
திறனிலவும் விசயராம
சேதுரா மேசர்பர நாதச் சிலம்படிக
டினமுமர்ச் சிக்குமன்ப
சித்தாந்த சைவப்ர சங்கத்தி னிதரமத
திமரமெறி யும்பாஸ்கர

செந்தமிழு மிங்கிலிஷு மாரியமு மாய்க்குலவு
திரயபா ஷாபண்டித
வண்மைகிள ருயர்நிலைச் சிராமநாதபுர
மன்னிடுந் தேவேந்திர
வாய்ந்தவட் டைய்ஸ்வரிய சேதுபதி பாஸ்கர
மஹாராஜ குகனருளினுன்
மதுரப்ர பந்தங்கள் பற்பலநின் மேற்பாடி
வாரிதி கடந்துவந்தோ
மன்னர்வித் வாஞ்சருக் குதவுவ வெலாமுதவி
வாழிபல வூழியினிதே. (க)

காணுமா றறியார் கவிஞர்கள் பலநாட்
கழிதரப் புறங்கவன் றமர்ந்தார்
நாணுமா றுறுசீட் டுக்கவிக் குடனே
நாவல ரேவலர் பலரைப்
பூணுமா தரத்துய்த் தெமையழைத் தவையிற்
பூசித்த புரவல னுளத்திற்
கோணுமா றில்லாப் பாற்கரன் புகழ்முக்
குலமன்னர் தலைக்குல மணியே. (உ)

உந்தியம் புவியி னுலப்பிலற் புதநீ
டுத்தர கோசமங் கையினின்
முந்தியற் பெருமா னிராகவை யங்கார்
முதற்புதர் பலரொடும் வினுய்த்தன்
செந்தமிழ்க் கவிக்குப் பலதிறப் பரிசில்
சிந்தையிற் பெருங்களி சிறப்பத்
தந்தருள் புகழ்ப்பாற் கரற்குப்பின் றமிழைத்
தாங்கிடுந் தரத்தர்யார் சகத்தே. (ந)

கலித்துறை

முன்னே யிருமுறை யெய்திய
போது முழுப்புரிவாற்
பொன்னேற நல்கி யனுப்ப
நினதுளம் பூரிக்கவென்
பின்னேவந் தோர்கள் விரைவான்முற்
ருகப் பெருதெய்த்தன
னென்னே யினிச்செய்வன் பாற்கர
சாமி யிறையவனே. (ச)

[illegible]லமேறு மாற்றலு மில்லையெம்
மூலக் கனலொடொன்றி
வலமேறு கண்ணினிற் காசமு
மூப்பும் வருத்திடமெய்ப்
பலமேறு பாற்கர மன்னுநின்
சோபைப் பதுமமுக
நலமேறு தண்ணளிப் பேறு
பெறவினி நாளில்லையே. (ரு)

காலத்துக் கேற்றிட வேதேனு
நல்குதி காண்கனத்துக்
கேலத் தகாதென வெண்ணேன்முன்
னளினி லீந்தநிதி
போலத் தகவுறப் பேணிக்கொள்
வேனிது பொய்யன்றுகட்
பாலத் தரைத்தொழும் பாற்கர
சேது பதிவள்ளலே. (கூ)

துன்புற்ற காலத்து மோம்புவ
மென்றுமுன் சொன்னசொல்லை
யன்புற்ற சிந்தையி லெண்ணுகண்
டாயினி யங்குச்செல்வேன்
வன்புற்ற நெஞ்சத் துலோபர்
களையெங்கும் வாழுஞ்செல்வ
ரின்புற்ற மாதவப் பாற்கர
சாமி யிறையவனே. (௭)

சனிமேவி வாட்டிட நேர்ந்த
குறையைத் தளர்ந்துரைத்தே
னினிமேலிவ் வாறுன் னுளத்துக்
கனுப்பொன் றியற்றலன்காண்
டனிமேரு வில்லுடை ராமேசர்
தொண்டிற் றலைமைகண்டு
முனிமே லவர்புகழ் பாற்கர
சாமி முதலவனே. (௮)

கற்பார்க ளோய்ந்தன ரிங்குள
செல்வர் கவிஞர்களை
பற்பாக வோம்பும் வகையறி
யாரலை யாழிக்கப்பாற்
பொற்பார் பதிகளிற் செல்லத்
திறலிலை பொய்யன்றுகாண்
வெற்பார் தருங்குணப் பாற்கர
சாமி விதரணனே. (௯)

நேர்ந்தா ரெவர்களு மென்பா
லினிலன்பு நீடியவா
றோர்ந்தார் பலருங்கு மிங்கு
முளாருண்மை யுண்ணெகிழ்ச்சி

யார்ந்தாவ தான வுதவி
புரிய வமையமிதே
சார்ந்தாரைத் தாங்கிடும் பாற்கர
சாமி தயாநிதியே. (௧௦)

தொன்னிலை யாய வரசியன்
மாண்பு துறந்துபுற
மன்னிய துங்கக் குமணன்றன்
பான்மிடி மாய்க்கவந்த
வின்னியல் வாணன் குறைதீர்க்க
வுண்ணெகிழ்ந் தெண்ணியுடன்
சென்னியை யீந்தனன் பாற்கர
ராச சிகாமணியே. (௧௧)

வளமே வரச்சிவ சம்புப்
புலவனை வாழ்வில்வைத்தான்
றளமேவு பூந்தள வைத்தொடைப்
பாற்கர சாமிப்பெய
ருளமேன்மைச் சேது பதியி
லொருவனென் றுத்தமர்கள்
கொளமே தகுமிசை பூவுள
மட்டுங் குலாவிடுமே. (௧௨)

கைப்பெருங் காணிகள் யாவுமென்
னோடுற்ற காதற்றவ்வை
மெய்ப்படு மக்கட் குதவியுஞ்
சார்ந்த மிடிமக்களைத்
தப்பற வோம்பியும் பின்னா
ளூறுவதைச் சற்றுமெண்ணா
திப்படி யெய்த்தனன் பாற்கர
சாமி யிறையவனே. (௧௩)

உன்னா டடைந்துன் னுதவியி
　　னுட லோம்பியுப்பாற்
பின்னாள் வரையு மிருந்திட
　　னூக்கிப் பெயர்ந்தநெஞ்சை
யின்னாத நோய்களு மூப்புந்
　　தகைந்தன வென்புரிவேன்
றென்னார் தமிழ்த்தொடை சூடிய
　　பாற்கரத் தென்னவனே. (கச)

உன்னைப் பரிக்க வமைந்த
　　நிதிவெற்பி லோர்சிறிதிங்
கென்னைப் பரிக்க வுதவுதி
　　தந்தை யிடருறுஞ்சேய்
தன்னைப் பரித்தின்பில் வாழுத
　　லேற்ற தருமமன்றே
பொன்னைப் பரிக்குமெய்ப் பாற்கர
　　சாமிப் புயல்வண்ணனே. (கரு)

தாளார்செங் தாமரை யானனப்
　　பாற்கர சாமிமன்னா
கோளா ரிடரினி லாற்றாமை
　　தேர்ந்துட் குழைதலின்றி
வாளா விருப்பினின் றண்ணளி
　　வெள்ளத்தை வற்றுவித்து
நீளார் கலிப்புவி மேல்வசை
　　யாயது நின்றிடுமே. (கசு)

இன்னமு மொன்றுள தன்னன்ப
　　னேனிந்த யாக்கைவிழு
மன்ன பொழுதி னடத்துஞ்
　　சடங்குக ளத்தனையு

நன்னர்நின் னாரு ளாற்செய்தி
　　தேவைநன் னாடாசாண்
மன்னவ வாசவ பாற்கர
　　சாமி வரோதயனே. (கஎ)

அட்டநாக பந்தம்

சீதரா பாற்கரா சீல நிறையாளா
சேது பதியான சீரைய—போதப்
பகவனக லாதமா பாங்கினக நேய
சகல பயனுந்தா தா. (கஅ)

—இவை, இராமநாதபுரப் பாற்கரசேதுபதியைப் பாடியவை.

கலித்துறை

வார்த்திக காலத்தி னேனைச்
　　சுகத்தினில் வைத்திடவுள்
ளார்த்தியி னல்வலி தாய்த்தொடர்ந்
　　தாய்நின் னருட்டகையைக்
கார்த்திகை காதல னல்லரு
　　ளேயெனக் கண்டனன்காண்
சீர்த்தி கிளரு மிராம
　　சுவாமிச் செயதுங்கனே. (க)

நலஞ்சேர் சடையப்பன் சீர்ச்சாமி
　　நாத நரேந்திரனின்
குலஞ்சே ரிருந்தகை மூதாள
　　ரிந்தக் குவலயத்திற்
புலஞ்சேர் கவிஞரைக் காத்தழி
　　யாத புகழ்மைவைத்தார்
வலஞ்சேர் திணிபுயச் சீராம
　　சாமி வரோதயனே. (உ)

பீதாம் பரமுங் கனகமுந்
தந்துன் பெரும்பெயரை
மீதாம் பதத்து மிருத்தலே
யெனின் வியன்புகழ்மை
யேதாம் புலவரைக் காக்கு
மிசையி லிசையிலேகாண்
போதாம் பதும முகராம
சாமிப் புரந்தரனே. (௩)

எல்லாருஞ் செல்வத் தகையின
ரேநின் னிருங்கிளைஞ
ரல்லாருங் கண்டற் கடியவ
ரேதமி ழாய்ந்தநல்லோர்
சொல்லாரும் பாத்தொடை வேய்ந்தவ
ரேயெனத் தோற்றமுற்றார்
செல்லாருங் கைத்தலச் சிராம
சாமிச் செயதுங்கனே. (௪)

மன்மத யாண்டினிற் பாம்பனிற்
கண்ட வரோதயனென்
றென்மன நின்னைக் கருதிற்
றினிக்குறை யாதுளது
தன்ம நினைப்புந் தயையு
நிறைந்தமெய்ச் சற்குணனே
பொன்மணி மார்பத்துச் சிராம
சாமிப் புரந்தரனே. (௫)

நின்மா மரபின ரெல்லாஞ்
செல்வத்தி னிரம்பினர்நீ
பொன்மாக நாட்டர சாய்ப்பொலிந்
தாய்மெய்ப் புலவரைநின்

றென்மாண் குலத்தினர் காத்த
பெருமையைச் சொல்லுநிலம்
நன்மா தவர்புகழ் சிராம
சாமி நரேந்திரனே. (௬)

முன்னியல் வாணர் புகழ்ச்சாமி
நாத முதல்வள்ளலா
னன்னிலை யெய்தினர் நீயு
மவன்வழி நண்ணினைகாண்
பொன்னியன் மார்ப விராம
சுவாமிப் புரந்தரனே
நின்னிசை யவ்விசை யோடென்று
நிற்க நினைந்தருளே. (௭)

ஆசிரிய விருத்தம்

நீர்பூத்த செஞ்சடில முக்கட் பிரானடியை
நிதமுமற வாதவன்ப
நிலமெலாம் பரவுமாந் தாதா வெனக்கங்கை
நிமலமா பினினுதித்து
நெடுதிசை படைத்ததா தாவெனப் பற்பலர்
நிகழ்த்துமதி மாநீய
நீதிபதி சாமிநா தப்பிள்ளை வழிவந்த
நெறியெலாம் வாய்ந்தசெல்வ
பேர்பூத்த வளமலி யணைக்குடிப் பதியிற்
பிறங்கிடும் புருஷோத்தம
பிரபுசன சங்கங்கள் சிரமிசைக் கொண்டிடும்
பெட்புறும் விசிட்டகுண
பின்னையென் னுதுபுண் ணியதான வகையெலாம்
பிரிவறச் செய்ததூய

பெருமைதிகழ் ராமசா மிப்பிள்ளை மாராஜ
பிரபல நிதிக்குபேர
சீர்பூத்த நின்பெய ரமைந்திடு விவாகபத்
திரம்வரத் தாழ்த்ததானுஞ்
சேய்மைநின் றியாணிங்கு வந்ததா னுஞ்சுகந்
தேகம் பெருமையானுந்
திருமணச் செவ்வியைக் கண்டிடு மகாதவஞ்
செய்திடா தெய்த்தனன்காண்
செகதலப் பிரசித்தி யெய்திய பரம்பரைச்
செல்வச் சுகத்திலமருங்
கார்பூத்த காதலக் கிளைஞர்க் கெலாமிதைக்
கனிவுறச் சொல்லிமுன்னாட்
கம்பநா டற்றநின் குலமுற்ற மேதகுங்
காட்சிதிகழ் சடையப்பனுங்
கனகமுகில் செய்தவகை யாம்பரிசி லவைபல
கருத்துற நிரம்பவுதவிக்
கந்தனரு ளாற்பெருங் கிளைவளத் துடனூழி
காலமட் டுய்வாழியே. (அ)

—இவை, அணைக்குடி இராமசுவாமிப்பிள்ளையைப் பாடியவை.

ஆசிரிய விருத்தம்

சீர்பூத்த புனிதரா மேச்சுர மெனப்படுந்
தெய்வ ஸ்தலத்துவாசன்
செல்வமீ ராலெவ்வை முன்னா ளியற்றிய
திருத்தவத் துற்றகுமரன்
செயமுகம் மதுநபி பெரும்புகழ் மறந்திடாச்
செபவிரத நிலையினிற்போன்

சேதுபதி பாஸ்கர சுவாமிமா ராஜனொடு
திரிபிலா துற்றநேசன்
வார்பூத்த நதிகுல முதித்தசின் னத்தம்பி
வள்ளலரு ளைகைலிங்க
மகிபனொடு பிரியாத நண்பினன் சிட்டர்சக
வாசனம் புவிவாசவன்
வங்கவள மன்னிய கிராமவள மின்பமனை
வாழ்க்கைவள முற்றெய்தினோன்
வரமுறுஞ் சித்தாந்த வேதாந்த காவிய
மதித்திறத் தினிதுணர்ந்தோன்
நீர்பூத்த சேதுக் கரைக்கண்யாழ்ப் பாணத்தர்
நிருமித்த சத்திரத்தை
நிலைமைகுலை யாவண்ண முதவியா யூக்கமொடு
நின்றுநிறை வேற்றிவைத்தோ
னிமலரா மேச்சுரத் துற்றமுத லாளியென
நிலவுமோர் சிறப்புமுடையோ
னெஞ்சமுற யாத்திரைக் கெய்திடு பவர்க்கேற்ற
நெறிகுலவ வசதிதருவோ
னூர்பூத்த வேணியா னலயப் பணிவகையு
மன்பனாய்ச் செய்விப்பவ
னதிபர்போற் பிரசைதங் குறைதெரிந் தியனீதி
யாம்வகை நிறுத்துமுரவோ
னுருள மெலிந்துவந் தாலுமற் றன்னவரை
யன்னைபோ லப்பேணுவோ
னரியகுண விபுரும்கிப் சாகிபு வெனத்தினமு
மனைவரு மதித்ததுரையே. (க)

கலித்துறை

சொற்றூர் மடங்கல் பிணியாள
ருக்குச்சஞ் சீவிதனை
யுற்றூர்கள் கண்மணி யெய்த்தார்கள்
சேம முயிர்கட்கெலா
நற்றுய் கருப்புத் தழலுக்குக்
கால நளிர்மழைக்கார்
கற்றூர்க டாரு விபுரும்கிப்
சாகிபுக் காவலனே. (௨)

அதிகாரம் வாய்மை வரிசை
கடவுட்டொண் டாற்றலாக்க
ணிதிகாணி வங்க மனைதாரம்
பிள்ளை நிறைபொறைமெய்த்
துதிகாம ரீகையியல் லாங்குறை
யாத சுகுணன்கண்டீர்
மதிகா ணுளத்த னிபுரும்கிப்
சாகிபு மன்னவனே. (௩)

செந்தமிழ் வாண ரநாதர்
விருத்தர் சிறுவர்பிணி
வெந்தழ லுற்றவ ராருக்கு
மேற்ற விதத்துதவி
சந்ததஞ் செய்பு மிபுரும்கிப்
சாகிபு தன்புகழே
யிந்த நிலமுட்டி யப்பா
லுலகினு மெட்டியதே. (௪)

உற்றூரென் றும்பிற ரென்றுநற்
செல்வ முடையரென்று
மற்றூரென் றுந்திற மோரிரண்
டாக மதிப்பதொரீஇச்
சற்று யினுநடுக் கோணுத்
தராசிற் சமங்கொள்பவன்
கற்றூர் புகழு மிபுரும்கிப்
சாகிபுக் காவலனே. (௫)

—இவை, இராமேசுரம் இபுரும்கிப்சாகிப்பைப் பாடியவை.

ஆசிரிய விருத்தம்

சீரேறு மற்புதத் தெய்வவள மேறிடுந்
திருவிரா மேச்சரத்திற்
சேர்ந்தநதி மாபில்வயி ரவநாத மாலுறச்
சென்மாங் தாத்திறேற்ற
செவ்விய தவத்துற்ற புருஷரத் தினமே
திருந்துமெழில் வல்லிபுரம்வாழ்
சீதரன் றிகிரியைத் தங்கத் தகட்டினுற்
செய்வித்த பத்தியாள
தாரேறு மகுடமன் னவரிஞ்சி னீரெனத்
தந்தவுத்தி யோகத்தினைத்
தாங்கிவள நிலவிடுங் குருநாக லூரினிற்
ருழ்வற நடாத்துநிபுண
சற்சன சமூகங்க ணைஞ்சிற் சிரத்திற்
றமைத்தவதி சீர்த்தியாள
தண்டமிழு மிங்கிலிஷு மேதகக் கற்றவித்
தகபடு தரவிவேக

பேரேறு தருமதா னங்களைச் சந்ததம்
பீடுற நடாத்துமன்ப
பின்னிலா மற்பசியி னுெந்தவரை யன்னைபோற்
பேணியன முதவுசெல்வ
பிரபந்த வித்வசனர் கலிவெயிற் கத்தமழை
பெய்யுமிருண் மழைமேகமே
பெருகுமட் டைஸ்வரிய சுகநுகர் சிதம்பரப்
பிள்ளாயெள் ளாதசுகுண

கூரேறும் வேலுடைக் கடவுண்மேற் கீர்த்தனங்
கூறினே னூர்கடோறுங்
குலவிடுங் குலமக்க ளங்கதற் கிசையவுட்
குழைவினிதி யுதவுகின்றூர்
கோணுமலேற் பவர்க் கீயுங் குலப்புகழ்மை
குவலயத் தென்றுநிற்கக்
குகனருளி னீயுமவ் வண்ணம் புரிந்தூழி
குறைவிலா வாழ்வடைவையே. (௧)

கலித்துறை

சங்கக்கை யானமர் வல்லி
புரத்தினிற் சக்கரத்தைத்
தங்கத் தகட்டின் முழுது
மமைத்துத் தழைத்தபத்தித்
துங்கச் சிதம்பரப் பிள்ளாய்நின்
மேதகை தொல்லைவிண்ணேர்
சங்கத்து முற்றது நின்பிறப்
பேதவச் சால்பினதே. (௨)

தெய்வ விராமேச் சாத்தினிற்
கங்கை திருக்குலஞ்சேர்
சைவ வயிரவ நாத
மகீபன் றவமைந்தனே
யெளவிய மற்ற சிதம்பரப்
பிள்ளை யருந்தகையே
யெவ்வெத் தினமுஞ்சர் வாபீஷ்ட
சித்திக ளெய்துவையே. (௩)

சீரிந்தி யாலங்கைச் செல்வர்க
ளாருமென் செய்யுளுக்கு
நேருந் தியாக முதவும்
வகையிந்த நீணிலத்தோ
ராருந் தெரிவர் சிதம்பரப்
பிள்ளை யதுலவுளங்
கூருந் தயையினி னீயுஞ்செய்
தானயங் கொண்டிடுமே. (௪)

தொடுத்தா யிரஞ்சொல்ல வேண்டுவ
தோகவி சூடிச்சற்று
நடுத்தாழ் விலாத சிதம்பரப்
பிள்ளை நரேசநல்லோர்
கொடுத்தா ரெனுஞ்சொற் கொழுந்துவிட்
டோடிக் குறைவற்றெழீஇ
யடுத்தாடு மூவுல குங்கேட்கு
மென்ப ரறிந்தவரே. (௫)

மதியார் பிறக்றர் மயில்வா
கனப்பிள்ளை வல்லிபுர
நிதியாடை யானுக்குப் பாடல்
புனைவித்து நேயத்தென்பாற்

றுதியார் பொருள்க ளளித்த
புகழ்க்கொடி தொல்லைவிண்ணோர்
பதியாவுந் தாவிவை குண்டத்து
மேறிப் படர்கின்றதே. (௯)

—இவை, இராமேசுவரம் சிதம்பரப்பிள்ளையைப் பாடியவை.

கலித்துறை

திருவாழும் வட்டு நகர்சித்தங்
கேணி செறிந்திருந்தே
மருவார் பொழிற்சங்கு வேலியி
லோங்கிடும் வாழ்வில்வைகும்
பொருவா ரிலாத வயித்திய
லிங்க புரந்தரமெய்க்
குருவான கந்த னருளால்வந்
தேனுன் குலமணிக்கே. (௧)

நெய்யார் விளக்கின்றி வீட்டை
விளக்கிடு நேர்மைக்கஞ்சச்
செய்யாள்கற் புக்கு வடமீன்
வறிஞர்க்குச் சேமவைப்பு
மெய்யார் குணமக்கட் டந்தாணின்
ணேடென்று மேவுதலா
லையா வயித்திய லிங்காநின்
னேர்வதெவ் வாடவரே. (௨)

மானுட யாக்கைக்குஞ் சைவமெய்ப்
பத்திக்கும் வான்புவிக்கு
மாநிதி கட்கும் வயித்திய
லிங்க வரோதயநே
ரானவில் வாழ்வுக்குந் தான
தருமங்க ளாற்றுதற்கு
மேனனி நீசெய்த மாதவம்
வேறெவர் மேவினரே. (௩.)

வாணிக வாரியு மூர்தொறு
மேவிய மட்டகன்ற
காணியின் வாரியுங் குன்றென
வோங்கக் களித்தடைவை
யாணியல் வாய்ந்த வயித்திய
லிங்க வலந்துகவி
வாண ருலோபரிற் றேம்பலுன்
நீதிக்கு மாண்பலவே. (௪)

இந்திரச் செல்வ மடைந்தும்
வயித்திய லிங்கவள்ளால்
சிந்தனை சற்றும் பிறிது
படாது செருக்ககன்று
சந்ததம் யார்க்கு மிதமே
புரிந்து தழைத்திடலா
லுந்தை யுனைப்பெறச் செய்த
தவத்தினி லூங்கெதுவே. (௫)

குலத்தி னுயர்வும் வயித்திய
லிங்கக் குபேரகொண்ட
நலத்தி னுயர்வுந் தினமன்னம்
யாவர்க்குந் நல்குந்தபோ
பலத்தி னுயர்வும் வழிச்சைவ
பத்தி பழுத்தவொக்கல்
வலத்தி னுயர்வுமுன் பால்வாய்ந்
ததுமுன்னை மாதவமே. (௬)

கரியா னனற்குத் திருக்கோயில்
வாவி கவினுமடங்
திரியாவன் பானந் தனவனந்
தந்து திருத்தமுற்றாய்
மரியாதை யேறும் வயித்திய
லிங்க வரோதயநீ
புரியாத தான தரும
மெவையிந்தப் பூதலத்தே. (எ)

மக்களுக் குந்தமக் கும்பொய்க்குஞ்
சூதுக்கு மாதருக்கு
மொக்கலுக் கும்பய னாயவிங்
கேனைய ருள்ளசெல்வ
முக்கண னன்ப வயித்யலிங்
காநின் முழுச்செல்வமுந்
தக்க தவமுய்க்கப் புண்ணிய
தானத்தைச் சார்ந்ததுவே. (அ)

வங்க வளமும்பல் லூர்தொறு
மேய வரம்பினிலத்
துங்க வளமும் வயித்திய
லிங்க சுகுணமன்றா
தங்க வளமு மனைமாண்
வளமுந் தவநெறிச்சற்
சங்க வளமு நினக்கான
தன்றைத் தவநிலையே. (கூ)

தினமொன்றி னீசெய்த புண்ணிய
மொன்றையெத் தேசத்தெவர்
கனமொன்ற வற்சர மெல்லாம்
புரிந்துநற் காட்சியுற்றா

ரினமொன்றை யோகம் வயித்யலிங்
கேந்திர யாரையுநீ
மனமொன்றைக் காத்ததிற் காத்தாரு
மில்லையிவ் வையகத்தே. (க௦)

சீர்க்காசி நாதத் துரைதவக்
காதல தேங்குவளைத்
தார்க்காமர் வாகு வயித்யலிங்
கேந்த்ர தருங்குகன்றன்
பேர்க்கான கீர்த்தனப் பாடற்கு
நீபொன் பெரிதளித்தாற்
றீர்க்காயு ளோநினக் கீவன்சர்
வாபீஷ்ட சித்தியுமே. (கக)

—இவை, சித்தங்கேணி வைத்தியலிங்கபிள்ளையைப்
பாடியவை.

ஆசிரியவிருத்தம்

தந்தியா னனமுடைத் தற்பர னடித்துணைகள்
சந்தத மிறைஞ்சு மன்ப
தகையுறு புராணபட னச்செல்வ மாதரும
தானநிலை பெற்றவிரத
நந்தியா னஞ்செயும் பண்ணைசூழ்ந் திடுகாவை
நகர்வீர வாகு முதலி
நற்றவப் பேறான குமரவிங் கிலிஷ்தமி
ணவையறக் கற்ற நிபுண
வந்தியா ரும்பணியு மணியவதி பாதளி
மடம்பணி விடாத விரத
வரமுறுஞ் சற்சனர் மதித்தசிற் றம்பல
மகாராஜ வாழி யூழி

யிந்தியா லங்கையிற் செல்வர்களி லென்கவிக்
    கீந்திடா ராரு மில்லை
யினியசுப் பிரமணிய கீர்த்தனத் துக்குநிதி
    யிசைதரத் தந்தருள் வையே. (௧)

கலித்துறை

விருத்த தசையிற் பலபிணிப்
    பட்டுச்செவ் வேள்புகழை
யருத்தியி லின்புறப் பாடும்
    புலவரை யற்பகலாக்
கருத்துற வோம்பு மறம்போற்
    பிறிதறங் காண்பதுண்டோ
திருத்தகு சிற்றம் பலராச
    சைவ சிகாமணியே. (௨)

வீரமொன் றுற்ற வடிவேற்
    றிருக்கை விமலனிதச்
சாரமொன் றுற்ற கவிக்குப
    காரத் தனம்பெற்றிட
வாரமொன் றுக்குண் ணினது
    திருமனை வந்திடுவே
னீரமொன் றுற்ற சிவபத்திச்
    சிற்றம்ப லேந்திரனே. (௩)

துன்னும் பலபொருள் பன்னுளுந்
    தந்த சுகுணநல்லோ
ரின்னுந் தருகின் றனர்புகழ்ச்
    சிற்றம்ப லேந்திரனே
யென்றுந்துஞ் சாதவர் துஞ்சினு
    மீந்தவ ரென்பதெந்த
மன்றுந் தலைபெற நின்றோங்
    குவது மனங்கொள்வையே. (௪)

வாரண மாமுக னார்தொண்ட
    னீயம் மகான்றம்பியாங்
கூரண வுஞ்சத்திச் சேய்தொண்ட
    னல்ல கூட்டமிது
சீரண வுங்குல மாலனு
    கொத்திடச் செம்பொனளித்
தோரண வப்பெரு நாளேற
    வாழி யிசைபெறவே. (௫)

— இவை, கரவைச் சிற்றம்பல முதலியாரைப் பாடியவை.

ஆசிரிய விருத்தம்

தரைபூத்த வளங்களெலாந் தழைத்துக் காட்சி
    தயங்குமணி வேத்தவையுந் தாஞ்சா ரின்ப
நிரைபூத்த தவளவொளி நிலவும் வீடு
    நிழற்றருவு மணைப்பணையு நெடுஞ்சீர் காட்டக்
கரைபூத்த நதியருகிற் கவின்மன் னிற்
    காண்டகைய மாந்தைபெருங் கள்ளிப் பற்றி
னுரைபூத்த துங்கவதி கார மாகி
    யோங்குபுக ழிராசகோன் முதலி யுற்றான். (௧)

அத்தகைய வள்ளலவ னருளு மைந்த
    னம்புவிமுற் றேத்துமிரா சேந்தி ரப்பேர்
வித்தகமெய்த் தவமுதலி குலமுற் றோங்க
    மேவரிய தண்ணளியிற் புரந்த வண்ண
லித்தகைய விசையனரு ளினிய மைந்த
    னிராசகா ரியமுதலி யெனும்பே ரெய்தி
மைத்தகடல் விளிம்புடுத்த மண்ணு டெங்கு
    மல்குமிசை பரப்பியுரு மதன்போ னின்றோன். (௨)

இங்கிவன்முத் திறத்துமத யாறு பில்கும்
யானைமிசை யிவர்ந்துபல வரிசை யோடு
மங்கணிலத் துற்றதிற லமரர் கோனென்
றாருமதி சயமடைய வணைந்து வெள்ளைச்
சங்கமுரல் பண்ணையெலாஞ் சாலி யோங்கும்
சால்புகிளர் மாதகற்றோ மிசுப்பிள் ளைப்பேர்ப்
பிங்கலனுட் களித்தளித்த பிரச வின்சொற்
பிறைநுதன்மா மடக்கொடியைப் பெட்பின் வேட்டோன்.

தப்பகலும் பெரும்புகழித் தகையோன் மைந்தன்
தயங்குநிதிப் பொஞ்சேக்கர் சவுரி முத்தர்
மெய்ப்பெயரை யெய்தியிரும் பட்டப் பேராய்
மேதகுதன் றந்தையுடை யொழுக்க முற்றுச்
செப்பருஞ்சீர்க் கச்சேரி முதலி யாகிச்
செங்கோன்மைத் திறம்வழுவாத் திறன்மா ராச
ரொப்பரிய தனதுமணி மனையி லெய்தி
யுவகையுடன் விருந்தயிலு முயர்வுற் றின்னும். (ச)

எத்திறத்தி னுத்தியோகத் தேற்றத் தோடு
மேத்தியிடுந் தலைமைதழீஇ யிறைவாழ் வுற்ற
சத்தியவுத் தமசவுரி முத்து நாமச்
சற்குணன்றா யுடன்பிறந்த தரும சீலச்
சித்தசுத்தி பெற்றவெறு நாடித் தார்ப்பேர்ச்
செல்வனது திருமகளாய்ச் சீர்மை வாய்ந்த
முத்தநகைத் தத்தைமொழி முருகுத் தாம
முகிற்குழலை மணந்துதந்த முதத்துச் சீரோன் (ரு)

வானமரு மதிக்குழவி போல வந்த
மைந்தனிவன் றிகழ்மனுவற் பிள்ளை யென்னத்
தானமரும் பெயர்புனைந்து தமிழின் மாட்சி
தழைத்திடும்யாழ்ப் பாணமுற்றுந் தரும மோங்கத்

தேனமரும் பசுங்குவளைத் தெரியல் வாகுச்
செவ்வியவே ளாளகுல திலக மென்ன
ஆனமரு மக்கள்வடி வுற்றோர் யாரு
மொருங்குபுகழ்ந்தேத்தியிடுமொழுக்கம்பூண்டான்.()

மின்னாடும் வடிசுடர்வேல் வேந்தர் பாலின்
மேதகுமுத் யோகமுமேன் மேனின் றோங்குஞ்
சொன்னாடுங் கலையறிவுந் தோற்றப் பாடுந்
தொகுநிதியும் பலநிலமுந் தொலைவில் சீரு
முன்னாடும் வரிசைகளு முறையு மான
முழுத்திறங்க ளெலாமமைந்து முதன்மை மேவி
யெந்நாடும் புகழ்ந்துகொள வின்று மன்று
மேற்றமுறு பெருங்கிளையி னேற்ற மிக்கான். (எ)

மண்ணுலகி லுளவளங்க ளெல்லா மன்ன
வாய்ந்தபறங் கித்தெருவின் மகிபர் நெஞ்சங்
கண்ணுநித முங்குலவுங் கவின வாகிக்
கரையிறந்த வாரிதருங் கணக்க வாகி
யெண்ணிடவின் றணைத்தலியல் பினவோ வென்ன
வெவருமென்று மதிக்குமெழி லேற்றம் வீறி
நண்ணியடுக் கடுக்காகி வையு றாத
நல்லமனைத் தொகைகடெரு ஞாங்கர்ப் பெற்றோன். ()

மாந்தர்களிற் செல்வரியா மென்றே மாப்போர்
மதர்ப்படங்க மதிபர்கண்ணுள் மருள விண்ணில்
வேந்தர்விழி கதுவிடநான் வீற்றி ருப்ப
மேதகுசீ ரிடமிதென விரைமென் கஞ்சப்
பூந்தவிசி னிந்திரைக்கங் குவளை பூப்பப்
பொற்பியலெவ் வண்ணமுற்றுப் புகல்வ தென்று
தீந்தமிழ்ப் பண் டிதர்மருளச் சிற்பம் வாய்ந்த
திருமணிமேல் வீடமைத்த செல்வக் கோமான். (கூ)

வரமணியத் தொகையினராம் பதின்ம ராட்சி
மருவியிடு மிடந்தோறும் வன்னி யாதி
ரவியுறு மிடந்தோறும் விரிந்த தோட்டம்
விளைவுகிளர் வயற்றொகைகண் மேன்மே லுற்றோன்
கிருஷியினில் வாணிகத்தி லுப்புக் கள்ளுக்
கிளர்ந்திடுஞ்சா ராயக்குத் தகையி லென்று
மொருவர்பிறர் பெறற்கரிய விருத்திச் செல்வ
முலப்பறப்பெற் றறம்வளர்க்கு மோகைச் செல்வன்.

பொற்புநிறை நிதிவளர வளர வாய்மை
பொறுமையறி வடக்கமின்சொல்பொலிகண்ணோட்ட
மற்புவித ரணம்பெருந்தண் ணளிமுன் னான
வவையனைத்தும் பெரிதுவளர்ந் தமைய நின்றோ
னிற்பதல காயமதி னிலவு மாவி
நிலையினதென் றுண்மையிய னெடிது தேறி
நற்பயனும் புண்ணியதா னங்க ளுள்ளு
நகைமுகமு மலர்ந்தினிது நடாத்துந் தூயன். (கக)

எத்தனைதான் பெருநிதிய மெய்தி னாலு
மிரும்புகழ்க்கு மறத்துக்கு மென்று மிம்மி
யத்தனையு முதவாமற் கரந்து வஞ்ச
மகந்தைமலிந் தஃறிணையி லசலம் போலாய்ச்
சித்தநெகி ழாவுலுத்தத் தீயோர் வெட்கச்
செம்பொனெலா மள்ளியள்ளித் தீன ருக்கு
முத்தமிழ்ப்பண் டிதருக்கு மினிதி னீந்து
முழுதுளநா ளெலாமுவகை முந்நீ ராழ்வோன். (கஉ)

நல்லவருக் கவ்வவர்க டெய்வந் தானே
நன்மையெலா நல்குவது ஞாலத் துள்ளோ
ரெல்லவருஞ் சங்கையற வென்றுந் தேற
வெல்லையிலாச் செல்வமெலா மினிது பெற்றோன்

மல்லலணி மனைக்குவிளக் காகித் தன்கண்
மானுமட மங்கையிள மக்கண் மூவர்
தொல்லறிஞர் கிளைவிருந்தர் நண்ப ரோடு
துய்க்கமொழிந் தின்பமெலாந் துய்க்கு நீரான். (கங)

செற்றலர்க டியர்க்குமுற நெகிழு மெய்யுந்
தேனைமழைக் கினிமைதருந் தீந்தண் சொல்லு
முற்றவர்க ளெவர்க்குமருள் கடைக்கண் ணோக்கு
முள்ளமொழி யாக்கைபகிர் பரத மாண்பு
நற்றவர்க்கும் பயிற்றியிடுஞ் சித்தச் சீரு
நளினமுகத் தண்ணளியு நலிந்து வந்தோ
ரற்றமறிந் துதவுமிருங் கொடையு மெய்தி
யான்றநிலைச் சாதுசன வதிப னானோன். (கச)

யானுடைய கருமமெலா நும்மாட் டென்ன
விசைந்துபல விடந்தோறு மிருந்துஞ் சென்று
மூனுடலி னுயிரென்ன வுண்மை யோம்பி
யுலப்பினிதி நிதமுதவு மூக்கத் தோரைக்
கோனுடைய பெருவாழ்விற் குலவ வைத்துக்
கொடியவழுக் காறுமுதற் குற்றந் தீர்த்து
மானுடமெய்க் கறிஞர்புகன் மாட்சி முற்றும்
வழுவகல வெய்திநின்ற வள்ளற் கோமான். (கரு)

வானோக்கு முலகமெனத் தாயை நோக்கு
மழமகப்போ லுயிர்களெல்லாம் வாழ்த்தித் தன்னைத்
தானோக்க வவற்றையெலாம் புரந்து சில
தயாநிதியா யிப்பெருமை சாருஞ் சீமான்
மீனோக்க மங்கையொடு மக்க ளோடு
மேவியுறுங் கிளைகளொடு மேனோ ரோடு
மேனோக்கும் பரனருளா லூழி காறு
மிக்கசுக வாழ்வினில்வீற் றிருக்க மாதோ. (கசு)

இவை, யாழ்ப்பாணம் - பறங்கித்தெரு,
மனுவற்பிள்ளையைப் பாடியவை.

ஆசிரியவிருத்தம்

தலங்கொண்ட வளங்களெலாந் தழைத்து நின்று
தயங்குமுல்லைத் தீவென்னுந் தடம்பொன் னூரிற்
குலங்கொண்ட வொழுக்கநிலை குலையா துற்ற
குமாரசே கரமுதலி குடியின் வந்த
உலங்கொண்ட மதுகையந்தோ ளுபய வேலா
யுதக்குரிசில் பத்திநெறி யுறைப்ப வார்க்குஞ்
சலங்கொண்ட சடையமலன் சரணப் போதைத்
தலைக்கொண்டு வரங்கிடந்து தரவந் தானே. (க)

வந்தபுகழ் முதலிமயில் வாக னச்சீர்
வள்ளலிவ னிளம்பிறைபோல் வளர்ந்து நாளுஞ்
செந்தமிழு மிங்கிலிசுந் திருந்தக் கற்றுச்
சிவசமய வழிநின்று செல்வ மோங்கச்
சந்ததமு மகன்றந்தைக் காற்று மென்னத்
தக்கதுறட் கிலக்கியமாய்ச் சான்றோர் கொள்ளக்
கந்தமலர்க் குழற்செவ்வாய்க் கன்னி மார்கள்
கண்புய்க்க லாற்றுருக் காளை யானான். (உ)

அளந்துலவு மலைக்கடலி னருகு வாய்ந்த
வற்புதங்கள் குன்றாக்கோ ணுச லத்தின்
வளங்குலவும் புகழ்ச்சோம நாத நாம
வன்னியன்றந் தருள்கந்த வுடையார் சுத்த
வுளங்குலவு நெடுந்தவங்க ளுஞற்றிப் பெற்ற
வுத்தமநப் பின்னையென வுலகங் கொண்ட
தளங்குலவு மலர்க்கூந்தற் றத்தை யஞ்சொற்
றையல்பார் வதிமயிலைத் தழன்முன் வேட்டான். (௩)

வேட்டுவிதி யுளிமனைச்சீர் விழைந்து பேணி
மேதகைமை யனைத்தினையு மேவி நாலு
கோட்டுகரைத் துவிபமிவர் கோமா னென்னக்
குலவுசெல்வப் பெருங்கடலிற் குளிக்கு மன்னோ
னீட்டயமெய்த் தவங்களெல்லா மியாக்கை யொன்றிங்
கிசைந்துசர்வ தாரியினி லேறு நள்ளி
மாட்டிலொன்று தலையிட்டு வருமுப் பான்மான்
மங்கலமா மூர்த்தத்து வந்த தன்னான். (௪)

அற்புதக்கற் றிருந்தமிழோ டாங்கி லேய
மணங்கனையார்க் கனங்கனு யருந்த திக்குங்
கற்பினியல் வடித்திடற்காக் கன்னி மார்க்குங்
கட்டளையாய் நான்முகத்துக் கமலப் புத்தேள்
சொற்பிறழா முருகப்ப வுடையா ரில்லாள்
சுகவயினிற் சிருட்டித்த துலக்கச் செவ்விப்
பொற்பியலா ரகிலாண்டப் பூவை தன்னைப்
பொன்னுயர்மங்கலவணிநாண் புனைந்துவேட்டோன்.

புரவலனுஞ் செல்லையப் புனிதன் வல்லி
புரேந்திரன்பார் வதியாறு முகப்பேர் பூண்டோன்
தருமபதி யம்பலவா ணப்பேர்ச் செல்வன்
றயங்குசிவ சிதம்பரப்பேர்த் தனதன் பொன்னுத்
துரையிவரை யுதவிவே லாயு தன்றன்
சுதைசின்னப் பிள்ளையெனுந் தோகை தன்பாற்
பிரிவில்சிவக் கொழுந்துவேற் பிள்ளை மெய்ச்சுப்
பிரமணிய னுமிவரைப் பெட்பி னீன்றோன். (௫)

சாருமுல்லைத் தீவுதனிற் றபாலா பீசிற்
றகுங்கிளாக் குக்கோட்டு மொழிபெயர்ப்புக்
கூறுநிலை கச்சேரிச் சிறுப்பு மேலுங்
கொண்டிடுஞ்சீவ் கிளாக்கிவைதா மைந்தி ரண்டு

சேருமொரு நாலுநா லெட்டாண் டெல்லை
செப்பமுற நடப்பித்துத் துன்முகித்தே டொட்டாங்
காருமென வுபகார வேத னம்பெற்
றரியவிசை திசைவிளக்கி யமர்ந்த சீமான். (எ)

சிற்பரனை யருநடனச் சிதம்ப ரத்திற்
சென்றுதரி சித்தினிய தீர்த்த மாடி
யற்பகலா யருட்பாட லமுத மாந்தி
யரியசிவ புராணபட னத்தி னின்று
பற்பலரும் பணியுமரன் பத்தர்ப் பேணிப்
பாங்கினுறு முணவகைகள் பரிவி னீந்து
தற்பமகன் றிருஞ்சாத சாந்தம் பூண்டு
சைவசிகா மணியென்னத் தயங்கி நின்றோன். (அ)

மைந்தரையு மொக்கலையு மாபிற் பேணி
வழிவழிநம் முன்னோர்போல் வழாத வண்ணஞ்
சந்ததமுஞ் சத்தியவுத் தமமாஞ் சைவ
சமயத்தி னின்மினெனத் தகப்போ தித்தோன்
நொந்துபசி யுழந்தோரை நோயி னோரை
நுடங்கிடைமின் னாரைமறை நுவல்வாக் கோரைச்
செந்தமிழ்வா ணரைப்பசுவைச் சிசுவை யென்றுந்
திரிபறக்காத் திடுமினென்ற சீல வள்ளல். (கூ)

கந்தனிரும் புகழ்பாடுங் கவிஞ ரிந்தக்
கலியுகத்தும் பெரியரவர்க் காமி னென்றோன்
சிந்தைதிரி பற்றதனைத் தெய்வ மென்னத்
தேறுமினென் றின்னவுப தேசஞ் சொற்றோன்
முந்துதொட்ட நிலவளமு முடியாச் செப்பொன்
முதிர்வளமும் பெருமலைபோன் மொய்ப்பக் கண்டுஞ்
சிந்தையினிற் சிறிதெனினுஞ் செருக்க துமற்
செவ்வியரிற் செவ்வியனுஞ் சீலம் பூண்டோன். (க௦)

—இவை, முல்லைத்தீவு மயில்வாகனம்பிள்ளையைப்
பாடியவை

ஆசிரிய விருத்தம்.

தெய்வவெண் ணீறுபுனை யுஞ்ஜன சமூகங்கள்
ஜயஜய வெனப்பரவிடுங்
தேசிகோத் தமராம லிங்கவர நாமகுரு
செவ்விய தவத்துதித்தோய்
சித்தமலி னங்களையும் வித்தகதண் ணளியொழுகு
திருமுக ஸ்ரீமத்சதா
சிவகுரவ சம்ஸ்கிருத பாஷா வியுற்பன
சிரேட்டபண் டிதர்கடிலக

சைவவிப் பிரதுய்ய வம்சபூச் சியசாது
சங்கமத் தியநாயக
சற்குண விசாலவட பர்வத சவுந்தரிய
தங்கவிக் கிரகசொருப
தந்திர விதத்திலிய லக்ஷங் கிரந்த
தானதீ விரவிவேக
தக்கமா லக்ஷுமி விசாலவோ லக்கநிலை
தானெனத் திகழ்பொன்மனையோய்

பௌவநில மேவிய வுயிர்க்கிரு ளொளித்துமெய்ப்
பரசுக சிலாக்யமருள்வோய்
பத்தர்கள்சர் வாபீஷ்ட சித்தியடை யத்தினம்
பணியுகள சரணபத்ம
பரசிவப் பிரணீத நிகமாக மோக்தபிர
பலசைவ மதஸ்தாபன
பதிபாச பசுலக்ஷ ணச்சுத்த சித்தாந்த
பாஸ்கரசௌ பாக்யயோக்ய

வெவ்வழ லியாகமொ டொழுக்கமுத் தமபூசை
வேதாத்தி யயனநிலையோய்
மெத்திய புராணகா வியதர்க்க நாடக
வியாகரண மாபூஷண
மிக்கநான் மணிமாலை யொன்றுரைத் தேனதனை
மேதகுஞ் சபைகூட்டிமெய்
விழைவினிற் கேட்டுத் தரும்பரிசு செய்யிலிசை
மேலுலகி னும்பரவுமே. (க)

—இது, நவிண்டிற் சதாசிவக் குருக்களைப் பாடியது.

கட்டளைக் கலித்துறை

வரமா னியம்பதிச் சின்னத்தம் பித்துரை வள்ளல்செப்த
திரமா தவத்துற்ற நாகைலிங் கச்செல்வ சீர்த்திகிரிக்
கரமா தவன்மரு கன்முரு கன்மெய்க் கருணையின்மேற்
றரமாக வாழி மனைமக்க ளோடு தருஞ்சுகத்தே. (க)

—இது, மானிப்பாய் நாகைலிங்கபிள்ளையைப் பாடியது.

கட்டளைக் கலித்துறை

மன்னொத்த செல்வப் பெருவாழ்வி
னீரென்றும் வாழ்ந்திருக்க
வென்னொத்த பாவலர்க் கெய்திடு
மோதுய ரின்பவண்ணத்
தன்னொத்த சீர்ச்சின்னத் தம்பி
மகீபன் றவத்துதித்த
பொன்னொத்த மேனிப் புகழ்நாகை
லிங்க புரந்தரனே. (உ)

ஆசிரிய விருத்தம்

நிதிவாய்ந்த வண்ணையம் பதியினி லமர்ந்தின்ப
நிலவுற்ற கங்கைவம்ச
நிருபனம் பிகைபாக முதலிமுன் னளினி
னிரப்பிய பெருந்தவச்சீர்
நிகழ்தா வுதித்தருங் கல்விக ளெலாங்கற்று
நிலைகொள்குண முற்றுமேந்தி
நீதிதிகழ் டிஸ்திறீக் கோட்டுப் பிறக்றராய்
நேரற விருந்துபுகழ்மை
நீடுசின் னத்தம்பி மகிபன்முயன் மெய்ந்நோன்பி
னீர்மையி னுதித்தகுமர
நித்தியா னந்தபரி சுத்தபரி பூரணனை
நெஞ்சின்மற வாதவன்ப

மதிவாய்ந்த வரசுத்தி யோகநெறி வரும்வீர
வாகுவள் ளற்குமச்சீர்
வளரிளைய தம்பிமன் னற்கும் பிராத்திரிய
மாண்புக ழெலாம்படைத்து
மலிதருந் தண்ணளி வழிந்தொழுகும் விம்பமதி
வதனமா ராசயோக
மன்னிய சபாபதிப் பிள்ளைமுத லாம்புருஷ
மணிகளொ டுதித்ததுணைவ
மலையாள நகரினிற் சுப்பிறீங் கோட்டுக்கு
வழுவிலாச் ஜட்சுவான
வளநில விடும்புகழ்ச் செல்லப்ப பிள்ளைக்கு
மைத்துன முறைக்கேண்மையோய்

விதிவாய்ந்த வங்காள மருவுகல் லூரியினில்
விழைவொடிங் கிலிஷுகற்று
மேதகு கொழும்பிலுற் றரிதுறு பரீக்ஷையினில்
விலகாது சித்திபெற்று
மெய்ம்மைவள ரத்துவக் காத்தாகி யாழ்ப்பாண
மேவிய மகாபண்டித
மேன்மைவளர் சாதுசன சங்கபரி பாலன
மிகும்பல நிதிப்பொலிவினோய்
மெலிதருந் தீனசன ரட்சகவெம் மேன்மையும்
விரிந்துள பெருங்கிளையினோய்
மேதினி மதிக்குமகௌ தாரிய வருங்கலை
வினோதவித் தகவிவேக

துதிவாய்ந்த செங்கமல லட்சுமி விலாசவதி
சோபித மதாணிமரும
துணர்குலவு பைங்குவளை யந்தொடையும் வித்வசனர்
சொற்றொடையும் வளர்புயத்தோய்
சொல்லுமன முங்காய மும்பகிர் வுறுதவதி
துய்யசற் புருஷதிலக
தோற்றமுறும் யௌவன சவுந்தரிய கந்தர்ப்ப
துங்கவிக் கிரகசொருப
துரைமக்கள் பலர்புகழு நாகலிங் கேந்திர
சுகம்பெருக வாழிகண்டாய்
சுவைபெறுகவித்தொடையைமகிழ்வொடுபுனைந்துமிகு
சொர்ணமினி தீந்தருள்கவே. (௨)

—இவை, வண்ணை நாகலிங்க பிள்ளையைப் பாடியவை.

ஆசிரிய விருத்தம்

சொன்னநக ரென்னவெழின் மன்னிடுந் தொன்மை
சுன்னையம் பதியில்வாச [கிளர்
சுத்தமன வள்ளல்சின் னத்தம்பி முன்செய்த
தூயதவ மன்னமைந்த
மன்னியுள புண்ணியமெ லாநிரப் பித்தான
வாய்ந்தம்மே னாட்டிலுற்ற
மாதரசி யோடுதிரு வள்ளுவர்முன் னோர்நூலின்
வண்ணமாய் வாழ்ந்தசெல்வ
தென்னரென வான்கவிப் புலவரைப் பேணியெண்
டிசையுமிசை வைத்தசீல
சிவசமய பத்தித் தவக்கைவேற் பிள்ளாய்
தியாகசந் தோகசுமுக
மின்னிலகு வேலன்மேற் கீர்த்தனம் விளம்பினேன்
மேலோ ரதற்குநாளும்
விழைவினிதி யுதவல்போ னீயுமுத விக்கந்தன்
மெய்யருட் பேறடைவையே. (௧)

கலித்துறை

சின்னாளி னின்னிளை யோனிட
நின்னிடஞ் சேர்ந்திடுவேன்
மன்னார்வ மாய்நுங் கனத்துக்குத்
தக்க வணம்புரிமி
னெந்நாளு நிற்பது பாவலர்க்
கீயு மிரும்புகழே
மின்னார் பொழில்பயில் சுன்னாக
நாயக வேற்பிள்ளையே. (௨)

எத்தனை யோபெருஞ் சீரடைந் தாலு மியற்கவிக்குச்
சித்த மகிழ்ந்துத வுஞ்சீரைப் போலச் சிறப்புறுமோ
சுத்த மனச்சுப் பிரமணி யச்செல்வ சுன்னைநகர்ச்
சித்தச னேசின்னத் தம்பி தவபுத் திரமணியே. (௩)

நின்னோடு கொண்ட பிராண சினேகத்தை நெஞ்சமகிழ்ந்
தென்னோடும் வைத்த சரவண முத்தண்ண லென்கவிக்குப்
பொன்னோடு தந்தன வோதிசை யெட்டும் புகழநின்ற
.... (௪)

—இவை, சுன்னாகம் வேற்பிள்ளையைப் பாடியவை.

கலித்துறை

முன்னங் கணக்கில் வரைந்த
பணத்தை முறைநின் றிட
வின்னந் தராதது மேனெறி
யோமுரு கேசவள்ளால்
பொன்னம் பலவள்ளன் மைந்தா
தயாநிதிப் புண்ணியநற்
றென்னம் பொழில்பயில் கொக்குவிற்
சைவ சிகாமணியே. (௧)

பணத்தை யனுப்பக் கருத்தில்லை
யேலுய்த்த பாட்டையந்தக்
கணத்தி லனுப்புத லூனே
பெருநெறி காண்டகுசீர்க்
குணத்தி லுயர்ந்த முருகேச
மாரன் குறைவறுமா
மணத்தி னிமிர்குவ ளைத்தொடை
வாகு வரோதயனே. (௨)

உன்போலுந் தக்க வளச்செல்வர்
வாழ்வி லுறையவென்று
மென்போலும் பாவலர்க் காமோ
குறைக ளொழிலுவனை
மன்போலுஞ் சீர்ச்சுப் பிரமணி
யச்செல்வன் மைந்தவண்ணைப்
பொன்போலு மேனிச்சின் னைய
மணியப் புரவலனே. (௩)

மூத்தீ ரறிவி லிளையீ
ரியாண்டினின் முத்துத்தம்பி
மாத்தீர வீரசிங் கச்செல்வ
வென்னொடு வைத்தவன்பு
நீத்தீர் கோலோவொளி வட்டமெங்
கேதின நீண்டதுண்மை
காத்தீ ரலீரென் றிடோமென்னை
யோநுங் கருத்தினிதே. (௪)

—இவை, கொக்குவில் முருகேசபிள்ளையைப் பாடியவை.

ஆசிரிய விருத்தம்

துன்னலை நகரினிற் றிருநீல கண்டனூர்
தோன்றிய திருக்குலத்துத்
தோன்றிமெய்ச் சைவசம யாசார மோம்பிடுந்
துங்கப் பெரும்பத்தியீர்
பின்னா ளுயிர்த்துணை யெனத்தரும தானங்கள்
பிறழ்வற நடாத்துமுறையீர்
பேணியில் வாழ்வினை யெனைவரு மதித்திடப்
பிழையுறு வகைபுரப்பீர்

கொன்னார் புராணங்க ளமையங்க டோறுமுற்
குழைவுற வினாவுமளியீர்
குறைவகல நித்யாதி நன்னரி னடக்குநுங்
கோவிலி லெழுந்தருளிய
முந்நாலு கரமுடைக் குழகன்மே னான்சொன்ன
முதிர்சுவைப் பாடலுக்கு
முகமக மலர்ந்துநிதி யுதவிநீ டூழியம்
முதல்வனரு ளால்வாழ்மினே. (க)

—இது, துன்னாலை வேட்கோவரைப் பாடியது.

கலித்துறை

வாசா னவிகுலச் செல்வாமெய்ம் மங்கல வாழ்வுபெற்றாய்
சரசாலை வாச திருஞான சம்பந்த தாங்குகொடி
முரசா னிகர்சுப் பிரமணி யன்மைந்த முத்தமிழுக்
கரசாயி னோர்கவிக் கீவார்கட் கேயென்று மாமின்பமே.

—இது, சரசாலைத் திருஞானசம்பந்த பிள்ளையைப் பாடியது.

வெண்பா

பரம னருளம் பலமுதலி நீயப்
பரமனிடப் பாலிருக்கும் பாவை—திரமுறவே
யப்பனுட னம்மையுநீ ராயே பிளைநானன்
றிப்படியிற் சீவரெலா மே. (க)

—இது, தாயார் கதிராசிப்பிள்ளையைப் பாடியது.

ஆசிரிய விருத்தம்

குலமேவு மேன்மைகலை யறிவாதி நிலையான
குடிபதிகள் வாழுமாணைக்
கோட்டைநகர் வாழ்கின்ற முத்துக் குமாருவாங்
குலதிலக மானடக்ற

நலமேவு சீர்வயித் தியநாத வுடையார்கமெகார்
நந்தன கொடைக்குபேர
நாயக னடித்தொண்டு மறவாத பத்திமையெந்
நாளுமற வாதசீர
சலமேவு குவளைமலர் மாலையணி மார்பனே
சற்சன சமூகசங்க
சமையத்தி லுயர்சைவ நிலைநீறு டக்கமணி
சந்ததம் விடாததுங்க
நிலமேவு நின்பெருமை பலருமுரை யாடுவது
நெஞ்சுறக் கேட்டுவந்தேன்
நேயத்தி னாலுதவி செய்துமனை மக்களொடு
.... (க)

கலித்துறை

ஆமாரி யென்னக் க............... பாடி யலுத்தலுத்து
நாமா ரினுமன மோய்ந்தே துயருற நாளிற்குலக்
கோமான் பெரிய வயித்தியர் முத்துக் குமாருவிடம்
போமா ரினுஞ்சிறப் பீரென்று சாற்றினர் புண்ணியரே.()

முன்னாட் புலவரை யாதரித் தேநின்ற மும்மன்னரு
மிந்நாளி னின்னுருப் பெற்றிருந் தேயவர்க் கீவதனைச்
சொன்னா ரியானுந் துணிந்துவந் தேனவர் சொற்றபடி
பின்னாண் மறுக்கப் பெறாதே குடியிற் பிறந்தவரே. (௩)

ஊர்பெயர் சாதி யறியா திரங்கி யுடற்பிணியை
நார்பெற வேற்ற வவுடத மீந்துசின் னாளினிலே
சீர்பெற நீக்கிடும் வல்லபம் போலவென் சிந்தனைநோய்
பேர்பெற முத்துக் குமாரு வயித்திய பேணுதியே. (௪)

வெண்பா

முத்துக் குமாருவெனு முன்னும் வயித்தியனைச்
சித்துருவா மாறுமுகத் தேவருளால்—வைத்தானே
யொற்கப் பிணியு முடற்பிணியு நீக்கவென்று
பொற்கமலப் புத்தேள் புரிந்து. (ரு)

—இவை, ஆனைக்கோட்டை முத்துக்குமாரபிள்ளையைப் பாடியவை

ஆசிரிய விருத்தம்

அன்பேறு மடியவ ரகத்தூற் றரும்பியிடு
மானந்த வமுதமாகி
யரியவினை நோய்க்கொரு மருந்தாய்ச் சிருட்டிமுத
லைந்தொழி லியற்றுமிறையா
யாருயிர்க் குயிராய் விளங்கியிடும் வேன்முருக
னடிகண்மற வாததொண்ட
னளவில்கலை வல்லசிவ சம்புநா மப்புலவ
னுய்வுற வரைந்தமாற்றம்
இன்பேறு சானவி குலோத்தம னருந்தமிழு
மிங்கிலிசு முற்றுணர்ந்தோ
னிறைவர்கண் மதித்திடு நியாயபண் டிதனமல
னெரிகட் படாதமதன
னேற்றமுறு சுத்தசிவ மார்க்கத்தி லுள்ளவிதி
யென்றுமொரு வாதநிலையோ
னெழில்வள மலிந்திடு புலோலிநக ரான்றிசையோ
ரெட்டினு நிறைந்தபேரான்
றுன்பேறு மிடியினர்க் கன்னமுஞ் சொன்னமுந்
தூசுமரு ளுந்தகைமையோன்

றுகடபுந் துய்யகவி மாலையுங் குவளையந்
தொடையுமிடை யும்புயத்தோன்
றென்மரபு தவிராத நாகநா தக்குரிசி
றாயநோன் பாலுதித்தோன்
றுங்கமெய்ச் சுகுணமயில் வாகனப் பிள்ளையுட்
டோன்றுமகிழ் வோடுகாண்க
வன்பேறு திகிரிப் படைக்கல மமர்ந்தகர
வல்லிபுர மாயவற்கு
வாய்ப்புற விழைந்தெழுதி விட்டகடி தத்துள்ள
மாண்பொரு ளெலாமடக்கி
மன்விருத் தத்தினொடு தக்ககலி வெண்பா
வகுத்தன னிணக்கமாக
வான்பொருள் பலப்பல வனுப்பிமேன் மேற்பெருகும்
வாழ்வினி விருந்திடுகவே. (க)

கலித்துறை

தென்னவ னன்று புலவருக் கீந்த சிறப்பதுபோன்
மன்னவர் மெச்சு மயில்வா கனப்பிள்ளை வல்லிபுரப்
பொன்னணிமார்பற்குப் பாடல்செய்வித்துப் பொருள்பலவு
நன்னய மாகத்தந் தூழிமட் டும்புகழ் நாட்டினனே. (உ)

—இவை, புலோலி மயில்வாகனப்பிள்ளையைப் பாடியவை

கலித்துறை

கற்றுரைக் கற்றவர் காமுறு வாரெனக் கண்டமொழிக்
குற்று யிலக்கிய மாகவென் பாவை யுவந்துகவி
சொற்றுய தென்றலைக் கண்ணது னண்பு தொடர்ந்து [கொண்டேன்
மற்று ரெனக்கிணை தாமோ தரேந்திர மன்னவனே.

—இது, ஏழாலைத் தாமோதரம்பிள்ளையைப் பாடியது.

வெண்பா

பிலவவிடை யொன்பதுமால் பிண்டியின்முற் பாலி
னிலவிபீடு பஞ்சமியி னேர்ந்தான்—குலவு
பெருமை கிளர்சுப் பிரமணிய வள்ள
லருமை வளர்சிவலோ கத்து.

ஆசிரிய விருத்தம்

மதிமேவு செஞ்சடைக் காட்டலை புரட்டியெழு
மந்தா கினிப்புனிதமான்
வழிவந்த ஞான்றுமுத லின்றளவு மொருமறுவு
மருவாக் குடிக்கதிபனாய்
வரிசையதி காரநிதி மாநீ யங்கல்வி
வான்மைமலி சைவபக்தி
வாய்ந்தவம் பலவாண முதலிமுன் னூற்றிய
மகாதவத் துற்றகுமரன்
மன்னனரு ளம்பலப் பெயர்முதலி யாங்தென்னன்
மகிழ்வினுக் கியல்பவுத்ரன்
மயில்வா கனத்துரையு மருளம் பலத்துரையு
மனமகித் திடுகனிட்டன்
மாண்புகிளர் நீதியி லோங்குமம் பலவாண
மகிபனுக் கினியமருமான்
வரதவம் பலவாண முதலியாம் பிரபிதா
மகனிலுங் காட்சிபெற்றோன்.

துதிமேவு வளமருவு சாமிநா தக்குரிசி
றோன்றல்சுப் பிரமணியனார்
சுதைசிதம் பரவல்லி மாதரும் வல்லிநிலை
தொலைவுறுக் கற்புவல்லி
தொழுதகு தவஞ்செய்த தவவல்லி மருகியாய்த்
தோற்றமுறு கயிலாயவுத்
துங்கமக னைசுப் பிரமணிய வேடந்த
சுகுணபூ ஷணவஞ்சியாய்த்
தோடகத் திருவனைய சின்னாச்சி யெனுமன்னை
சுகவகட் டினிலுதித்தோன்
சுவைகுலவு தண்டமிழு மிங்கிலிஷு மாபுளித்
துகடபக் கற்றநிபுணன்
சுடர்முடி புனைந்தமாங் தாதா வெனப்புடவி
சொல்லியிடு மேற்றமுற்றோன்
சுகவரிக் காமனும் பெண்மையை யவாவிடுஞ்
சுந்தரத் தெய்வவடிவன்.

விதிமேவு கதிரைவேற் பிள்ளைதரு மடமயிலை
வேட்டொர்மக னைப்பயந்தோன்
மேத்திய நிறைந்தவெண் டிருநீற்றி னொளியென்றுமா
விரவிய விசாலநுதலோன்
வேலுடைத் தெய்வசர வணபவசண் முகனையே
வேண்டித் தினம்பணிகுவோன்
வெள்ளிவிர தந்துலைச் சட்டிவிர தத்தினை
விருப்புற வனுட்டித்தவன்
விரிபுக ழுடுப்பிட்டி யிருவாலை கோப்பாய்
விளங்கியிடு முடுவில்சுன்னை
விளைவுகிள ருங்கந்த ரோடைமுத லூர்தோறு
மேவிய கிளைப்பொலிவொடு
வியனிலத் தொகைகளும் பலதிறக் குடிவகையும்
வீடுகளு மென்றுமுடையான்
வெம்பசியி னைந்திடு மாதரைப் பாலரை
விருத்தரை விடாதோம்பினோன்.

திதிமேவு மன்னரு மதித்திடுந் தொன்மைவளர்
செல்வப் பெருஞ்சீரினன்
றேறனெழுகு பரிமளத் துணர்குலவு முற்பலத்
தெரியனில வும்புயத்தான்
றிணிதருங் கல்லையு முருக்கிடுஞ் சுகவளத்
தித்திப் பருமொழியினன்
றேடியெங் கட்கென்று முதவிகள் புரிந்திடுஞ்
சித்தசுத் தக்களியினன்
செறிதருஞ் சோடச கலாமதியும் வெள்கிடத்
திகழ்முகத் தண்ணளியினன்
சிவனடிய வர்க்கினிதி னறுசுவை யுணவகை
தினம்பரிவி னுதவுதொண்டன்
செவ்வியர் மதித்தசுப் பிரமணிய வள்ளலிச்
செகநகையை முற்றுவித்தும்
செப்பாக நிலைவீறு தவயோகங் களியூறு
சிவலோக மேறினனே.

கலித்துறை

தேடிவந்தென் மனைப் பாங்கொரு காணியைச்சேர்த்துத்தந்துண்
ணீடிய வின்பக் கடலினுள் மூழ்கிய நின்னுயிரும்
வீடிய தோசுப் பிரமணி யச்செல்வ வேறினியென்
வாடிய நெஞ்சினைத் தேற்றிட யாவர் வருகுவரே.

யார்க்குஞ் சொலாவந் தரங்கங்கள் யாவு மெனைப்பலகா
லூர்க்கு வரவழைத் தோதிய நின்மெய் யுறுபிணியைப்
பார்க்கு மதற்கிய லாதிங்கு நானும் படருழந்தேன்
சீர்க்குமு ஞசுப் பிரமணி யாகுல சேகரனே.

சந்தார் புயச்சுப் பிரமணி யாபசி தாக்கநொந்து
வந்தாரை யின்புற நோக்கியு ணூத்தர மந்தநகை
தந்தா றிடத்தண் ணளிவெள்ளத் தாட்டுநின் சந்தமலர்ச்
செந்தா மரைமுகங் காண்ப தினியெந்தச் சென்மத்திலே.

பெருகா தரமுடைத் தம்பீ யருட்சுப் பிரமணியா
வருகாநன் றேக்குநின் மென்னகை யுங்கட்டி யாமொழியும்
திருகாத நீதியுந் தண்ணளி வாய்ந்த திருமுகமு
மொருகா லமும்பிரி யாமலென் னெஞ்சி னுலாவருமே.

குலத்தி னுயர்வினைக் கூறிலிந் நாளிற் குவளைப்பொற்றே
னுலத்தின மேயென்பர் யாரையு மேனவு மொத்தபண்பே
வலத்தி னுயர்சுப் பிரமணி யச்செல்வன் மாண்புமுற்றத்
தலத்தி லுயர்ந்த பழையோர் குழுவிற் றயங்கிடுமே.

தெள்ளமு தேசுப் பிரமணி யச்செல்வத் தீங்கரும்பே
தள்ளருந் தண்ணளி வெள்ளந் ததும்புஞ் சலசமுக
வள்ளலை நீயிறந் தாயென் றெழுந்ததொர் வன்சொலென
லுள்ளமுற் றுஞ்சுட்ட தாவா தரிப்பரி துன்பிரிவே.

சங்காழி யங்கைப் புயன்மரு மானிணைத் தாளிற்பத்தி
மங்கா நிலைச்சுப் பிரமணி யச்சைவ மாமணியை
யிங்கா னவாயு ணடுவினிற் கொன்ற விருள்வடிவ
வெங்கால நஞ்சை நடுவனென் றியாவர் விளம்பினரே.

ஆவாதம் பீசுப் பிரமணி யாநின் னருங்குழந்தை
யோவா தழமனை யாளழத் தம்முனை யோவென்றழத்
தாவாத மக்க ளழத்தங்கை மாரழத் தாயழநீ
மேவாரின் வன்கண்ணை யாய்த்துஞ்சு கின்ற விதமெவனே.

ஆரா ரிறந்த துயரு மொருபடி யாறிடலாம்
பேராத வாசகச் சீமா னருட்சுப் பிரமணிய
னீராருங் கங்கைகு லாதிபன் மாய்ந்த கொடுந்துயரந்
தீரா தவனந் தரங்கவன் பிறப்பட்ட சீரியர்க்கே.

எனக்காரு மேன்மைக ளெல்லா நினக்கென வெண்ணிமகிழ்
பனக்காத லாசுப் பிரமணி யச்சைவ மாணிக்கமே
சினக்காலப் பாவி நினதாவி கொண்டிடச் சேர்ந்திடும்போ
துனக்கா ரருள்செய வந்தில னேமயி லாரையனே.

பின்னைக் கிசைந்த மணிமரு மச்சுப் பிரமணியா
முன்னைத் தொடர்பு மறவாச்செல் வாவொரு முட்டுமின்றி
நின்னைத் துணையெனப் பற்பக னம்பி நெடிதிருந்த
வென்னைத் தனிவைத் தகன்று யினித்துணை யாரெனக்கே.

— இவை, கோப்பாய் அ. சுப்பிரமணியபிள்ளையின்
தேகவியோகத்தைக் குறித்துப் பாடியவை.

எண்சீர் விருத்தம்

மங்கைநா யகிக்குத் தங்கைமா தரசா
மருவுற்ற கதிராசிச் சசியா மானைத்
துங்கமயில் வாகனவேள் வேட்டுத் தன்பேர்
தொடரந்தத் துறக்கொண்ட துரைமா ணிக்கம்
மங்கலரத் தினமுத்தா மைந்த ரோடு
வடவுடுநேர் பறுவதவர்த் தனிச்செய் யாளைச்
செங்கைதங்க வளைக்கணிசெய் சிவக்கொ ழுந்தைத்
திருத்தியமெய்த்தவத்துதவிச்சிறந்தான்மன்னே. (க)

எதிலார் சிறப்பினழுக் கறல்யார்க் கேனு
மீந்ததனைப் புறத்திசைத்த லிரப்போர்க் காய்த
லேதிலார் மங்கையர்கற் பழித்த லெய்த்த
வெளியவருக் கிடரிழைத்த லினத்தை நீத்த
லேதிலார் பொருள்புணர்ப்பிற் கவர்த றீமைக்
கெலாமுதலாம் பரிதான மேற்றல் பொய்யோ
டேதிலார் வசையுரைத்தன் முதலா நீங்கி
யிலகிடுஞ்சற் சனசங்கத் திறைவ னானான். (உ)

யாமேதொன் மரபுதித்தோ மேவ லோரு
மெய்துகின்று ரரசர்மதிப் பெல்லா முற்றோந்
தோமேது மிலோமென்று புணர்ப்பி னீட்டித்
தொகுத்தநிதிச் செருக்காற்றந் தொன்மைப் புன்மை
யாமேது மறந்துமனம் போலக் கண்ணு
மறவிருண்ட நரக்கடிக ளாடற் கஞ்சிக்
கோமேனல் லவர்கடலை குனிக்க வோமெய்க்
குலக்கொழுந்து பரலோகங் குடிகொண் டானே. (ங)

செய்மைக்கண் ணுறைவோ ருள்ளுநில வாழ்வோர்
செல்வர்குலத் தினரென்னுந் தரத்தர் யாரும்
வாய்மைக்கண் ணுறுமயில்வா கனமா ராசன்
மனையிலுள்ளா ருண்ணுரென்று வழங்கு வாரார்
பாய்மைக்கல் லோலவுந்திப் படியி னல்லோர்
படுதரசிங் தாமணிவாய்ப் பகரு மின்னேன்
ஆய்மைக்க ணிறைந்திடினும் பிறர்தம் வீட்டிற்
றுய்த்தசொல்லே யுலகினிலாச் .... (௪)

உன்னிடுஞ்சீ ரிருவாலே கோப்பாய் கந்த
ரோடைசுன்னை யுடுவிலுடுப் பிட்டி யூரின்
மன்னியதன் காணிகளில் வைகு மாக்கள்
வழுக்களியற் றிடினுமதி கொளுத்தி மாற்றி
யின்னலுற வவரையெழுப் பாம லெவ்வெவ்
விடர்ப்பிணியுற் ருலுமவைக் கியல வாற்றி
யன்னவர்க ளிணங்கியிறை யீப வற்றை
யலமலமென் றேற்குமரு ளாழி யன்னன். (௫)

இந்திரன்மண் ணிலம்புரந்த விறைவ ரில்லத்
தேந்திழையா ரோடுபட்ட விழிபுங் கேட்டுச்
சந்தவட மேருநிகர் தனத்து வாழ்ந்த
சால்பினர்கள் பட்டபெருந் தளர்வுந் தேர்ந்தோ
மிந்தமயில் வாகனமா லிருங்கு லத்தி
லிருந்தவர்க ளிருக்கின்றா ரிணைந்தொற் கத்தாற்
றந்தமுடன் மெலிந்தோர்கள் சைவா சாரந்
தணந்தவர்க ளிவரெனவார் சாற்று வாரே. (௬)

எய்துநிதி பெருதுமஸ் திருத்து வாகி
டிஸ்திறிக்கம் மிற்றிக்கங்க மாகித் தீமை
செய்துழலுந் துட்டரைநிக் கிரகஞ் செய்து
சிட்டபரி பாலனத்திற் சித்தந் தேறி

மெய்தழுவு நட்டவர்பான் மேவு மல்லல்
விலக்குபுநட் டுப்புறத்து வியர்க்கும் வெய்யோர்
கைதவனச் சுப்பகைமை வெளிவிட் டென்றுங்
கனவினிலுங்களித்தொழுகுங் காட்சித்தாயோன். (௭)

பாட்டனவன் சேட்டனிவர் நடுவில் வந்த
பைந்தொடிதந் தருண்மைந்த னவன்கொ ழுந்தன்
வாட்டனுவோர் நான்மைக்கு முயிரோன் ருகி
வாழ்ந்ததிறத் தோமயில்வா கனக்கோன் றன்னை
வீட்டளியா ரிளையவரோ டொன்றி வாழ்ந்த
வியல்பினவர் தருமக்க டனது மக்கள்
வாட்டமறு மருமக்க ளொன்றி வாழ
வைத்தநிலை வியவாவித் தகர்கள் யாரே. (௮)

கற்றவர்க ளில்லியற்குக் காட்டு நோற்குங்
கற்புக்கு மொருபெருங்கட் டளையாய் நின்று
முற்றவிருந் தண்ணளிமொய்த் தொழுகுஞ் செய்ய
முகக்கதிரா சிச்செல்வ விழுச்சீர்க் கண்டப்
பொற்றணிமங் கலத்திருநாள் போன வாறு
புவிமயின்மங் கலநாணும் போகா வண்ண
மற்றவனின் னுயிர்மக்கள் பின்னோர் மக்கண்
மருமக்கள் புரப்பதுதொல் வழிமாண் பன்றே. (௯)

கலித்துறை

சிங்கார மாதியெ லாமொத்த
கொண்கரைத் தேவியரை
யங்கார ணன்மலர்க் கையாற்
படைத்த வரும்பயில்வாற்

பைங்காவி மாலை மயில்வா
கனனைமெய்ப் பன்னிமின்னை
யிங்காரு மேத்தப் படைத்தானென்
றாற்சங்கை யார்சொல்வரே.

அம்பல வாண முதலி
முதன்மைந்த னாமிவ்வண்ண
னம்பல வாணத் துரைமரு
மான்கலை யாய்ந்தவரு
ளம்பல வாண முதலிதன்
பேர னவனைத்தந்த
வம்பல வாண முதலி
மரபுக்கோ ராதித்தனே.

முத்துக் குமார னிருமைந்த
ருங்குல முற்பலவு
மொத்துப் பொலிந்தன ரேனு
மவர்தம் முயர்வென்னையோ
சித்தத் திரிபு தவிர்மயில்
வாகனச் செல்வனுக்கு
மைத்துன ரானவன் றேபல
தோற்றமு மன்னினரே.

எத்தனை தான்பட்ட மாநாகை
நாத விறைபெறினு
மத்தனை பட்டமும் பட்டங்க
ளோவிவ் வருமைத்துரை

வித்தகர் போற்று மயில்வா
கனச்செல்வ வேந்தனுக்கு
மைத்துன னாகிய பட்டத்தி
னால்வந்த மாண்புகளே.

மெலியார்க ளெங்கு மிடர்க்குட்
படாமல் விலக்கிவைத்து
வலியார்வலிய கடுந்தண்ட மெய்தவொட்
டாவகை மாற்றியுளஞ்
சலியா வகைநெறி போதித்துக்
காத்த தயாநிதியார்
கலியா ருலகின் மயில்வா
கனற்குக் கடுப்பெவரே.

வெண்பா

மயில்வா கனச்சீமான் மாய்ந்ததென்னார் வானில்
வெயில்வா னவன்றான் விளிந்தின்—றயில்வாய
சூலக் கரத்தரனார் தொல்லுலகுற் றானென்றார்
சாலக்கற் றாரெடுத்துத் தாம்.

கம்பன் முதலோர் கவிக்கு மளவுபடா
தும்ப ருறுவ துணர்ந்துமுந்தி—யம்புவியாள்
சீலமயில் வாகனமால் சீரிசைக்க நான்மழலைப்
பாலருமே யேயென்பார் பார்த்து.

மாராசன் கோப்பாயில் வாழ்ந்தமயில் வாகனச்சீர்ப்
போராளன் மாட்சிப் பிரபந்த—நீராருங்
கும்பக் குறியோன் குரவனுக்காட் பட்டசிவ
சம்புப் புலவனுரைத் தான்.

கண்ணுஞ் சவுமியசிங் கத்திருபான் காரிபிற்பா
லெண்ணியிடும் பஞ்சமியில் யார்க்குமிதம்—பண்ணுமயில்
வாகனமா ராசன் வரம்பிலின்பம் வாய்ந்தசிவ
லோகமுற்றான் பூவாழ் வொழித்து.

கலித்துறை

தோற்ற முதலிய வெல்லாத்
திறத்தினுஞ் சோர்வொன்றின்றிச்
சாற்றிடி னீன்றவர் தாங்க
ளிதரே தரவணிக்கிங்
கேற்ற விலக்கிய மாணர்கண்
மைந்த னிவனுமன்னோர்
மேற்றக நோற்ற தவத்திறங்
காட்டிய வித்தகனே.

இறந்தா ரெவரையு மில்லாப்
புகழ்ச்சி யெடுத்துக்கவித்
திறந்தா னுரைத்தத னாலீது
மற்றெனச் செப்புவரே
யறந்தா னுருக்கொண் டனமயில்
வாகன வண்ணன்மெய்ச்சீர்
துறந்தாரு மேத்துவர் நாஞ்சொலிற்
பொய்யெனச் சொல்லுவரே.

இது, கோப்பாய் அ. மயில்வாகனத்தைப் பாடியது.

34661